# ஆறாத வடு



முருகையா சதீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாத வடு

முருகையா சதீஸ்
(கவிஞர் முல்லை)

தமிழியற் கழகம்
வெளியீடு - 07
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல் விபரப் பட்டியல்**

தலைப்பு : ஆறாத வடு
இலக்கிய வகை : நாவல்
ஆசிரியர் : முருகையா சதீஸ் (கவிஞர் முல்லை)
பதிப்புரிமை : ஆசிரியருக்கு
பதிப்பு : முதற்பதிப்பு - தை, 2023
வெளியீடு : தமிழியற் கழகம், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
அச்சுப்பதிப்பு : குரு பிறிண்டேர்ஸ்,
இல 39, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
ISBN : 978-624-99407-3-4
பக்கங்கள் : ix + 104
விலை : 650.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இறுதிக்கட்டப் போரில்
அகதிகளாய் வந்த பல இலட்சம் மக்களின் குருதிக்கறையேற்று,
கண்ணீரால் நனைந்து,
அவர்தம் வலிசுமந்த
**முல்லை மண்ணுக்கு...!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

முருகையா சதீஸ், திருகோணமலை மாவட்டம் திரியாய்க் கிராமத்தைப் பூர்வீகமாகவும் முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் கொண்டவர். 1990களில் ஏற்பட்ட போர்ச்சூழல், திருகோணமலை மாவட்டத்திலிருந்த பழம்பெரும் கிராமங்களை நேரடியாகத் தாக்கியபோது, இவர்கள் ஏதிலிகளாக முல்லைத்தீவு மண்ணுக்கு இடம்பெயர்ந்தனர். இந்த இடப்பெயர்வு பலருக்கு நிரந்தரமானதாகவே மாறி, அவர்கள் தமது பூர்வீகக் கிராமங்களை இழந்து, முல்லைத்தீவின் பல்வேறு பிரதேசங்களிலும் நிரந்தரமாகவே வாழ்விடங்களைத் தேடிக்கொண்டனர். சிலர் அண்மைக்காலத்தில் தமது சொந்த மண்ணில் மீளவும் குடியேறி இருக்கின்றார்கள். இவ்வாறானதொரு குடும்பச்சூழலில் பிறந்து வளர்ந்து, கல்வி பயின்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்தான் முருகையா சதீஸ். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்றதுடன் தமிழ்த்துறையில் உதவி விரிவுரையாளராகவும் பணியாற்றிய அனுபவம் பெற்றவர்.

பாடசாலையில் படித்த காலத்தில் ஏற்பட்ட இலக்கிய ஆர்வம், பல்கலைக்கழகத்தில் அவரை இலக்கியப் படைப்பாளியாக உருவாக்கியிருந்தது. நாவல், கவிதை என அவரது ஆக்கங்கள் உள்நாட்டு வாசகர்களுக்கு மட்டுமன்றி வெளிநாடுகளில் வாழும் இலக்கிய ஆர்வலர்களுக்கும் அறிமுகமாகின. அந்த வரிசையில் தற்போது வெளிவருவது "ஆறாத வடு" என்னும் தலைப்பிலான அவரது கதைகூறும் இலக்கியம். இது கதை கூறுபவனின் வரலாறு போலவே ஆரம்பித்தாலும் ஒரு இனத்தின் வரலாறாகவும், தனியொருவனுக்கு ஏற்பட்ட காயத்தின் வெளிப்பாடில்லாமல் ஒரு இனத்திற்கு ஏற்பட்ட ஆறாத வடுக்களின் வெளிப்பாடாகவுமே அமைகின்றது.

2009 வைகாசி பதினெட்டாம் நாள் - அன்றுதான் முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுற்றதாக அறிவிக்கப்பட்ட நாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நாளிலிருந்துதான் கதை ஆரம்பிக்கின்றது. முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்த மக்கள் அனைவரும் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் கொடிய யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்கித் தவித்ததும், உண்ண உணவோ குடிநீரோ இல்லாமல் உயிருக்காகப் போராடியதும், ஆயுதந் தரித்தவர்களால் துன்பப்பட நேர்ந்ததும் இங்கே கதையாகக் கூறப்படுகின்றது. பலவந்தமாக யுத்தத்தில் இணைக்கப்பட்டு உடல் சிதறிப் பேழையில் வந்த பாலகனைப் பார்த்து, பற்றியெரிந்த பெற்றவளின் கண்ணீர் இங்கே பதிவுசெய்யப்பட்டுள்ளது. பேசாப்பொருளாய்ப்போன பெற்றவளின் அவலக்குரல் இங்கே பேசப்படுகின்றது. இது சமூக யதார்த்தத்தின் வெளிப்பாடு. இவை தவிர நலன்புரி முகாங்களில் மக்கள் அனுபவித்த துன்பங்கள் அதற்குள்ளும் வசதியானவர்களின் வாழ்வின் ரகசியங்கள் பலவும் இங்கே பேசப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. எவ்வாறாயினும் இது ஒரு தொடக்கம். இதுபோல இன்னும் பல படைப்புக்கள் வெளிவர வேண்டும். இது தோற்றுப்போனவர்களின் வரலாறாக இருந்தாலும் வெற்றி எது என்பதைக் கண்டு தெரிந்துகொள்ள இதுபோன்ற படைப்புக்கள் இன்னும் வெளிவர வேண்டும். முருகையா சதீஸின் முயற்சி பாராட்டப்பட வேண்டியது. உனது எழுத்துக்களுக்காக வாசகர்கள் காத்திருப்பார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. எழுது... எழுது... எழுதிக்கொண்டேயிரு. எதிர்காலம் உனதாகட்டும். வாழ்த்துக்கள்.

**பேராசிரியர். ம. இரகுநாதன்,**
*சிரேஷ்ட பேராசிரியர்,*
*தலைவர் - தமிழ்த்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
***13.01.2023.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

கவிஞர் முல்லை என்னும் புனைபெயரைக்கொண்ட முருகையா சதீஸ் அவர்கள், திருகோணமலை: திரியாய்க் கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் தன்னை, விரிவுரையாளராக, கவிஞராக, சிறுகதை - நாவல் ஆசிரியராக, ஆய்வாளராக, பதிப்பாசிரியராகப் பல தளங்களில் நிலைப்படுத்திக்கொண்டவர். "ஆறிப்போன காயங்களின் வலிகள்" (2021) - கவிதைத் தொகுப்பு, "ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் இனமுரண்பாடு" (2022) - ஆய்வுநூல், "தமிழில் இலக்கியத் திறனாய்வும் ஈழத்தில் அதன் வளர்ச்சிப் போக்கும்" (2022) - ஆய்வுநூல், "கண்ணீரில் கரைந்த தேசம்" (2022) - நாவல் முதலின, இதுவரை வெளிவந்துள்ள இவரது நூல்களாகும். அதுமட்டுமன்றி வே. தில்லைநாதனின், "அவளுக்கு ஒரு கணவன் தேவை" (2022) என்னும் குறுநாவலின் பதிப்பாசிரியராகவும் திகழ்கின்றார். இதுவரை சுமார் 20க்கும் மேற்பட்ட இவரது ஆய்வுக்கட்டுரைகள், சர்வதேச ஆய்வுமாநாட்டு மலர்களில் வெளிவந்துள்ளன. கவிஞர் முல்லையின் படைப்புக்கள், ஈழத்தில் மட்டுமன்றிப் புலம்பெயர் தேசங்களிலும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. இப்போது இவரின் "ஆறாத வடு" என்னும் நாவல் படைப்பு, இவரின் இரண்டாவது நாவலாகும்.

இந்நாவல் முள்ளிவாய்க்கால் யுத்தத்திற்குப் பின்னைய அகதி முகாம் வாழ்க்கையை மையப்படுத்தியதாகும். 2009 ஆம் ஆண்டு, மே மாதம், 18ஆம் திகதி அன்று முல்லைத்தீவு: முள்ளிவாய்க்காலை அடுத்த வட்டுவாகல் பகுதியில் இராணுவத்தினரிடம் சரணடைந்து, சுமார் ஒரு வருடத்திற்கும் மேலாக வவுனியா - செட்டிக்குளம் பகுதிகளில் அமைந்திருந்த பல்வேறுபட்ட தடுப்பு முகாங்களில் தடுத்து வைக்கப்பட்டு, இறுதியில் திரியாய்க் கிராமத்துக்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்டமையை, தன்மை நிலையில் நின்று கதையாக்கியிருக்கின்றார் ஆசிரியர். தான் அனுபவித்த துன்பத்தினூடு, போருக்குப் பின்னர் தடுப்பு முகாங்களில் வாழ்ந்த ஒட்டுமொத்த வன்னி மக்களின் துயர் தாங்கிய வாழ்வின் அவலங்களைப் பேசியிருக்கின்றார். இந்நாவல் வெறும் கற்பனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனைவு அல்ல. யதார்த்தமான விடயங்களை வரலாற்றுவழிநின்று உண்மைத்தன்மையுடன் உரைக்கின்ற படைப்பென்றே கூறலாம்.

திருகோணமலையிலிருந்து எழுந்திருக்கின்ற, ஈழப் போரியலைப் பேசும் "ஆறாத வடு" என்னும் நாவல் படைப்பு, கிழக்கிலங்கை மண்ணுக்குப் புதிய வரவாகும். கிழக்கிலங்கை நாவல் வரலாற்றில் கவிஞர் முல்லையின் நாவல்களுக்குத் தனியிடமுண்டு என்றே சொல்லத்தோன்றுகின்றது. இவரின் மொழிநடை எல்லோரையும் ஈர்த்துவிடுமளவிற்கு எளிமையும், யதார்த்தப் பண்புமுடைய பேச்சுமொழியாக இருக்கின்றது. பாத்திர வார்ப்புக்கள், அத்தியாயப் பிரிப்புக்கள், சம்பவக்கோர்வைகள், கதைப்பின்னல் என எல்லாம் நன்றாகவே பொருந்தியிருக்கின்றன. இது எல்லோரும் தேடிவாங்கிப் படிக்க வேண்டிய வரலாற்றுப் பதிவாகவும் இருக்கின்றது. எனவே ஆசிரியருக்கு வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கின்றேன். இவரின் படைப்புக்கள் தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் என் வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

அன்புடன்,

**கலாபூஷணம் திருமலை சுந்தா,**

மூத்த எழுத்தாளர்,

திருகோணமலை.

*15. 01. 2023.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

என் பெற்றோரின் பூர்வீகம் திருகோணமலை - திரியாய்க் கிராமம். 1990இல் இனவன்முறைச் செயற்பாடுகளால் அங்கிருந்து இடம்பெயர்ந்து, முல்லைத்தீவுப் பகுதிக்கு வந்தார்கள். அகதியாய் வந்த அவர்களை, முல்லைமண் வாரி அணைத்துக்கொண்டது. அந்த அடங்காப்பற்று மண்ணில்தான் நானும் பிறந்தேன். போர்வெடியின் ஓசைகளே எனக்குத் தாலாட்டாய் இருந்தன. விமானத் தாக்குதல்களும், எறிகணை வெடிப்புக்களும், டோறாப்பீரங்கிச் சத்தங்களும், துப்பாக்கி வேட்டுகளும், மத்தாப்பு வெளிச்சங்களும், தறப்பாழ் கொட்டில்களும், பதுங்குகுழி வாழ்க்கையும் எனக்குப் பழகிப்போயின. அப்போது எனக்குப் பதினான்கு வயதென நினைக்கிறேன். போரின் உக்கிரத்தால், 2009 ஆம் ஆண்டு தைத்திங்களை அண்டிய தினங்களில் முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து, எத்தனையோ இழப்புக்களையும், எத்தனையோ அவலங்களையும் சந்தித்த பின்னர், மே 18ஆம் திகதி, முள்ளிவாய்க்காலை அடுத்த வட்டுவாகல் பகுதியில் இராணுவத்திடம் சரணடைந்தோம். அத்தகைய இறுதிக்கட்ட ஈழப்போரிலே அனுபவித்த போர்க்கால வாழ்வினை மையப்படுத்திய கதையாக, "கண்ணீரில் கரைந்த தேசம்" (2022) எனும் நாவலை எழுதியிருந்தேன். அதன் தொடர்ச்சியாகவே "ஆறாத வடு" எனும் இப்படைப்பும் உருப்பெற்றுள்ளது.

வட்டுவாகலில் இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்னர், எத்தனையோ சோதனைச் சாவடிகளுக்கும், தடுப்புமுகாங்களுக்கும் கொண்டுசெல்லப்பட்டபின், வவுனியா - செட்டிக்குளம் வனப் பகுதியிலமைக்கப்பட்ட Zone 04 சிறைமுகாமில் அடைக்கப் பட்டோம். சில மாதங்களின் பின் Zone 05 சிறைமுகாமிற்கு மாற்றப்பட்டோம். ஒரு வருடத்திற்கும் மேலாக அம்முகாமிலே வாழ்க்கை நகர்ந்தது. பின் மீள்குடியேற்றம் எனும் போர்வையில் வவுனியாவிற்குள்ளேயே அமைக்கப்பட்டிருந்த வேறு முகாமிற்குக் கொண்டுசெல்லப்பட்டு மாதக்கணக்கில் தடுத்து வைக்கப் பட்டோம். பின் திருகோணமலை - திரியாய்க் கிராமத்திற்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்டோம். அதற்குமுன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை - குச்சவெளிப் பாடசாலைத் தடுப்பு முகாமில் சில நாட்கள் தடுத்துவைத்திருந்தார்கள். இவ்வாறு, வட்டுவாகலில் இராணுவத்தினரிடம் சரணடைந்தது தொடக்கம், திரியாய்க் கிராமத்திற்கு மீள்குடியேற்றம் செய்யப்படும்வரையான காலத்துச் சிறைமுகாம் வாழ்க்கையை, இப்படைப்பினூடாகப் பேச முனைந்திருக்கிறேன். அம்முகாம் வாழ்வில் நடந்த அத்தனை சம்பவங்களையும் தவறாமல் பதிவுசெய்ய முயற்சித்திருக்கிறேன். கதையின் போக்கிற்கேற்ப, இடையிடையே போர்க்கால வன்னி வாழ்வும் வந்துபோகின்றது.

கலையிலக்கியமென்பது "தனிமனித, சமூக அனுபவப் பகிர்வு" என்று சொல்வார்கள். போரின் பின் குற்றுயிராய் மீண்டவர்கள், முகாங்களில் எவ்வாறான வாழ்க்கையை வாழ்ந்தார்கள் என்ற நேரடி அனுபவத்தை இப்படைப்பின்மூலம் வெளிப்படுத்தியிருக்கிறேன். இயல்பாய்ப் படிந்துபோன, ஆரவாரமற்ற வன்னிப் பேச்சினைத் தேவைக்கேற்ற இடங்களில் உயிர்ப்போடு தர முயற்சித்திருக்கிறேன். "இந்நாவல் வெறும் கற்பனைப் புனைவு அல்ல. குறிப்பிட்ட காலச் சமூகவாழ்வை, வரலாற்றைச் சொல்லும் உண்மைக்கதையாகும்" என்று "கண்ணீரில் கரைந்த தேசம்" (2022) என்ற நாவலின் முன்னுரையில் கூறியிருந்தேன். அதன் தொடர்ச்சியாகவே இப்படைப்பையும் நீங்கள் தரிசிக்கலாம்.

இந்நூலுக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவரும், தமிழியற் கழகத்தின் காப்பாளருமாகிய பேராசிரியர் ம.இரகுநாதன் அவர்கள் தக்கதொரு அணிந்துரையைத் தந்துள்ளார். "சேர் இதைத் தமிழியற் கழகத்துக்குள்ளால வெளியிடப் போறன் சேர்" என்று கேட்டபோது, "ஓ அதுக்கென்ன. எப்ப வெளியிடப்போறாய்?" என்று அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தந்தவர். எனவே பேராசிரியருக்கும், அவர் சார்ந்த தமிழியற் கழகத்தினருக்கும், நூல் நல்லமுறையில் வெளிவர ஆர்வத்தோடு உழைத்த குரு பிறிண்டேர்ஸ் ஊழியர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

**முருகையா சதீஸ்**

20.01.2023.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம்: 01**

அன்று 2009, வைகாசி பதினெட்டு. காலை புலர்ந்து சூரியன் எறித்துக்கொண்டிருந்த நேரம். பச்சைநிறக் காக்கிகளின் துப்பாக்கி முனைகளுக்கு நடுவே, இனி என்ன நடக்குமோ? ஏது நடக்குமோ? என்ற பயம் மனதுக்குள் படரக் கால்கள் நகர்ந்துகொண்டிருந்தன. இலட்சக்கணக்கான மக்கள் ஒருவர்பின் ஒருவராகக் கூனிக்குறுகிய படி நடைப்பிணங்களாய் வந்துகொண்டிருந்தார்கள். ஈழப்போர், முள்ளிவாய்க்காலை அடுத்த வட்டுவாகல் பகுதியோடு மௌனிக்கப் பட்டதன் விளைவாகவே இக்கொடிய நிகழ்வுகள் அரங்கேறின. வட்டுவாகல் பாலத்தினை அடுத்து அமைந்திருந்த சப்தகன்னியர் கோவிலடிவழியாகவே, அனைவரும் இரத்தவெறி கொண்ட யுத்த இயந்திரங்களின் முள்வேலி முகாமை நோக்கிப் பயத்துடன் ஒருவரை ஒருவர் ஒட்டியபடி மெல்ல மெல்ல நகர்ந்து கொண் டிருந்தோம்.

காயப்பட்டவர்கள் இராணுவ வாகனங்களில் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்டார்கள். சந்தேகத்திற்கிடமான ஆடவர் களையும், பெண்களையும் வாகனங்களில் ஏற்றினார்கள். சந்தேகத் தின் பேரில் குடும்பஸ்தர்கள் பலர் கைது செய்யப் பட்டார்கள். அவர்கள் எங்கு கொண்டு செல்லப்படுகிறார்கள் என்றே தெரிய வில்லை. எஞ்சியவர்கள் அச்சத்தோடு வரிசையாக நகர்ந்து கொண்டிருந்தார்கள். சிவில் உடைகளிலும், படையக உடை களிலும் நின்ற போராளிகளும், கிப்பியாகத் தலைவெட்டப்பட்ட பெண்களும், மொட்டையடிக்கப்பட்ட சிறுவர்களும், இளம் ஆண்களும், பெண்களுமாக இராணுவத்தினரால் தடுத்துவைக்கப் பட்டார்கள். அவர்களின் முகங்களில் பெரும் பீதியே வெளிக்கிளம் பிற்று. பார்க்கும் இடமெங்கிலும் இராணுவச் சிப்பாய்களின் இயந்திரத் துப்பாக்கி முனைகளும், பெரும் ஆயுதந்தாங்கிய கவச வாகனங்களும், பீரங்கி தாங்கிய செயின்பிளக்குகளுமே தென்பட்டன.

“இஞ்சேருங்கோப்பா... ஆமிக்காரங்கட முகங்களப் பாக்காம வேகமா நடவுங்கோ. அவங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னிப்பாத்தான் பாத்திட்டு இருக்காங்கள். சந்தேகப் பட்டாங்களோ உங்களையும் புடிச்சு ஏத்திப்போடுவாங்கள்."

"சீசீ... நான் புள்ளயத் தூக்கிக்கொண்டு வாறதால சந்தேகப்படமாட்டாங்கள். ஒண்டும் பறையாமப் பேசாம வாவணே."

அம்மாவின் வார்த்தைகளுக்குப் பதிலளித்தபடி அப்பா நகர்ந்துகொண்டிருந்தார். அவரின் பின்னால் நான். என்பின்னால் அம்மா. அம்மாவின் பின்னால் பலர். ஆங்காங்கு எண்ணிக்கையற்ற கைதுகள் அரங்கேறிக்கொண்டிருந்தன. சந்தேகத்திற் கிடமான வர்கள் தம் உறவுகளின் கண்முன்னே பிடித்துச்செல்லப்பட்டார்கள். புதிய மொழி அதட்டல்களும், கொச்சைத் தமிழ்ப் பேச்சுக்களும், நந்திக்கடல் வெட்டையில் அமைக்கப்பட்டிருந்த திறந்தவெளிச் சிறையை நோக்கி எல்லோரையும் அழைத்துச் சென்றன.

"அப்பா... அப்பா... எங்கயப்பா ஆமி எல்லாரையும் கூட்டீற்றுப் போறான்? கூட்டிக்கொண்டுபோய் சித்திரவதை செய்யப்போறானோப்பா? துவக்கால சுட்டுப்போடுவாங்களோப்பா? பொம்புளயளை யெல்லாம் சீரழிச்சுப் போடுவாங்களோப்பா?"

என் மனதுக்குள் எழுந்த சில கேள்விகள் அப்பாவைநோக்கி ஒலித்தன.

"என்ன நடக்கப்போகுதோ யாருக்குத் தெரியும் மோனே? அந்தச் செல்லடிக்கயே எல்லாரும் ஒரேதாச் செத்திருக்கலாம் போல கிடக்கு... இப்ப இங்க சித்திரவதையிலதான் சாகப்போறமோ தெரியா. நீ அம்மான்ர கையப் பிடிச்சுக்கொண்டு வேகமா வா.. கடவுள்தான் காப்பாற்றோணும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவின் வார்த்தைகள் எனக்குள் பயத்தினை மேலும் உண்டுபண்ணின. நாங்கள் புதுக்குடியிருப்பில் இருக்கிற காலத்தில், தெருக்கூத்துகள் பார்த்திருக்கிறோம். விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் மற்றும் கலை பண்பாட்டுக் கழகத்தினர் அடிக்கடி தெருக்கூத்துகள் நிகழ்த்துவதுண்டு. அத்தெருக்கூத்துகள், இளைஞர்களைப் போராட்டத்தின்பால் ஈர்த்துக்கொள்வதற்கான பிரச்சார உத்தியாகவே நடைபெற்றன. அத்தெருக்கூத்துகளில், இராணுவத்தினர் பயங்கரமானவர்களாகவும், சித்திரவதை செய்பவர்களாகவும், கொலைகாரர்களாகவுமே காட்டப்பட்டனர். அதுமட்டுமன்றிப் புலிகளின்குரல் வானொலியில், ஞாயிற்றுக் கிழமை இரவு ஒலிக்கும் நாடகக்கதையிலும் இராணுவத்தினரின் செயற்பாடுகள் மிகப்பயங்கரமானவையாகவே காட்டப்படுவ துண்டு. இப்போது அந்நினைவுகள் என் மனதில் தோன்றிப் பயத்தினை வரவழைத்துக்கொண்டிருந்தன.

> "உலகளந்த பிள்ளையாரப்பா... குட்டிப் பிள்ளை யாரப்பா.. எல்லாரையும் எங்கயோ கொண்டு போறாங்கள். அப்பாவை இவங்கள் பிடிக்கக் கூடாது. அம்மாவையும், தங்கச்சியையும் ஒண்டும் செஞ்சிடக்கூடாதப்பா. நீதான் காப்பாத்தோணும்."

நான் புதுக்குடியிருப்பில் இருக்கின்ற காலத்தில், சிறுவயதிலிருந்து ஓடியோடிப்போய்க் கும்பிடும் உலகளந்தவரையும், குட்டிப் பிள்ளையாரையும் மனதுக்குள் வேண்டிக்கொண்டேன். அவரும் எத்தனை பேரைத்தான் காப்பாற்றுவது.

> "என்ர ஐயோ! என்ர கடவுளே! என்ர ஒரேயொரு ஆம்பிளப் பிள்ளையப் புடிச்சுக்கொண்டு போறாங்களே! செல்லடிக்குள்ளால இருந்து தப்பி இங்கால வந்து, கடைசீல இப்பிடி நடக்குமெண்டு தெரியாமப்போச்சே... இனி நான் என்ன செய்வன்? எங்க கொண்டுபோறாங்களோ தெரியாதே... என்ர பிள்ளைய இனி எப்ப பாப்பன்? இனி அவனில்லாம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்வன்? கடவுளே உனக்குக் கண்ணில்லையா...?"

வயதுபோன ஒரு அம்மாவின் ஒப்பாரி, குறித்த அந்தப் பகுதியையே அதிரச்செய்தது. திரும்பிப் பார்த்தேன். பாவம் அவள். வயது சுமார் எழுபதைத் தாண்டியிருக்கும். கையில் ஒரு சிறிய பையுடன் புலம்பிக்கொண்டு வந்தாள்.

"உந்தக் கிழவீன்ர பெடியன, உதில ஆமிக்காரங்கள் புடிச்சு ஏத்திப்போட்டாங்களாம். "நான் எல்ரீரீ இல்லை மாத்தயா" எண்டு கத்தக்கத்த மனிசீன்ர கண்ணுக்கு முன்னால அவனை இழுத்துக்கொண்டு போனவங்களாம். அதுதான் உந்த மனுசீ கத்தீற்று வருது. உப்பிடி எவ்வளவு பேரைச் சந்தேகத்தில புடிச்சுப்போட்டாங்கள்."

எங்களை விலத்திவிட்டுப் போகும் ஒரு அண்ணனின் குரல் அமைதியாக ஒலித்தோய்ந்தது. சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவு பயணித்திருப்போம். இப்போதுதான் நந்திக்கடல் வெட்டையில் அமைக்கப்பட்டிருந்த பெரும் திறந்தவெளிச் சிறைக்குள் வந்துசேர முடிந்தது. இராணுவத்தினர், போர்க்கள முனைகளிலும் முன்னரங்குகளிலும் பாதுகாப்புக்காகப் பயன்படுத்தும் பிளேற்கம்பி வளையத்தின்மூலம் சுமார் பத்துமீற்றர் உயரம் வரை, இரு அடுக்குகளாகப் பாதுகாப்பு வேலிகளை அமைத்துச் சிறைமுகாமை அமைத்திருந்தார்கள். அத்துடன் குறித்த சில மீற்றர் தூரங்களில் காப்பரண்களை அமைத்துப் பெரும் கண்காணிப்புடன் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபடலாயினர். போர் மௌனிக்கப் பட்டதன் விளைவாக, சரணடைந்த சுமார் இரண்டு இலட்சம் வரையிலான சனங்களும் இப்பரந்த சிறை முகாமுக்குள்தான் அடைக்கப்பட்டார்கள்.

சூரியன் தன் ஒளிக்கீற்றுக்களால் சூடேற்றத்தொடங்கும் படலம் ஆரம்பமாகியது. எறிகணைகளிலும், விமானத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்குதல்களிலும், கடற்படையின் டோறாத் தாக்குதல்களிலும், இராணுவத்தின் துப்பாக்கிச் சூடுகளிலும் காயப்பட்டுக் குருதி வடிந்து சாகிறவர்கள் சாக, எஞ்சியவர்கள் குற்றுயிராகவே அம் முகாமுக்குள் வந்திருந்தார்கள். அதனால் பெரும் களைப்பும், பசியும், தாகமும் அதிகரிக்கச் சிறைமுகாமுக்குள் ஆங்காங்கு இருந்த மரங்களுக்குக் கீழே படுத்துக்கொண்டனர். நந்திக்கடல் வெட்டையில் மரங்களையே நாம் பெரிதும் காணமுடியாது. அப்படி நாம் பார்த்தாலும், பரவலாக ஆங்காங்கு விடத்தல் மரங்களே தென்படக்கூடியதாக இருந்தன. மரங்களில்லாத வெட்டையில் இலட்சக்கணக்கான மக்கள் என்னதான் செய்துவிட முடியும்? வெப்பத்தைத் தணிக்கத் தலைக்கு ஒரு துண்டைப் போட்டுக்கொண்டு அவ்வெட்டைகளில் படுத்திருந்தார்கள். இன்னும் பலர் தம் உறவுகளைத் தேடி அங்குமிங்கும் திரிந்து கொண்டிருந்தார்கள். போரின் இடப்பெயர்வினால் சிதறுண்டு போனவர்கள் உயிருடன் இருந்தால், இம்முகாமுக்குள் எப்படியும் வந்திருப்பார்கள் என்ற நம்பிக்கையில், தம் உறவுகளைத் தேடிச் சனங்கள் அலைந்து கொண்டிருந்தனர். இன்னும் பல்லாயிரக் கணக்கானோர் தம்கண்களுக்கு முன்னாலேயே தம் உறவுகளை இராணுவத்தினரிடம் பறிகொடுத்துவிட்டு ஏங்கிப் புலம்பிக் கொண்டிருந்தனர். இன்னும் பலர், தம் உறவுகளைக் கண்டுபிடித்த மகிழ்ச்சியில், அவர்களோடு கட்டியணைத்துப் பேசிக் கொண்டிருந்தனர். இன்னும் பலர், தம் சொந்தங்களையும் உறவுகளையும் இழந்து அநாதைகளாக விரக்தி நிலையில் பிரமை பிடித்ததுபோல் இருந்தனர். அடுத்தது என்ன நடக்குமோ? யார் கொல்லப்படப்போகிறார்களோ? யார் கைது செய்யப்படப் போகிறார்களோ? யார் சித்திரவதை செய்யப்படப் போகிறார் களோ? என்ற பீதியே, சுமார் இருபது, இருபத்தைந்து ஏக்கர் நிலப்பரப்புக்கொண்ட அந்தச் சிறைவெட்டையில் இருந்தவர்களின் மனங்களில் படர்ந்திருந்தது.

போரின் இறுதியில் தம் உறவுகளோடு சேர்ந்துகொண்ட பெரும்பாலான போராளிகளும் இங்கு வந்திருந்தார்கள். இன்னும் பலநூற்றுக்கணக்கான போராளிகள், பீதி கொண்ட முகங்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவில் உடைகளில் தம் உறவுகளைத் தேடி அலைந்து கொண்டிருந்தனர். இன்னும் பல போராளிகள், தம் உறவுகளைக் காணாமையால் தமக்குத் தெரிந்தவர்களோடு சேர்ந்து கொண்டார்கள். இன்னும் பலர், மனதிலே படர்ந்த பெரும் யோசனைகளோடு ஆங்காங்கு நின்றுகொண்டிருந்தனர்.

நேரம் நண்பகலை நெருங்கிக்கொண்டிருந்தது. எல்லாச் சனங்களும் முகாமிற்குள் வந்துவிட்டார்கள். இராணுவமும், புலனாய்வுப் படையினரும் காப்பரண்களில் குவிக்கப் பட்டிருந்தனர். ஆனால் முகாமிற்குள் எந்த இராணுவத்தினரும் வரவில்லை. சனங்களோடு சனங்களாகப் புலிகள் இருப்பார்கள் என்றும், திடீரென வெடித்துவிடுவார்கள் என்றும் அவர்கள் பயங்கொண்டிருக்கலாமென நினைத்தேன். வன்னியில் இருந்த தொண்ணூற்றைந்து வீதத்திற்கும் அதிகமான குடும்பங்கள், போராட்டத்திற்கு எவ்விதத்திலோ தம்முடைய பங்களிப்பை வழங்கியிருந்தார்கள். போராட வலுவுடையோர் அனைவரும் போராட்டத்தில் கட்டாயமாக இணைக்கப்பட்டிருந்ததால், அனைத்துக் குடும்பங்களும் போராளி அல்லது மாவீரர் குடும்பங்களாகவே இருந்தன. சனங்களே இயக்கம். இயக்கமே சனங்கள் என்ற நிலையே நிலவி வந்தது. இதனால் போர்க்காலத்தில் வன்னியில் இருந்த மக்கள் எல்லோரையும் இராணுவத்தினர் புலிகளாகவே பார்க்கலாயினர். அதன் காரணத்தினாலேயே இராணுவத்தினரும், புலனாய்வாளர்களும் இம்முகாமிற்குள் இருக்கும் ஒவ்வொருவரையும் உன்னிப்புடன் அவதானித்துக் கொண்டிருந்தார்கள். முகாமின் நாலாபக்கங்களிலிருந்தும் ஒலிபெருக்கிகள் ஒலித்துக்கொண்டிருந்தன.

> "எல்லா மக்கலும் கேலுங்க. நாங்க ஒங்கல ஒண்ணும் செய்யுறது இல்லே. இங்கே போராளி ஆக்கல் நெறய இரிக்கு. எல்லாம் எங்கலுக்கு தெரியும். நாங்க ஒங்கலப் புடிக்கிறதுக்கு முன்னாடி நீங்க எங்கலிட்ட வாங்க. ஒங்கல நாங்க ஒண்ணும் செய்யுறது இல்லே. வெசாரிச்சு மட்டும் விடுறதான். நாங்க புடிச்சா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒங்கலுக்குத்தான் பெரச்சனை. பொய் வேண்டாம். பொம்புலப் போராளி ஆக்கலும் இங்க இரிக்கு. மொட்டையடிச்சி சின்னப் பொடி ஆக்கலும் இங்க இரிக்கு. எல்லாம் எங்கலுக்குத் தெரியும். எல்லாம் எங்கலிட்ட வாங்க. ஒங்கட பெயரப் பதியுங்க. ஒண்ணும் பெரச்சனை இல்லே. நாங்க வெசாரிச்சு விடுறதான்."

பீதியை ஏற்படுத்தும் வண்ணமாகக் கொச்சைத்தமிழில் இராணுவப் புலனாய்வாளர்களின் அறிவித்தல்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன. உறவுகள் இல்லாமல் நின்ற பலநூற்றுக்கணக்கான போராளிகள், பயத்தின் காரணமாக, இராணுவத்தினர் பதிவுக்கு வரச்சொல்லிய இடத்திற்குச் சென்று சரணடைந்தார்கள். இன்னும் பலர், சரணடைவதா? விடுவதா? என்ற குழப்பத்தில் குழுக்களாகவும், ஒரிருவராகவும் சிறிய விடத்தல் மரங்களுக்குக் கீழே நின்று யோசித்துக்கொண்டிருந்தனர். பல போராளிகள், தம்மனைவி பிள்ளைகளோடும், தாய், தந்தையரோடும் இணைந்து கொண்டார்கள். நேரம் நண்பகலைத் தாண்டிக்கொண்டிருந்தது. இராணுவத்தினரின் முள்வேலியரண் பக்கங்களில் பல இடங்கள் சனக்கூட்டமாக இருந்தது. "தண்ணீர் போத்தல்களும், சாப்பாட்டுப் பொதிகளும் இராணுவத்தினரால் வழங்கப்படுகின்றன" என்று எங்களுக்குப் பக்கத்தில் இருந்த பலர் ஓடிச்சென்றனர்.

"அப்பா... அப்பா... ஆமிக்காரங்கள் சாப்பாடும், தண்ணியும் குடுக்கிறாங்களாமப்பா.. நான் போய் வாங்கீற்று வரட்டே? ஆ அப்பா?"

"உந்த சனத்துக்க எப்புடிப்போய் வாங்க போறாய்? நான் பாத்திட்டு வாறன் நீங்க எல்லாரும் இஞ்சயே இருங்கோ"

அப்பா பதிலளித்து முடிவதற்குள் அம்மாவின் வார்த்தைகள் ஒலித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்களுக்கு விசராணே.. அவன் எல்லாரையும் சந்தேகத்தில புடிச்சிட்டு இருக்கிறான். உதுக்குள்ள போய் ஏன் தேவேல்லாம மாட்டப்போறியள். என்ன நடக்கப்போகுதோ? ஏது நடக்கப்போகு தோண்டு இருக்கிறன் நீங்கவேற. நீங்க போ வேணாம். தம்பீ போய்ப் பாத்திட்டு வரட்டும். நீங்க இருங்கோ.."

"ஓமப்பா நான் போய்ப் பாத்திட்டு வாறன். நேற்றிலயிருந்து ஒண்டும் சாப்பிடேல்ல. வயிறெல்லாம் ஒட்டிப்போய் நோகுதணே.. சொண் டெல்லாம் தண்ணியில்லாம வெடிச்சுப்போட்டு.. தண்ணியாவது வாங்கீற்று வாறன்."

என்று சொல்லிக்கொண்டே சனம் குழுமி நின்ற இடத்தை நோக்கி ஓடினேன். உண்மையாகவே இராணுவத்தினர் பெரிய கவச வாகனங்களில் ஏறி, முட்கம்பி வேலிகளுக்கு அங்காலிருந்து மக்களை நோக்கித் தண்ணீர்ப் போத்தல்களையும், சாப்பாட்டுப் பார்சல்களையும் எறிந்துகொண்டிருந்தனர். பட்டினிச்சாவின் விளிம்பில் இருந்த சனங்கள் சும்மா இருப்பார்களா? தண்ணீர்ப் போத்தல்களையும், சாப்பாட்டுப் பார்சல்களையும் எடுப்பதற்குச் சனங்கள் முண்டியடித்துக் கொண்டிருந்தனர். நான் சிறுவனாக இருந்ததனால் ஒருமாதிரி சனக்கூட்டத்திற்குள் நுழைந்து, இராணுவத்தினர் இருந்த முட்கம்பி வேலிக்கு அருகில் சென்றுவிட்டேன். இராணுவத்தினர் போடும் தண்ணீர்ப் போத்தல்கள் எனக்கு அப்பால் சென்று விழுந்துகொண்டிருந்தன. எனக்கருகில் விழுந்த, ஓரிரு போத்தல்களும் என் கைகளுக்கு எட்டவேயில்லை. எட்டியிருந்தாலும் என் கைகளுக்குள் அகப்பட்டிருக்குமோ தெரியாது. அப்படியான நிலைமையிலேயே சனங்களின் நெருக்கம் காணப்பட்டது. இலட்சக்கணக்கான சனங்களுக்கு இவர்கள் கொடுக்கும் சாப்பாடும், தண்ணீர்ப் போத்தல்களும் எவ்வாறு காணும்? நான் அங்குமிங்கும் முள்வேலிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைகளில் ஓடியோடிக் களைத்துவிட்டேன். என்னால் நடக்கவே முடியாத நிலையில் வேலிக்கரையின் ஓரமாக இருந்துவிட்டேன். இதைப் பார்த்த இராணுவீரன் ஒருவன், ஏதோ சிங்களத்தில் சொல்லியபடி நானிருந்த பக்கமாகச் சாப்பாட்டுப் பொதி யொன்றினை வீசினான். எனக்குத்தான் வீசுகிறான் என்பதை உணர்ந்துகொண்டு சடுதியாக எழும்புவதற்கிடையில் சனங்கள் என்மேல் விழுந்துவிட்டார்கள். சனங்களின் நெரிசலுக்குள் அகப்பட்டுக்கொண்ட நான், அவர்கள் தள்ளுப்பட்டுக் கொண்டதில் முள்வேலிக்குள் விழுந்துவிட்டேன்.

"என்ரையம்மா.. ஐயோ...."

என் கால்களைப் பிளேட் கம்பிகள் அறுத்துவிட்டதால் பாரிய காயங்கள். இரத்தம் பெருகிக் கால்களே செந்நிறமாகின. கைகளிலும் பிளேட் கம்பிகள் அறுத்துவிட்ட சிறிய பல காயங்கள். உடலில் இரத்தமில்லாத நிலையில், இருந்த இரத்தமும் வெளியேறிக் கொண்டிருந்தது. போர்க் களமுனைகளில் காப்பரண்களுக்காகப் பயன்படுத்தப்படும் பிளேட் கம்பிகள் விஷத்தன்மை வாய்ந்தவை. அப்பிளேட் கம்பிகளால் காயங்கள் ஏற்படுமிடத்துக் காயத்திலிருந்து வெளியேறும் இரத்தத்தினைக் கட்டுப்படுத்துவது கஷ்டம்.

நான் முள்வேலிக்குள் விழுந்துவிட்டதைக் கண்ட அந்த இராணுவவீரன், சிங்களத்தில் ஏதோ உரத்த குரலில் கத்தினான். தண்ணீர்ப் போத்தல்களையும், சாப்பாடுப் பார்சல்களையும் போடுவதை நிறுத்திவிட்டு, காவலரண் வாசலைக்காட்டி என்னை வெளியே வரச்சொன்னான். அவனின் மொழி எனக்குப் புரியவில்லையாயினும் அவனின் சைகை எனக்குப் புரிந்துவிட்டது. காவலரண் வாசலை நோக்கி எழுந்து நடக்கலானேன். கால்களில் குருதி வடிந்து பாதவிரல்களுக்குள் கறையாகப் படிந்து கொண்டிருந்தது. வாசலுக்கு அருகே சென்றதும் இராணுவ வீரர்கள் இருவர் அருகிலிருந்த மெடிசினுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே சில இராணுவப் பெண்கள், இராணுவ வீரனொருவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்துகட்டிக்கொண்டிருந்தனர். அவன் மயக்கத்திலிருந்தான். அனுக்குக் காலொன்று சிதறிப்போயிருந்தது. அவனுக்குரிய அவசர சிகிச்சைகளைச் செய்துவிட்டு இராணுவ ஜீப்பில் அவனைக் கொண்டு சென்றார்கள்.

என்னுடன் வந்திருந்த இராணுவ வீரர்களில் ஒருவன், அந்த இராணுவப் பெண்களிடம் என்னைக்காட்டி ஏதோ சிங்களத்தில் சொன்னான். அவர்களில் ஒருத்தி எனக்கருகில் வந்து என் கன்னத்தில் "பளீர்" என்று அறைந்து விட்டுக், கட்டிலில் எற்றி மருந்து கட்டிக்கொண்டிருந்தாள். அவ்வேளையில் ஒரு இராணுவ வீரனைக் காவிக்கொண்டு இருவர் ஏதோ சொல்லியவண்ணம் ஓடிவந்தனர். அவர்களைக் கண்டதும் கீழே என்னைத் தள்ளிவிட்டுக், காவுதடியில் கொண்டுவந்த அவ்விராணுவ வீரனுக்கு மருந்தைக்கட்டி ஜீப்பில் ஏற்றி அனுப்பினார்கள். பெரும்பாலும் அவன் கண்ணிவெடியில் அகப்பட்டிருக்க வேண்டும் என மனதுக்குள் நினைத்துக் கொண்டேன். அதன்பிறகு என்னை மீளவும் கட்டிலில் இருத்திக் காயங்களுக்கு மருந்துகட்டிவிட்டுப் போடுவதற்கு குளுசைகளும் மடித்துத் தந்தனுப்பினர்.

மருந்துகட்டியபின் அவ்விரு இராணுவ வீரர்களும் திறந்தவெளிச் சிறைமுகாம் வாசலை நோக்கி என்னை அழைத்து வந்து, சிறு பொதியொன்றையும் தந்து அனுப்பினர். அதனைத் திறந்து பார்த்தேன். உள்ளே இரண்டு சாப்பாட்டுப் பார்சல்களும், இரண்டு தண்ணீர்ப் போத்தல்களும், ஐந்தாறு பிஸ்கட் பைகளும் இருந்தன. என் மனசெல்லாம் பூரிப்பு. எவ்வளவு காலத்திற்குப் பிறகு, சாப்பாடு சாப்பிடப்போகிறோம் என்ற சந்தோசம் மனசில் கொடிகட்டிப் பறந்தது. உணவு கிடைத்த மகிழ்ச்சியில் காயங்களின் வலிகளே தெரியவில்லை. கொண்டுவரும் இரண்டு சாப்பாட்டுப் பார்சல்களும் "எங்கள் நாலு பேருக்கும் வடிவாக் காணும்" என்ற நினைப்பு மனதில் மகிழ்ச்சியை உந்த, அம்மா - அப்பாக்கள் இருக்கும் இடத்தினை நோக்கி ஓடத்தொடங்கினேன். எனது இரு கரங்களும் அந்த உணவுப் பொதியை மார்போடு அணைத்துக் கொண்டிருந்தன....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம்: 02

கதிரவன் மேற்கு வானைநோக்கி நகர்ந்தாலும், தன் வெப்பக் கதிர்களால் நன்றாகவே சூடேற்றிக்கொண்டிருந்தான். வெப்பம் தாங்கமுடியாமல் சனங்கள் விடத்தல் மரங்களுக்குக்கீழே சுருண்டு கிடந்தனர். பலர் சாப்பாட்டிற்கும், தண்ணீருக்கும் முள்வேலிக் காப்பரண்களுக்கருகில் முண்டியடித்துக்கொண்டிருந்தனர். இன்னும் பலர் தாம் கொண்டுவந்த உடைகளால் தலையைப் போர்த்திக் குமுமிக்கிடந்தனர். வேறு சிலர் நா வரண்டு, உடல் வாடப்பெற்று மயக்க நிலைகளில் கிடந்தனர். இலட்சக்கணக்கான மக்கள் இச்சிறைக்குள் இருப்பதால் போதியளவான உணவும், தண்ணீரும் இராணுவத்தினரால் வழங்கமுடியாமல் போயிற்று. சன நெரிசல்களுக்குள்ளால் ஊடுருவிக் காயக்கட்டுக்களுடன் நான் ஓடிவருவதை அம்மா கண்டுவிட்டார்.

> "தம்பீ டேய்... தம்பீ என்னாச்சுடா? இவ்வளவு காயங்களோட வாறாய்... என்ன நடந்த?
>
> "இல்லையம்மா சாப்பாடு வாங்கிறதுக்கு முன்னுக்குப் போய் நிண்டனான். ஆமிக்காரன் சாப்பாடு போடேக்க எடுக்கப் போனான் சனங்கள் தள்ளுப்பட்டுக்கொண்டிருந்ததுகள். அப்பேக்க நான் பிளேட் கம்பீக்க விழுந்து போட்டனணே."

என்று நான் சொல்லிமுடிப்பதற்குள், அப்பா தொடர்ந்தார்.

> "உதுதான் நான் போறன் எண்டு சொன்னான். சண்டேக்கிள்ள தப்பி வந்து, இஞ்ச ரெத்தம் சிந்திக்கொண்டு வந்திருக்கிறான். இனி ஒருடமும் போகக்கூடா சொல்லீட்டன்... பேசாம இதிலயே இரு."

அப்பாவின் வார்த்தைகளைக் கேட்ட அம்மா அமைதியாகிப் போனார். நானும்தான். ஆரம்பத்தில் சாப்பாடு வாங்குவதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாதான் வெளிக்கிட்டிருந்தார். ஆனால் இராணுவத்தினருக்குப் பயந்து அம்மா, அப்பாவைப் போகாமல் தடுத்துவிட்டமை யாலேயே எனக்கு இப்படி ஆயிற்று என்பது அவருக்கு வருத்தத்தைத் தந்தது.

"தம்பீ டேய்... பெரிய காயமோடா? பெரிசா கிளிச்சுப் போட்டோடா...?"

"இல்லையம்மா... அதெல்லாம் சின்னச்சின்னக் காயம் தானம்மா.. மருந்தும் எடுத்திட்டுதான் வந்திருக்கிறன். அது மாறீடும்... என்ன நடக்கோணுமோ அது நடந்துதான் தீருமணே... எல்லாம் இப்பிடி நடக்கோணும் எண்டு எழுதீருக்குப்போல... அதவிட்டிற்று வாங்கோ முதல் சாப்பிடுவம். எத்தின நாள் சாப்பாட்டப் பாத்து..."

சாப்பாட்டுப் பார்சல்களை எடுத்து அம்மாவிடம் கொடுத்தேன். சாப்பாட்டைக் கண்டதும் சோர்ந்து கிடந்த தங்கச்சி எழுந்து விட்டாள். காய்ந்துபோயிருந்த குடலைச் சிறிது தண்ணீர் குடித்து எல்லோரும் நனைத்துவிட்டு, ஒரு பார்சல் சாப்பாட்டைப் பகிர்ந்து உண்டோம். இருபிடி சோறு உள்ளே போனதும் வயிறு நிரம்பியே விட்டது. நான்கைந்து மாதங்களாக ஒருநேர உப்புக்கஞ்சியை உள்வாங்கிய குடல், இப்போது சுருங்கித்தான் விட்டது. எனக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் இந்த நிலைதான்.

"இஞ்சேருங்கோப்பா... குடிக்க மட்டும்தான் தண்ணி கிடக்கு. கை கழுவத் தண்ணியில்ல. பேசாம இந்தப் பாசல் மடிச்சுவந்த பேப்பரால கையத் துடையுங்கோணே..."

"ஓமணே... இந்தத் தண்ணீல கையக்கழுவீற்று, பேந்து குடிக்க எங்க திரியுற?.. ஒரு பேப்பர் துண்டொண்டு இஞ்ச கொண்டாணே கையத் துடைப்பம். தம்பிக்கும் ஒரு துண்டக்குடு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா கூறியதற்குப் பதிலளித்துவிட்டுக் கடதாசியால் கைகளை நன்கு துடைத்துக்கொண்டார் அப்பா. நானும் அம்மாவிடம் ஒரு துண்டுக் கடதாசியை வாங்கிக் கைகளைத் துடைத்துவிட்டுக் கொஞ்சம் தண்ணீர் குடித்தேன். இப்போதுதான் ஒருவித நிம்மதி வந்தது. பல மாதங்களாகச் சாப்பாடே இல்லாமல் இருந்த எங்களுக்கு, இன்று ஒருபிடி சோறு சாப்பிட்டது ஆறுதலாகவே இருந்தது. இரத்தம் போன சோர்வில் நான் அம்மாவின் மடியில் படுத்துக்கொண்டேன். தங்கச்சியும் எனக்கருகில் வந்து அம்மாவின் மடியில் சரிந்துகொண்டாள். சூரியனின் ஒளி சுட்டெரித்தாலும், நந்திக்கடற்பக்கமிருந்து வீசிய உப்புக்காற்று, என்னை அரவணைத்துத் தூங்கவைத்துக் கொண்டிருந்தது.

பொழுதும் கடந்து சூரியன் மறைந்தது. மிஞ்சிக்கிடந்த பார்சல், இரவு உணவுக்குப் போதுமானதாய் இருந்தது. கைகழுவத் தண்ணீர் இன்றிக் கடதாசியால் மீளவும் கைகளைத் துடைத்துவிட்டு அப்படியே நிலத்தில் சரிந்தோம். இராணுவத்தினரின் ஒலிபெருக்கிச் சத்தங்கள் ஒலித்துக்கொண்டேயிருந்தன. போராளிகளும் பயத்தில் இராணுவத்தினர் அறிவிக்கும் பகுதிகளுக்குச் சென்று சரணடைந்துகொண்டுதான் இருந்தார்கள். பலர் மக்களோடு மக்களாக முடங்கிக் கிடந்தனர். கிழக்கிலிருந்து முகில்களைக் கிழித்துக்கொண்டு நிலவு காலித்தது. நிலவொளியின் வெளிச்சத்தில் பனி பொழிந்து, வரண்டுபோன சனங்களின் நாக்குகளை இதமாக்கிற்று. இந்த இரவுதான் வெடியோசைகளற்ற இரவாக நகர்ந்துகொண்டிருந்தது. இல்லையேல் துப்பாக்கிச் சூடுகளும், எறிகணை வெடிப்புக்களும், கடற்பகுதியில் இருந்து பீரங்கித் தாக்குதல்களும், வான் பகுதியிலிருந்து விமானத் தாக்குதல்களும் ஓய்வின்றி நடைபெற்றவண்ணமே இருக்கும். பதுங்குகுழிகளில் காப்பெடுத்தபடியே எல்லோரும் தூங்கிவிடுவதுண்டு. எந்த நேரமும் ஒப்பாரி ஓலங்களே ஒலித்துக்கொண்டிருக்கும். எந்தநொடியும் காயப்படுவதும் இறப்பு நிகழ்வதும் இயல்பாகிப் போனது. ஆனால் இன்று அவ்வாறு இல்லை. போர் மௌனிக் கப்பட்டதன் விளைவாக வெடியோசைகள் கேட்கவில்லை. விமான இரைச்சல்கள் கேட்கவில்லை. டோறாப் பீரங்கித் தாக்குதல்கள் ஒலிக்கவில்லை. இந்த இரவு அமைதியாய் நகர்ந்துகொண்டுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. ஆனாலும் அடுத்து என்ன நடக்கமோ? என்ற பயம் படர்ந்து எல்லோரது மனதிலும் அமைதியைக் குலைத்துக் கொண்டிருந்தது.

பனிபொழியும் இரவு மறைந்து பொழுது புலர்ந்தது. ஆனாலும் எழுந்து பயனில்லை என்ற எண்ணத்தில், போர்வெடியின் ஓசைக்குள்ளும் மகிழ்ந்திருந்த தேசம், இப்போது மகிழ்ச்சியைத் தொலைத்து உறங்கிக்கொண்டிருந்தது. கதிரவன் எழுந்தான். கதிர்களால் சூடேற்றி எல்லோரையும் எழுப்பினான். நேற்றைய நாள் இராணுவத்தினர் போராளிகளைக் கைது செய்வதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தனர். இன்று என்ன நடக்கப்போகுதோ? என்ற வினாவே எல்லோரது மனங்களிலும் தோன்றி மறைந்து கொண்டிருந்தது. பல்லுத் துலக்கி, முகம் கழுவக்கூட யாரிடமும் ஒன்றும் இருக்கவில்லை. நேரம் சுமார் எட்டு மணியளவு இருக்கும். இரண்டு பெரிய தண்ணீர் பௌசர் வாகனங்கள் கொண்டுவரப்பட்டு முகாமுக்குள் நிறுத்தப்பட்டன. தண்ணீர் முடிய முடிய, நான்கைந்து தரம் தண்ணீர் நிரப்பிக்கொண்டு வந்தார்கள். இராணுவத்தினர், இச்செயற்பாட்டினால் ஓரளவிற்குச் சனத்தின் தாகத்தைத் தணித்தாலும் பசியை அவர்களால் தணிக்கமுடியவில்லை. அப்பாவும் வெறுமையாய்க் கிடந்த போத்தல்களை எடுத்துச் சென்று தண்ணீர் நிரப்பி வந்தார். நேற்று இராணுவத்தினர் சாப்பாட்டுப் பொதியோடு தந்த பிஸ்கட் பையொன்றை உடைத்துக் காலை உணவை முடித்துக் கொண்டோம். திடீரெனச் சனங்கள் கூட்டம் கூட்டமாக ஒருபக்கம் வேகமாக நகரத்தொடங்கினர்.

“அண்ண என்ன சனங்களெல்லாம் உங்காலப் பக்கம் போகுதுகள்... என்ன பிரச்சன?”

“அதண்ண.. ஆமிக்காரங்கள் எல்லாரையும் குடும்பம் குடும்பமாக் கூப்பிட்டுப் பதிஞ்சு, செக்கிங்பண்ணி வேற முகாமுக்குக் கொண்டு போறானாம். அதுதான் சனங்கள் ஓடிப்போய் லைன்ல நிக்குதுகள். இதுக்கயிருந்து தண்ணி வெண்ணி இல்லாமச் சாகிறத விட, அங்கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போறது நல்லம் தானே அண்ண. ஆனா அங்கால என்ன நடக்குதோ தெரியா.. அதுதான் பயமாக் கிடக்கு. சனங்களோட சனங்களாப் போறதால பறவாயில்ல அண்ண"

அப்பாவின் கேள்விக்குப் பதிலைச் சொல்லியவாறு ஒரு அண்ணன் நகர்ந்துகொண்டிருந்தார். அவர் சொல்லுவதிலும் உண்மை இருந்தது. அதனால்தான் கொஞ்சச் சனங்கள் தம் பெயர் விபரங் களைப் பதிவுசெய்வதற்காக முண்டியடித்துக் கொண்டிருந்தனர். ஆனாலும் முக்கால் வாசிப்பேர் இராணுவத்திடம் பதிவுகளைக் கொடுக்க விரும்பாமல் பயத்தில் அப்படியே முகாம் வெளியில் படுத்திருந்தார்கள். பொழுது நகர்ந்தது. வெப்பத்தில் சனங்களும் கருகிக்கொண்டிருந்தனர். இராணுவத்தினரால் பல தடவைகள் கொண்டுவரப்பட்ட தண்ணீர் பௌசர்கள் காலியானதால், சனங்களுக்குத் தேவையான தண்ணீரை இராணுவத்தினரால் வழங்கமுடியவில்லை.

வெய்யில் வெப்பத்தின் உக்கிரத்தால் அனைவரும் தாகத்தால் தவித்தனர். முட்கம்பி வேலிகளுக்கு அப்பால் தெரியும் நந்திக்கடலின் நீரைப் பார்த்துக்கொண்டு அவர்களால் தாகத்தோடு இருக்கமுடியவில்லை. "நந்திக்கடற்பக்கமாகப் பாதை திறந்து விட்டால், நந்திக்கடலின் உவர்நீரையாவது குடிப்போம்" எனக் கிறிஸ்தவப் பாதிரிமாரை வைத்து இராணுவத்தினரிடம் கதைத்துப் பார்த்தார்கள். பயன் கிடைக்கவில்லை. கடைசியில் இராணுவத் தினர், இரண்டு பெக்கோ இயந்திரங்களைக் கொண்டு வந்து, முகாமுக்குள் பாரிய இரண்டு குழிகளைத் தோன்றினார்கள். தண்ணீர் ஊற்றெடுத்தது. ஆனால் அத்தண்ணீர் தெளிந்த நீராக இருக்கவில்லை. களிமண் கலந்த பால்நிறத்திலான தண்ணீராகவே இருந்தது. அது எப்படியிருந்தாலும் பறவாயில்லையென்று பலர் குழிகளில் இறங்கித் தண்ணீரை அள்ளித் தாகம் தீரும் மட்டும் பருகினர். சிலர் போத்தல்களில் எடுத்துச் சென்று, கலங்கலைத் தெளியவைத்துப் பருகினர். நானும் பெக்கோ இயந்திரம் குழிவெட்டுவதைப் பார்க்க வந்திருந்ததால், குழிக்குள் இறங்கி, அருகில் கிடைத்த வெறும் போதத்தலில் தண்ணீர் எடுத்து வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிய வைத்தேன். இன்றைய பகல் பசி, ஐந்தாறு பிஸ்கட் துண்டுகளோடு கடந்து போயிற்று.

“இஞ்சேரணை... இப்பிடியே இருந்து வேலையில்ல. நடக்கிறது நடக்கட்டும். இதுக்குள்ள இருந்து தண்ணியும், சாப்பாடும் இல்லாமச் சாகேலாது. பதியிற சனங்களோட நாங்கள் முன்னுக்குப்போய் பதிவமணே... கொஞ்சம் பொழுதுபட்டோடன வெளிக்கிடுவம் எனணே?”

“நீங்க சொல்லுறதும் சரிதானணே... இப்பிடியே இதுக்குள்ள இருக்கேலாது. சனங்களோட சனங்களாப் போறதால பிரச்சினை இல்லப்பா..”

“ம் சரி இருங்கோ வாறன்.. மேலிலயும் சேட்டில்லாம இருக்கிறன். யாரும் தெரிஞ்ச ஊர்க்காரங்கள் நிண்டா, சேட்டொண்டு வாங்கிப் போட்டிற்று வாறன்.. இதிலயே இருங்கோ”

அம்மாவுக்குப் பதிலளித்தபடியே அப்பா எழுந்து நகர்ந்தார். ஆம் அப்பா இப்போது வெறுமேலுடன்தான் போய்க் கொண்டிருக்கிறார். நாங்கள் இராணுவத்திடம் சரணடையும் போது, பதுங்குகுழிக்குள் எப்படி இருந்தோமோ அப்படியே வந்து விட்டதால், முக்கிய ஆவணங்கள் உள்ளடங்கிய சிறிய பையைத் தவிர எதுவும் எடுத்துவரவில்லை. போட்டிருந்த உடுப்புடனேயே சரணடைந்தோம். அதனாலேயே அப்பா வெறும் மேலுடன் வரவேண்டியதாயிற்று. சென்றவர் சிறிது நேரத்தின் பின் வந்தார். அப்போது அவர் சேட் அணிந்திருந்தார். அவர் வந்து அமர்வதற்குள்,

“அப்பா... அப்பா.. யாரிட்டயப்பா சேட் வாங்கினீங்க?”

என் கேள்வியைத் தொடர்ந்தேன். அம்மாவும் அதற்கான பதிலைக் கேட்க ஆவலாகவே இருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேவிபுரத்தில எங்களுக்குப் பக்கத்தில இருந்த சிறி அண்ணனக் கண்டனான். அவரிட்டத்தான் சேட் வாங்கிப் போட்டிற்று வாறன். அவற்ற மனிசி, பிள்ளையள் மாத்தளன் கடலால ஆமீற்ற வேளைக்குப் போட்டினமாம். தான், இப்ப என்ன செய்யிறது எண்டு தெரியாம, தன்னோட வேலை செஞ்ச ஒண்டிரண்டு பெடியளோட யோசிச்சிட்டு நிக்கிறார். எப்பிடியும் பின்னேரம் ஆமீற்றை பேரைப் பதிஞ்சிட்டு சரணடையப் போறன் எண்டு நிக்கிறார்"

அப்பா கூறுகிற பொழுதுதான் எனக்கும் ஞாபகம் வந்தது. தேவிபுரச் சந்தியிலிருந்து ஐந்நூறு மீற்றர் சென்றவுடன் இடக்கைப் பக்கம் வருகின்ற ஒழுங்கையால் திரும்பிச் சிறிது தூரம் செல்லும்போது வரும் சிறிய மாஞ்சோலை வளவில்தான் சிறியண்ணை குடும்பம் இருந்தது. அவரின் வீட்டிற்கு அடுத்த வளவுதான் எங்களுடையது. அவர் மட்டக்களப்பைப் பிறப்பிட மாகக்கொண்டவர். போர்ச்சூழலால் வன்னிக்கு வந்து, புங்குடுதீவுப் பிள்ளையைத் திருமணம் செய்துகொண்டவர். அவருடைய திருமணம், 2000ஆம் ஆண்டு இயக்கத்தினால்தான் செய்து வைக்கப்பட்டது. அந்தக் கலியாண வீட்டிற்றுச் சிறுவயதில் போன ஞாபகம் இப்போதும் எனக்கு நன்றாகவே நினைவிலிருக்கிறது. அன்றைய நாட்களில் நாங்கள் நடேசம்மான் திட்டத்தில் இருந்ததாக ஞாபகம். அவர் ஒரு அரசியல்துறைப் போராளி. ஆரம்பத்தில் அவர் களமுனைகண்ட வீரனாகத்தான் இருந்திருக்க வேண்டும். அவருடைய கால் ஒன்று வீரவிழுப்புண்ணால் பாதிக்கப்பட்டிருந்தது. அதனால் அவரால் சாதாரணமாக நடக்க முடியாது. ஒரு காலை இழுத்து இழுத்துத்தான் நடப்பார். தன் காலுக்குள் எடுக்கமுடியாத பல குண்டுச்சிதறல்கள் இருப்பதாகக் காயத்தழும்புகளைக் காட்டியிருக்கிறார். அவை சில நேரங்களில் வலியை ஏற்படுத்துவதாகவும் கூறிய ஞாபகம் இருக்கிறது. அவருடைய மனைவி லாதா. அவர்களுக்கு ஆண்குழந்தை ஒன்று இருந்தது. அவனுடைய பெயர் கவியென்றே நினைக்கிறேன். அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்து நாலைந்து மாதக்குழந்தை. லதாக்கா சமையல் வேலை செய்கிற போதெல்லாம் நான்தான் அவனைத் தொட்டிலில் தூங்கவைத்துக் கொண்டிருப்பேன். அவனுக்கு நடை பழக்கியதும் நான்தான். அவனுடைய அம்மம்மாவும் அவர்களோடுதான் இருந்தார். நான் பக்கத்துவீட்டு நண்பர்களோடு மாமர நிழல்களில் கூட்டாஞ்சோறு சமைத்து விளையாடும்போதெல்லாம் எங்களோடு வந்து விளையாடுபவர். நாங்கள் சமைக்கும் கூட்டாஞ்சோற்றைத் உண்டுவிட்டுச் சுவை பற்றிச் சொல்லும் நினைவுகள் இன்றும் மனத்தில் ஆழமாய்த்தான் படிந்திருக்கின்றது.

அவர்களுடைய வளவில் இருக்கும் மாமரங்கள் காய்க்கும் பருவத்தில் எனக்குக் கொண்டாட்டம்தான். கறுத்தக்கொழும்பான், வெள்ளைக்கொழும்பான், கிளிச்சொண்டான் என்று பல மாமரங்கள் இருந்ததால், எனக்குப்பிடித்த மரங்களில் ஒரு சிறு குரங்குக் குட்டியைப்போலத் தாவிப் பழங்களை ஆய்ந்து சாப்பிடுவதுண்டு. எனக்கு வெள்ளைக்கொழும்பான் மாம்பழமே மிகவும் பிடிதத்தமானதாய் இருந்தது. அதனால் வெள்ளைக் கொழும்பான் மாமரங்களே என்னை அதிகம் சுமந்ததுண்டு. சோழகக்காற்றுவீசத் தொடங்கினால் அதைவிடச் சந்தோசம். மாமரங்களுக்குக்கீழே யாரும் நிக்கமுடியாத அளவிற்கு முற்றிய மாங்காய்களும், பழங்களும், பிஞ்சுகளும் விழுவதுண்டு. அவற்றினைப் பொறுக்கும்போது என்மீதும் அவை விழுந்துவிடும். அவற்றிலிருந்து தப்பித்து ஓடியோடிப் பொறுக்கினாலும் என்மேல் விழாத மாங்காய்களும் பழங்களும் இருக்கமுடியாது. நான் அந்த மாமரங்களில் ஏறிச் செய்யும் குழப்படிகளைப் பொறுக்க முடியாமல் தான் அந்த மாமரங்கள், என்மீது வேணுமென்று மாங்காய்களை விழுத்துகின்றன என்றெல்லாம் யோசித் திருக்கின்றேன். நாங்கள் முன்பு இருந்த நடேசம்மான் திட்டத்திலும் மாமரச்சோலையே இருந்தது. தேவிபுரச் சந்தியிலிருந்து உள்நோக்கிச் செல்லும்போது சுமார் எண்ணூறு மீற்றர் தொலைவில் ஒரு பெரிய ஆலமரத்திற்குக் கீழ் முனியப்பர்கோயில் இருந்தது. அதற்கு அருகில் ஒரு அம்மன் கோயிலும் உண்டு. அவ்விடத்தில் காணப்படும் குடியிருப்பே நடேசம்மான் திட்டமாகும். நான் பிறந்ததும் இந்தக் குடியிருப்பில் தான். நான் தவழ்ந்து மண்ணளைந்து விளையாடி ஓடித்திரிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமும் அதுதான். அந்த மாமரச்சோலைக்குக் கீழே இருக்கும் நேசறியில்தான் நான் பாலர் வகுப்புப் படித்தேன்.

நடேசம்மான் திட்டம் என்பது யாரோ ஒரு மாவீரனின் பெயரை மையப்படுத்திய குடியிருப்பாகத்தான் இருக்க வேண்டும். இனப்பிரச்சினைக் காலத்தில், வடகிழக்கில் இருந்து இடம் பெயர்ந்து வன்னிப்பகுதிக்கு வந்த மக்களில் பல குடும்பங்கள், நடேசம்மான் திட்டத்தில்தான் குடியேறியிருந்தார்கள். நாங்களும் அவ்வாறு வந்தவர்களென்றுதான் அம்மா சொல்லியிருக்கிறார். எனது அப்பாவின் சொந்த இடம் திருகோணமலையில் இருக்கும் திரியாய்க் கிராமமாகும். 1990ஆம் ஆண்டு நடந்த இனவன்முறைச் சம்பவங்களினால் இடம்பெயர்ந்து முல்லைத்தீவுக்கு வந்து, குமுழமுனைப்பகுதியில் குடியேறியிருந்தார்களாம். ஓரிரு வருடங்களின் பின்புதான் நடேசம்மான் திட்டத்திற்கு வந்ததாக அம்மா சொல்லியதுண்டு. யுத்தம் தந்த இடப்பெயர்வுகளும் துன்பங்களும் என் பெற்றோருக்குப் புதிதாகவே இருக்கவில்லை. அதைப்போலப் போர்வெடியின் ஓசைகளும் எனக்குப் புதிதாகவே தெரிந்ததில்லை. போருக்குள் பிறந்தவனாதலால் இயல்பாகவே எனக்கு அவை பழகிவிட்டன.

அன்றைய நாட்களில் இலங்கை இராணுவத்தின் கிபீர் விமானத் தாக்குதல்கள் தமிழத் தேசங்களில் இயல்பாகவே மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருந்தன. அக்கிபீர்ச் சத்தத்திற்குப் பயந்து நாங்களெல்லாம் மாமரங்களுக்குக் கீழே வெட்டப் பட்டிருந்த பதுங்குகுழிகளில் காப்பெடுத்துக்கொள்வ துண்டு. எந்த நாளும் துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்கள் தொடர்ச்சியாகக் கேட்ட வண்ணமே இருக்கும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆலமரத்தடி முனியப்பர்கோவிலடிக்கு ஓடிச்சென்று, அவ்வால மரத்திற்குக் கீழ்த்தான் எல்லாச் சனங்களும் பதுங்குவதுண்டு.

"முனியப்பரே... எங்கட குலசாமியே... துலைவார் நாசங்கட்டப்போறாங்கள்போல கிடக்கு... நீ தானப்பா எங்களையெல்லாம் காப்பாத்த வேணும்... உன்னடியில வந்திருக்கிற ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சுக்கும் ஒரு கீறலும் வந்திரக்கூடாதப்பா... வாற பறுவத்துக்கு உனக்கு ஒரு பொங்கல் போடுவ மய்யா...."

முனியப்பர் கோயில் பூசாரி, உரத்த குரலில் நேர்த்தி வைக்கும் நினைவுகள் இன்றும் என் கண்முன்னே நிக்கின்றன. விமானக் குண்டுகள், அருகிலுள்ள பகுதிகளில் விழுந்து வெடித்தால்கூட முனியப்பரிடம் தஞ்சமடைந்தவர்களுக்கு எதுவும் ஆகியதில்லை. இதனால் ஊர்கூடிப் பொங்கலிடும் மரபும் அன்றைய நாட்களில் நடைபெற்று வந்தது. நவராத்திரி பூசைக்காலங்களில், குடியிருப் பின் முன்வாசலில் இருக்கும் அம்மன் கோயிலில் சாமி ஆடும் நிகழ்வும், மந்திர யந்திரச் சாகசங்களும் நிகழ்வதுண்டு. ஆகமம் சாராத வழிபாட்டு முறையே அங்கு மேற்கொள்ளப் படுவதால் கும்பம், கரகம், கோலாட்டம், தீக்குளிப்பென அம்மனுக்குப் பல்வேறுபட்ட சடங்குசார் நிகழ்வுகள் நடைபெறுவதுண்டு. இது குடியிருப்பு மக்களுக்குப் பெரும் திருவிழாவென்றே சொல்லலாம். என்னதான் சொந்த நிலங்களை இழந்து இங்கு இடம்பெயர்ந்து வந்திருந்தாலும், இம் மண்தந்த சந்தோசங்களை எந்தமண்ணும் தந்துவிடாத அளவிற்கு அந்தக்காலம் வசந்தகாலமாகவே இருந்தது.

அன்றைய நாட்களில் எல்லோரது வீடுகளும் தென்னை யோலைகளாலேயே வேயப்பட்டிருந்தன. அவை சிறு குடிசை வீடுகளாகவே அமைக்கப்பட்டிருந்தன. ஒரு சிறு அறையும், அவ்வறையோடு சேர்த்து சிறிய மண்டபமுமே அமைந்திருக்கும். அம்மண்டபத்தின் ஒரு மூலையே குசினியாகச் செயற்படுவதுண்டு. சிலர் வெளியே தனியாகவும் குசினியை அமைத்திருந்தார்கள். பெரும்பாலும் வீட்டுச் சுவர்கள், நீளமான வரிச்சுத் தடிகளையும், உருண்டையாகக் குழைத்த களிமண்ணுருண்டைகளையும் பயன்படுத்திக் கட்டப்பட்ட வரிச்சுவர்களாகவே காணப்பட்டன. சிலர் மண்கற்களாலும் சுவர் அமைத்திருந்தார்கள். வீட்டின் நிலம் சாணிகொண்டு மெழுகப்படும் சந்தர்ப்பங்களே இருந்தன. இல்லையேல் இலை, குழைகளை உரலுக்குள்போட்டு இடித்து அதன் சாற்றினாலும் நிலத்தினை மெழுகினார்கள். வீடு வேயும் நிகழ்வு நடக்கும்போதெல்லாம், நாங்கள் உதவிக்கு யாரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கவே தேவையில்லை. வீட்டுக்கூரையைப் பிரிப்பதைக் கண்டாலேயே, அயலவர்கள் எல்லோரும் கூடிவிடுவர். அயல் வீட்டாரின் உதவியினால் அன்று வீடு வேயும் வேலை பூர்த்தியாகி விடும். அன்றைய நாட்களில் இவ்வாறுதான் எல்லோருடைய வீடுகளும் வேயப்பட்டன. கிணறு வெட்டும் நிகழ்வும் இப்படித்தான் அரங்கேறுவதுண்டு. அன்று உதவி செய்த எல்லோருக்கும் சோறும் கோழிக்கறியும்தான் சாப்பாடு. இப்படி ஒற்றுமைகொண்ட ஓர் தேசத்தை நாம் அன்றுதான் காணமுடிந்தது. திலீபன் அண்ணாவின் நினைவு, அன்னை பூபதியின் நினைவு, மாவீரர் நாள், கரும்புலி நாள் உள்ளிட்ட நினைவு நாட்கள் வரும்போது, நடேசம்மான் திட்ட மாமரச்சோலையே சிவப்பு, மஞ்சள் கொடிகளால் விழாக்கோலம் பூண்டுவிடும். எல்லாச் சனங்களும் குடியிருப்புப் பகுதியைத் துப்பரவு செய்து, நேசறி மண்டபத்தில் திருவுருவப்படங்களை வைத்து ஒவ்வொருநாளும் மலர்தூவி அஞ்சலி செலுத்துவார்கள். நாங்களும் பாலர் வகுப்புப் படிக்கச்செல்லும் போதெல்லாம், தினமும் காலையில் பூத்தூவி அஞ்சலி செலுத்துவதுண்டு. மாலையிலும் அருகிலிருக்கும் நண்பர்கள் சேர்ந்து விளக்கேற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்தும் நினைவுகள் இன்றும் மனதில் இருக்கின்றன. அப்போதெல்லாம் எனக்கு நான்கைந்து வயது இருக்குமென நினைக்கிறேன்.

கிபீர் விமானங்கள், தாக்குதல்களை நிகழ்த்திவிட்டுப் போனவுடன், நண்பர்களுடன் சேர்ந்து, அந்தச் சிறு வயதுகளில் குண்டுச் சிதறல்களைப் பொறுக்கி விளையாடுவதுண்டு. அதுமட்டுமன்றிக் கிளித்தட்டு, கிட்டிப்புள், கண்ணாமூச்சி, முள்ளி, ஊஞ்சல், டக்குடிக்குடோஸ், சில்லிக்கோடு, புளிச்சல் முதலிய விளையாட்டுக்களும் எம்மை அலங்கரிப்பதுண்டு. 2000ஆம் ஆண்டு ஆனையிறவில் பாரிய சண்டை நடந்துகொண்டிருந்தது. அதனால் வன்னி நிலப் பகுதிகளில் விமானத்தாக்குதல்களுக்குப் பஞ்சமில்லை. எங்கும் போர் அவலமே மிஞ்சியது. எனக்கு அப்போது ஆறு வயது. நான் முதலாம் வகுப்பில் படிக்கவேண்டும். நடேசம்மான் திட்டத்திலிருந்து வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்திற்குச் சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரம் நடந்துசென்றுதான் படிக்கவேண்டியதாய் இருந்தது. கிபீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானத்தாக்குதல்கள், கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்த காலமாக அன்றைய நாட்கள் இருந்ததனால், அம்மா என்னை முதலாம் வகுப்பில் சேர்க்காமல் மீண்டும் ஒரு வருடம் பாலர் வகுப்பில் படிக்க விட்டார். பெரிய பள்ளிக்கூடம் போய்ப் படிக்கப்போகிறேன் என்ற கனவோடு இருந்த எனக்கு, ஏமாற்றமே மிஞ்சியது. அடுத்த வருடம்தான் என்னை முதலாம் வகுப்பில் சேர்த்தார்கள். பள்ளிக்கூடத்தில் தரப்படும் இலைக்கஞ்சிதான் எமக்கெல்லாம் அன்றைய பகலுணவாய் இருந்தது. பள்ளிக்கூடம் போய் வருகின்ற போதெல்லாம் அவ்வளவு மகிழ்ச்சியாகவே இருக்கும். பாடசாலை மைதானத்தின் நடுவே நிற்கும் நாவல்மரத்தில் நாவற்பழம் எறிந்து சாப்பிடுவதும், நடனமிட்டான் பிள்ளையார்கோயில் குளத்தில் குளிப்பதும், தாமரைப்பூ ஆய்வதும், புளியங்காய் பறிப்பதும், பின் எல்லாவற்றுக்கும் சேர்த்து அம்மாவிடம் அடிவாங்குவதும் வழமையாகிப்போனவைதான். அவ்வாறு கழிந்த அந்தச் சிறுவயதுப் பள்ளிக்காலத்து நினைவுகளில் மனம் அடிபட்டுப் பறந்துகொண்டிருந்தது.

> "தம்பீ டேய்.. என்ன கனவுகண்டு கொண்டிருக் கிறாய்... எழும்பு போவம்...."

அப்பாவின் குரல் என் கனவுலகத்தை உடைத்துவிட்டது. சுய நினைவுக்கு வந்தவனாய்,

> "எங்கயப்பா போறது? ஆமீற்றயே?"

> "ஓம்.. அமீற்றத்தான்... இப்பவே போனாத்தான் ஒருமாதி முன்னுக்குப் போய்ப் பேரைப் பதியலாம். இப்பிடியே இதில கிடந்தா, தண்ணி இல்லாமத் தான் சாகவேணும்...."

அப்பா, தங்கச்சியைத் தூக்கிக்கொண்டு பதிவு நடைபெறும் இடத்தை நோக்கி நடக்கத் தொடங்கினார். அம்மாவும், நானும் சனங்களின் முகங்களைப் பார்த்தபடி அப்பாவின் பின் நகர்ந்து கொண்டிருந்தோம். பெரும்பாலான சனங்களெல்லாம் ஆமியிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவை மேற்கொள்ளப் பயத்தில் ஆங்காங்கே யோசித்தவண்ணம் இருந்தனர். வயது போனவர்களும், கர்ப்பிணித் தாய்மார்களும், நோயாளர்களும், குழந்தைப்பிள்ளைக் குடும்பங்களுமே பதிவுக்காகக் காத்து நிற்பது தெரிந்தது. அருகில் செல்லச் செல்லப் பீதி ஆட்கொண்டது. மனதுக்குள் தைரியத்தை வரவழைத்தபடி அவர்களோடு நாங்களும் சென்று இணைந்து கொண்டோம். வரிசை மெல்ல மெல்ல நகர்ந்தது. மாலை மறைந்து இருள் கௌவத்தொடங்கியது. வரிசையில் நின்ற அதிகமானோர் இரவில் பதிவைமேற்கொண்டு, சோதனைச்சாவடிக்குள் செல்வதை விரும்பாமல் கழன்று சென்றார்கள். அதனால் வரிசைகளில் நெருக்கம் குறைந்தது. கணப்பொழுதில் பதிவுமேற்கொள்ளப்படும் இடத்தை அடைந்தோம். இராணுவத்தினர் குடும்ப அட்டையை வாங்கிப் பதிந்துவிட்டு, எல்லோரையும் சோதனைச்சாவடிப் பகுதிக்குக் கொண்டு சென்றார்கள். எல்லோருடைய மனதிலும் பயமே ஆட்கொண்டது. ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தபடியே பின்னால் செல்லவேண்டியதாயிருந்தது. அங்கு நாம் எதிர்பார்த்த அளவு சனங்களையே காணவில்லை. சோதனைகள் முடிந்தவுடன் உடனுக்குடன் அடுத்தகட்ட சோதனைக்காக, அடுத்த சாவடிக்கு இராணுவத்தினர் கொண்டுசென்றிருக்கக்கூடும் என்ற நினைப்பில், அங்கு நின்ற சனங்களில் எங்களுக்குத் தெரிந்தவர்கள் யாரும் நிற்கிறார்களா? என்று சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டிருந்தேன். திடீரெனத் துப்பாக்கி முனைகளோடு அங்குவந்த இராணுவத்தினர் எங்களைத் தனித்தனியாக அழைத்துச்சென்றார்கள். அப்பாவை, அம்மாவை, தங்கச்சியை, என்னை இவ்வாறு தனித்தனியாக அழைத்துச்சென்றார்கள்.

> "ஐயோ கடவுளே நாங்கள் சாகப் போறம்போல கிடக்கு. அப்பாவைச் சுட்டுப் போடுவாங்களோ? அம்மாவை என்ன செய்வாங்கள்? தங்கச்சியை என்ன செய்யப்போறாங்கள்? சித்திரவதை செஞ்சு கொல்லப்போறாங்களோ?"

என் மனதில் பல கேள்விகள் சந்தேகத்துடன் தோன்றி மறைந்து கொண்டேயிருந்தன. சற்றுத் தொலைவிலே பெண்கள் அழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன. சிங்களத்தால் உறுக்கும் சத்தங்களும் இடைக்கிடையே கேட்டவண்ணமிருந்தன. சிறுவர், சிறுமிகளின் அழுகைகளும் ஒலித்துக்கொண்டிருந்தன. எனக்கு மனதுக்குள் பீதி கிளம்பியது.

"கடவுளே... உலகளந்தவா.. நீதானப்பா எங்களுக்கு
ஒண்டுமாகாமப் பாத்துக்கொள்ளோணும்... நீதான்
எங்களுக்குத் துணையப்பா..."

மனதுக்குள் பிள்ளையாரப்பாவை வேண்டியபடி சென்று கொண்டிருந்தேன். என்னைச் சூழ காக்கிகளுடன் இராணுவத்தினர் வந்துகொண்டிருந்தனர். கண்ணுக்குத் தெரிந்த இடங்களிலெல்லாம் பாரிய மண்ணணைக் காவலரண்கள் தென்பட்டன. அவற்றின் வாசல்களில் இராணுவத்தினர் நின்றுகொண்டிருந்தனர். கண்ணில் தெரிகிற காவலரண்களை எல்லாம் வடிவாகப் பார்த்துக் கொண்டேன். அப்பா, அம்மா, தங்கச்சி யாராவது அங்கு கொண்டு செல்லப்பட்டார்களா? என்ற சந்தேகத்தில் என் கண்கள் ஓடித் திரிந்தன. யாரையும் காணவில்லை.

"இண்டைக்கு நாங்கள் சரி. எங்களையெல்லாம்
சித்திரவதை செஞ்சு கொல்லப்போறாங்கள்...
நாங்கள் இனி உயிரோட இருக்கமாட்டம்"

மனது பல எண்ணங்களைப் பயத்துடன் உற்பவித்துக் கொண்டே இருந்தது. என்னை மூடிய காவலரணுக்குள் கொண்டு சென்றார்கள். உள்ளே யாரும் இல்லை. அது பல அறைகள் கொண்ட பாரிய அரணாக இருந்தது. மண் மூட்டைகளும், பெரும் மரக்குற்றிகளும் அரணுக்குப் பலம்கொடுத்தன. அந்த மண்மூட்டைச் சுவர்களுக்கு இடையே, சதுரமான சிறிய இடைவெளிகள் தெரிந்தன. அவை நான் நிற்கும் அரணின் நாலாபுறச் சுவர்களிலும் தென்பட்டன. அவ்விடைவெளிகளில் ஆயுதங்கள் வைத்துக் குறிபார்க்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஒவ்வொரு இடைவெளிகளிலும் இராணுவத் தினரின் முகங்கள் தெரிந்தன. எனக்கு நடுங்கத் தொடங்கியது. கடவுளை வேண்டிய படி நின்றுகொண்டிருந்தேன். திடீரென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டையிலிருந்து நீளமான தடியொன்று என்னைத் தட்டியது. திரும்பிப்பார்த்தேன். கரி பூசிய முகத்துடன் இராணுவ வீரன் ஒருவனின் முகம் அதற்குள்ளால் தென்பட்டது. அவன் அந்தத் தடியால் என் உடம்பைத்தொட்டுத் தொட்டுச் சைகை காட்டினான். மேலில் அணிந்திருந்த சேட்டைக் கழற்றச் சொன்னான். கழற்றினேன். மீளவும் போடச்சொன்னான். போட்டேன். நாலாபுறமும் இருந்த இராணுவத்தினர், காவலரண் சுவர்களில் வைக்கப்பட்ட ஓட்டைகளினூடாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். காற்சட்டையைக் கழற்றச் சொன்னான். கழற்றினேன். தொடர்ந்து உள்ளாடையையும் கழற்றச்சொன்னான். பின்பு அணியச் சொன்னான். பெரும் பயப்பீதியுடன் அவன் சொல்வதையெல்லாம் செய்துகொண்டிருந்தேன்.

அவர்களின் சோதனையை அடுத்து, அடுத்த காப்பரண் அறைக்குள் போகச்சொன்னார்கள். உடல் பயத்தால் நடுங்கியது. காலெடுத்து வைக்கவே துணிவேற்படவில்லை. போகாமல் நின்றால் சுட்டுவிடுவார்கள் என்ற நினைப்பில் உள்ளே சென்றேன். அங்கு நாலைந்து இராணுவத்தினர் கடுமையான முகங்களுடன் நின்றுகொண்டிருந்தார்கள். ஒருவர் வந்து என் உடலைச் சோதனை செய்துவிட்டுச் சுற்றி நின்ற இராணுவ வீரர்களைப் பார்த்தான். அவர்களில் ஒருவன் ஏதோ கண்ணசைவால் பேச, என்னை அரணைவிட்டு வெளியேற்றினார்கள்.

"அடுத்த என்ன செய்யப்போறாங்களோ தெரியா...
கடவுளே நீதானப்பா காப்பாற்றோணும்?"

நான் பயத்துடன் மெல்ல மெல்ல நகர்ந்தேன். சில மீற்றர்கள் தொலைவில், சோதனைச்சாவடிக்கு அப்பால் இருந்த மற்றுமொரு திறந்தவெளிசிறைக்குள் கொண்டுபோய் விட்டார்கள். அங்கு நூற்றுக்கணக்கான சனங்கள் நின்றுகொண்டிருந்தார்கள். சோதனைகளை முடித்து உள்ளே வருபவர்களெல்லாம் தங்களுடைய உறவுகளா? அல்லது தங்களுக்குத் தெரிந்தவர்களா? என்று உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். உள்ளே சென்று அங்குமிங்கும் ஓடித்திரிந்து அம்மாவை, அப்பாவை, தங்கச்சியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் தேடித்திரிந்தேன். எல்லாம் புதுமுகங்களாகவே இருந்தன. மனதுக்குள் அழுகையே வெடித்துவிட்டது. எல்லா இடத்திலும் தேடியும் கண்டுபிடிக்க முடியாமல் அலைந்தேன். இறுதியில் நான் உள்ளே கொண்டுவந்து விடப்பட்ட பகுதியில் நின்று, சோதனைச் சாவடிப் பகுதியிலிருந்து வருபவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்தில் அம்மாவும், தங்கச்சியும் வந்து சேர்ந்தார்கள். அவர்களின் முகங்கள், பயத்தினால் உறைந்திருந்தன. தங்கச்சி கட்டாயம் அழுதிருக்கவேண்டும். ஏனெனில் அவளின் கண்கள் கண்ணீரை கசியவிட்டிருந்தன. என்னைக் கண்டதும் ஓடிவந்து அம்மா என்னை அணைத்துக்கொண்டாள். நான் ஒருபாடு அழுதே விட்டேன். நான் அழ என் தங்கையும் சேர்ந்து அழுதாள். அம்மாவும் தான். வாழ்க்கையில் இப்படி ஒரு கொடூரத்தை அனுபவித்ததே இல்லை. பிரிவின் வலியை அப்போதுதான் உணர்ந்து கொண்டேன். போர்க்களங்களில்கூட இப்படிப் பயப் பட்டதில்லை. அஞ்சியதில்லை. ஆனால் இங்கு என்ன நடக்குமோ? என்ன செய்வார்களோ? என்று அச்சப்படவேண்டிய நிலையே இருந்தது.

"தம்பீ அப்பா வந்திட்டேரா?"

"இல்லையம்மா காணேல. நானும் இப்பத்தான் வந்தனான். வந்து எல்லா இடத்திலயும் ஓடிப்போய்ப்பாத்தனான் ஒருடமும் இல்லை"

"நாங்க இதிலயே இருக்கிறம். நீ திருப்பியும் ஒருக்கா போய், உந்தச் சனங்களுக்குள்ள பாத்திட்டு வா... சிலவேளை எங்களத் தேடித்திரிவார்"

"சரியணே இதிலயே இருங்கோ.. பாத்திட்டு வாறன்"

நான் ஓட்டம் எடுத்தேன். எல்லா இடமும் தேடினேன். தெரிந்தவர்கள் நின்றால்கூட விசாரிக்கலாம் என்று பார்த்தேன். எல்லாம் புதிய முகங்களாகவே இருந்தன. ஆங்காங்கு மரங்களுக்குக் கீழ் இருந்த சனக்கூட்டங்களை எல்லாம் ஆராய்ந்தேன். அங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. அப்பா இங்கு வந்திருந்தால் கட்டாயம் எங்களைத் தேடித்திரிவார் என்ற நம்பிக்கையில் நின்று கொண்டிருப் பவர்களையும், ஆங்காங்கு அலைந்து கொண்டிருப்பவர்களையும் நோட்டமிட்டபடி அம்மா நின்ற இடத்தை நோக்கி ஓடினேன். அங்கே அம்மாவும், தங்கச்சியுமே நின்றுகொண்டிருந்தார்கள். ஏமாற்றம் மட்டுமே மிஞ்சியது.

"அம்மா... அப்பாவக் காணேலணே... அப்பா இன்னும் வரேலப்போல கிடக்கணே... வந்திருந்தா எங்களைத் தேடி இதில நிண்டிருப்பார்... அவர் இன்னும் வரேலப்போலதான் கிடக்கு"

என் வார்த்தைகள் அம்மாவை மேலும் கலங்கப்படுத்திற்று. நேரம் இரவு ஒன்பதைக் கடந்திருக்கவேண்டும். இராணுவத்தினர், பல வாகனங்களில் வந்து இரவுணவுகளைச் சனங்களுக்கு வழங்கிக் கொண்டிருந்தனர். இங்கு பல நூற்றுக்கணக்கான சனங்களே இருந்ததால், அடிபட்டு வாங்கவேண்டிய தேவை சனங்களுக்கு ஏற்படவில்லை. போதியளவான தண்ணீர் ராங்கிகள் வைக்கப் பட்டிருந்தன. அதனால் தண்ணீருக்கும் பிரச்சினை இல்லை. என்னதான் கிடைக்காதது இங்கு கிடைத்தாலும், சோதனைச் சாவடியில் தொலைத்துவிட்ட தம் உறவுகளுக் காகத்தான் சனங்கள் இங்கு காத்துக்கொண்டிருந்தார்கள். எங்கள் பார்வை, சோதனைச் சாவடியிலிருந்து வெளியேறும் வழியையே நோக்கியபடியிருந்தது.

"வாறது அப்பாவா? வாறது அப்பாவா?"

சந்தேகத்துடன் முகாமுக்குள் வரும் ஒவ்வொருவரையும் அவதானித்துக் கொண்டிருந்தோம். அப்பாவைக் காணவில்லை.

"அப்பாவை ஆமிக்காரங்கள் புடிச்சிட்டாங்களோ? தெரியா... புடிச்சுச் சித்திரவதை செய்யக் கொண்டு போட்டாங்களோ?"

மனதில் கேள்விகள் எழுந்து என்னைக் கலங்கவைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தன. நான் அம்மாவின் முகத்தைத் திரும்பிப் பார்த்தேன். அவரின் முகம் பொலிவிழந்து, முகாமுக்குள் வருபவர்களையே உற்று நோக்கியபடியிருந்தது.

"தம்பீ...."

திடீரென, எங்களுக்குப் பின்னால் சற்றுத் தொலைவிலிருந்து ஒரு குரல். அது அப்பாவின் குரல். திரும்பிப்பார்த்தேன். அப்பாவேதான். எங்களைநோக்கியே அவர் வந்துகொண்டிருந்தார்.

"அப்பா.... அப்பா..."

என்னையறியாமலே வீரிட்டுக் கத்தியபடி அப்பாவை நோக்கி ஓடினேன். அவருடைய கைகள் என்னை அணைத்துக்கொண்டன... என்னால் அழுகையை நிறுத்த முடியவில்லை... தேம்பித் தேம்பி அழுதேன். என் கரங்களும் அவரை இறுகத் தழுவிக்கொண்டன....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம்: 03**

நேரம் சுமார் இரவு பத்தைத் தாண்டிக் கொண்டிருந்தது. இரவுப்பொழுது என்பதால் சோதனைச்சாவடியைத் தாண்டிய மக்களின் வருகையும் சற்றுக் குறைந்துவிட்டது. பறிகொடுத்த உயிரை மீளவும் பெற்றுவிட்ட மகிழ்ச்சியில் இராணுவத்தினர் தந்த பாணையும், பருப்புக் கறியையும் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம்.

> "எல்லாம் ஏருங்க. ஒங்கலுக்குத்தான் பஸ் வந்திரிக்கு.... நாங்க ஒங்கல வேர முகாம் கொண்டு போறது ஏருங்க..."

இராணுவவீரர்கள் அங்கிருந்த மக்களைப் பேருந்துகளில் ஏற்றினார்கள். ஐம்பதுக்கும் மேற்பட்ட சிகப்பு நிறத்திலான பேருந்துகள், முகாம் வளாகத்துக்குள் நிறுத்தப்பட்டிருந்தன. இராணுவத்தினரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய எங்கு போகிறோம் என்றே தெரியாமல் சனங்களெல்லாம் குடும்பங் களாகப் பேருந்துகளில் எறத்தொடங்கினர். இராணுவ வீரர்களும், புலனாய்வாளர்களும் அங்குமிங்கும் பரபரப்புடன் திரிந்து கொண்டிருந்தனர். நாங்களும் இரவு உணவை உண்ட குறையில் கைகளைக் கழுவிவிட்டுப் பேருந்தில் ஏறிக்கொண்டோம். சுமார் ஒரு மணித்தியாலத்திற்குப் பிறகு பேருந்துகள் இராணுவப் பாதுகாப்புடன் நகரத்தொடங்கின. பேருந்துகளின் இரு வாசல்களிலும், பேருந்தின் உள்ளும் துப்பாக்கி முனைகளோடு இராணுவ வீரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். பனிபடர் பொழுதில், நிலவு நன்றாகத்தான் எறித்துக்கொண்டிருந்தது. இடையிடையே இராணுவத்தினரின் மத்தாப்பு வெளிச்சங்களும் வானில் எரிந்துகொண்டுதான் இருந்தன. தொலைவிலே இராணுவ வாகனங்கள் அங்குமிங்கும் நகர்ந்து கொண்டிருப்பது தெளிவாகவே தெரிந்தது. எங்குதான் எங்களைக் கொண்டுபோகிறார்கள் என்றே தெரியவில்லை. யாரிடம்தான் கேட்கமுடியும்? எல்லோரும் எங்களோடு வந்தவர்கள்தானே! நடப்பவற்றை அமைதியாக இருந்து பார்த்துக்கொண்டிருந்தேன். பேருந்தின் வேகம் சற்று அதிகரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனங்களைக் கிழித்துக்கொண்டு செல்லத்தொடங்கிற்று. இராணுவத்தினரின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இருக்கைகளுக்கு அளவாகவே எல்லாப்பேருந்துகளிலும் சனங்கள் ஏற்றப்பட்டிருந்தனர். நாங்கள் ஜன்னலோரமாகத்தான் அமர்ந்திருந்தோம். மூன்று பேர் அமரக்கூடிய அமர்க்கை. நான் ஜன்னலோரம் அமர்ந்து வெளியில் தெரியும் புதினங்களைப் பார்த்துக்கொண்டிருந்தேன். ஜன்னல்வழியாகக் சில்லென்ற காற்றுவந்து என்னைத் தழுவிக் கொண்டிருந்தது.

"அப்பா..."

"ம்...."

"ஏனப்பா ஆமிக்காரங்கள் எங்களச் செக்பண்ணும் போது, சுவருக்கு அங்கால ஒளிச்சிருந்து துவக்க நீட்டீற்று இருந்தவங்கள்? அவங்கள் கிட்டவந்து செக் பண்ணிருக்கலாம் தானேப்பா? தடியாலதான் தொட்டுத் தொட்டுக்காட்டிற்று இருந்தவங்கள்..."

"ஓமடா தம்பீ... அவங்கள் பயத்திலதான் அப்பிடி செக்பண்றாங்கள்... நாங்கள் ஏதும் குண்டுகள் கொண்டுவந்து வெடிச்சிடுவமோ எண்டு பயப் புடுறாங்கள் போல கிடக்கு"

"எங்களையெல்லாம் வேளைக்கு விட்டிற்றாங் களப்பா... நீங்கள் ஏனப்பா பிந்தி வந்தனிங்கள்? என்னப்பா செய்தவங்கள்?

"என்னில சந்தேகப்பட்டுப்போட்டாங்கள். அது தான் என்னய வேற இடத்துக்குக் கொண்டுபோய் விசாரிச்சவங்கள். எங்க இருந்தனி? என்ன செய்தனி? நீ புலியா? புலியக் காட்டித்தாறியா? எண்டு வெருட்டிக் கேட்டு எல்லாத்தையும் எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுதிட்டுச் செக் பண்ணிட்டு வேற வழியால கொண்டந்து விட்டவங்கள். என்னப்போல கன ஆம்பிளயளச் சந்தேகத்தில புடிச்ச வைச்சிருக் காங்கள். ஏதோ நல்ல காலம் என்னயக்கொண்டந்து விட்டிற்றாங்கள். இல்லாட்டி என்ர கதை சரி"

அப்பாவின் வார்த்தைகள் என் மனதுக்குள் ஆயிரம் எண்ணங்களைத் தோற்றுவித்துக்கொண்டிருந்தன.

"அப்பா வராட்டி நாங்கள் என்ன செஞ்சிருப்பம்?"

"அப்பாவத் தேடிக்கொண்டு நாங்கள் அதிலயே தான் இருந்திருப்பமா? இல்லாட்டி ஆமிக்காரங்கள் எங்கள அடிச்சு பஸ்ஸில ஏத்திருப்பாங்களா?

"அப்பாக்கு என்ன நடந்த எண்டு தெரியாம எங்கயெல்லாம் அலைஞ்சிருப்பம்?"

"யாரிட்ட போய்த்தான் கேட்டிருப்பம்?"

பல கேள்விகள் மனதில் எழுந்து மறைந்துகொண்டிருந்தன. புதுக்குடியிருப்பில இருந்து, ஒவ்வாரு இடமாக இடம்பெயர்ந்து குண்டு மழைக்குள்ளாலும், குருதி வெள்ளத்திற்குள்ளாலும், ஒப்பாரி ஓலத்திற்குள்ளாலும், பட்டினிச் சாவுக்குள்ளாலும் தப்பி வந்தபின், இங்கு அப்பாவைப் பறிக்கொடுத்திருந்தால் எங்களின் நிலை என்னவாகியிருக்கும்?.... எல்லாம் கடவுளின் சித்தம் என்று உலகளந்தவரை நினைத்துக்கொண்டேன். உலகளந்தவர்மீது சிறுவயதிலிருந்தே எனக்கு நல்ல வாரப்பாடு இருந்தது. 2002ஆம் ஆண்டு தேவிபுரத்தில் இருந்து இடம்பெயர்ந்து, புதுக்குடியிருப்பு உலகளந்தவர் பிள்ளையார்கோவில் வீதிவழியில், சுமார் ஐந்நூறு மீற்றர் தூரம் செல்லும்போது வரும் குட்டிப்பிள்ளையார் கோவிலடியில்தான் இருந்தோம். இரண்டு பிள்ளையார் கோவில் களிலும் பொங்கல் நடைபெறுகின்றபோது, பொங்கல் வாங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்காக நண்பர் கூட்டத்தோடு முதல் நபர்களாக நாங்கள்தான் செல்வதுண்டு. உலகளந்த பிள்ளையார் கோவில்வெளி வீதியில் கிரிக்கெட் விளையாடுவது, கிளித்தட்டு விளையாடுவது, கோவில் வளாகத்துக்குள் நண்பர்களோடு ஒளித்துப்பிடித்து விளையாடுவது என்று கோயிலடியே எங்களுக்கு மகிழ்ச்சியை அள்ளித் தந்துகொண்டிருந்த காலமது. திருவிழாக் காலத்தில் சாமியோடு ஊர்சுற்றுவது, தீப்பந்தம் பிடிப்பது, சண்டேசுவரர் தூக்குவது என்று எத்தனையோ சந்தோசங்கள் எமக்கு இங்குதான் கிடைத்தன. அந்நேரத்தில், அக்கோயில் பிரசாதங்கள்தான் எத்தனையோ குடும்பங்களை அங்கு வாழவைத்துக்கொண்டிருந்தன.

"தம்பீ... கறிக்குத் தேங்காயில்ல.. கோயிலடியில யாரும் தேங்கா உடைச்சிருந்தாப் போய் எடுத்திட்டு வாறியே..."

எத்தனையோ நாட்கள், கோவிலடியில் உடைக்கப்பட்டிருக்கும் தேங்காய்களைப் பொறுக்கிக்கொண்டு வந்து அம்மாவிடம் கொடுத்த பொழுதுகள் இன்றும்தான் மனதில் காட்சிகளாய் தெரிகின்றன. சுமார் இரண்டு, மூன்று மணித்தியாலப் பயணத்தை அடுத்துப் பேருந்தின் வேகம் சடுதியாகக் குறைந்து மெதுவாகப் பயணித்துக்கொண்டிருந்தது. ஜன்னலுக்குள்ளால் எட்டிப் பார்த்தேன். நாங்கள் போகும் பேருந்துக்கு முன்னாலும் பின்னாலும் வரிசையாக அதிகமான பேருந்துகள் நகர்ந்துகொண்டிருந்தன. பெரும்பாலும் எல்லாச் சனங்களையும் ஒரே இடத்திற்குத்தான் கொண்டு செல்கிறார்கள் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டேன். போகப்போகப் பேருந்து வேகம் குறைந்து, ஊர்ந்து செல்லத் தொடங்கியது. இறுதியில் நின்று நின்றே நகர்ந்து கொண்டிருந்தது. எங்களுடைய பேருந்துக்குள்ளிருந்த ஓரிருவர், இவ்விடத்தை ஓமந்தை என்று உறுதிப்படுத்திக்கொண்டார்கள். அவர்கள், போர்க்காலத்தில் நெடுங்கேணியில் இருந்ததால் இலகுவாக இவ்விடத்தினை மதிக்கமுடிந்ததாகக் கூறினார்கள். வீதி நீளத்திற்கும் பேருந்துகளின் அணிவரிசை தென்பட்டது. அதனால் ஒன்றன்பின் ஒன்றாகப் பேருந்துகள் நின்று நின்று மெதுவாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணித்துக் கொண்டிருந்தன. இறுதியில் அவ்வீதி ஓரத்திலே பேருந்து நிறுத்தப்பட்டது. சனத்திற்கு என்ன நடக்கிறது? ஏது நடக்கிறது? என்றே புரியவில்லை. அதனால் எல்லோரும் நடப்பது நடக்கட்டும் என்றபடி பயத்துடன் பேருந்தில் அமர்ந்திருந்தனர். அரைமணி நேரங்களின் பின்பு, முன்னுள்ள வாகனங்களின் செயற்பாடுகளுக்கேற்ப பேருந்து நிற்பதும் பின்பு ஊருவதுமாகச் சென்றுகொண்டிருந்தது. இப்படியே பொழுது நள்ளிரவைத் தாண்டிவிட்டது. கடுமையாகப் பனி அடித்துப் பொழிந்து கொண்டிருந்தது. நிலவும் ஒரு திசை வான்நோக்கி இறங்கிக் கொண்டிருந்தது. நட்சத்திரங்கள் முகில் நகர்ச்சிகளுக்கிடையே மின்னி மின்னி ஜொலித்துக்கொண்டிருந்தன. எங்கோ தொலைவில் ஒரு வால்வெள்ளி ஒன்று வானத்திலிருந்து கீழே விழுந்து மறைந்தது. நான் இயற்கையின் செயல்களை இரசித்தபடி ஜன்னலூடாகப் பார்த்துக்கொண்டிருந்தேன். தங்கச்சி, அம்மாவின் மடியில் தூங்கி விழுந்துகொண்டிருந்தாள். பேருந்துக்குள் சிறு குழந்தையொன்று வீரிட்டுக்கதறி, எல்லோருடைய தூக்கத்தையும் கலைத்துக் கொண்டிருந்தது. மீண்டும் பேருந்து போவதும் நிற்பதுமாகவே செயற்பட்டுக்கொண்டிருந்தது.

இப்படியே பொழுது கழிந்து விடிந்துவிட்டது. வீதியின் இருகரைகளிலும் பற்றைக்காடுகள் வளர்ந்திருந்தன. இடைக் கிடையே அழிவடைந்த நிலையில் வீடுகள். ஆங்காங்கு கட்டாக்காலி மாடுகள் மேய்ந்துகொண்டிருப்பதும் தெரிந்தது. பெரும்பாலும் இப்பகுதி மக்கள் இடம்பெயந்து போகும்போது, கைவிட்டுச் சென்ற கால்நடைகளாகவே அவை இருக்க வேண்டும். கீழ்வானிலிருந்து கதிரவன் எழுந்து பனிக்குளிரைக் குறைத்துக் கொண்டிருந்தான். இப்போது நன்றாகவே விடிந்துவிட்டது. முன்னுக்கு நிற்கும் பேருந்துகளும், பின்னுக்கு நிற்கும் பேருந்துகளும் இப்போது நன்றாகவே தெரிகின்றன. ஜீப்புகளில் வந்த இராணுவத்தினர், பேருந்துக்குள் இருந்த சனத்தொகைக்கேற்ப பணிசுகளையும், தண்ணீர்ப்போத்தல்களையும் தந்துவிட்டுச் சென்றனர். அதுதான் எல்லோருக்குமான காலையுணவு. பல் மினுக்கி, முகம் கழுவக்கூட முடியாத நிலையில் எல்லோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைச்சாப்பாட்டை முடித்துக்கொண்ட அந்த நினைவு இன்றும் மனதிலிருக்கிறது.

காலைச்சாப்பாட்டை அடுத்து மீளவும் பேருந்து நகரத் தொடங்கியது. சுமார் இரண்டு, மூன்று மணித்தியாலங்கள் ஆமைப்பயணத்தின் பின், ஒரு பாரிய சோதனைச் சாவடி முகாமில் பேருந்து நிறுத்தப்பட்டது. எமக்கு முன்னுள்ள வாகனங்களிலிருந்த சனங்கள் இறக்கப்பட்டுச் சோதனைச்சாவடி அரண்களுக்குள் அழைத்துச்செல்லப்படும் காட்சிகள் தெரிந்தன. இன்னொரு பக்கமாக ஒலிபெருக்கியில் சிங்களத்திலும், கொச்சைத்தமிழிலும் ஏதோ ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. சில பெண்கள், தலையிலடித்துப் புலம்பியபடி சோதனைச்சாவடி அரண் பகுதிகளில் நின்றுகொண்டிருக்க, அவர்களிடம் இராணுவத்தினர் ஏதோ விசாரித்துக்கொண்டிருந்தனர். சில இளைஞர்களை இராணுவத்தினர் ஜீப்புகளில் வேகமாக ஏற்றிச்சென்றார்கள். சுமார் ஒருமணித்தியாலத்தின் பின்னர், நாம் பயணித்த பேருந்திலிருந்த அனைவரும் இறக்கப்பட்டு, ஓரிடத்தில் இருத்தி வைக்கப் பட்டோம். எங்களைச் சூழ இராணுவத்தினரும், புலனாய் வாளர்களும் ஆங்காங்கு நின்றுகொண்டிருந்தார்கள்.

> "எல்லாம் உண்மை சொல்றது.... இங்க இருக்கிற ஆக்கல், கனக்க புலி ஆக்கல் எண்டு எங்கலுக்குத் தெரியும். எல்லா நியூசும் எங்கலிட்டே இரிக்கு. நாங்க புடிச்சா விடுறது இல்லை. நீங்க எங்கலிட்ட உண்ம பேசி சரண்டர் ஆகுங்க... நாங்க ஒங்கல விசாரிச்சு விடுறதுதான்.. இல்ல என்டா ஒங்கல நாங்க புடிச்சு வைக்கிறதுதான் சரியா..."

சிறிய ஒலிபெருக்கியில் அரைகுறைத் தமிழில் புலனாய்வு வீரனொருவன் அறிவித்துக்கொண்டிருந்தான். அவனுடைய அறிவித்தல் எல்லோருக்கும் பயத்தினைக் கிளப்பியது. ஆனாலும் யாரும் சரணடையத் தயாராகவில்லை. அதனால் கோபமடைந்த இராணுவத்தினர், சிலரை எழுப்பி அவர்களின் இயக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரையும், படையணியின் பெயரையும் சொல்லி இழுத்துச் சென்றனர். அதன்பின்னரே, முன்னாள் போராளிகள் பலர் பயத்தினால் கையையுயர்த்திச் சரணடைந்தனர். மிகுதிப்பேர் அமைதியாகவே இருந்துவிட்டனர். பிடிக்கப்பட்ட மற்றும் சரணடைந்த முன்னாள் போராளிகள், இராணுவ வாகனங்களில் ஏற்றப்பட்டு வேறு இடம் நோக்கிக் கொண்டுசெல்லப்பட்டனர். இதனால், எங்களோடு பேருந்தில் வந்தவர்களின் தொகையும் குறையலாயிற்று.

எல்லோரும் தனித்தனியாக அழைக்கப்பட்டுச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டோம். கிழவிகள், கிழவங்கள், குஞ்சுகள், குருமன்கள், கற்பிணிகள் என்று எல்லோரும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். சோதனைக்கு உட்படாமல் யாரும் தப்பித்துக்கொள்ள முடியாத அளவிற்குப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இராணுவத்தினர், எல்லோரையும் தனிமைப்படுத்தித் தனித்தனியாக விசாரித்துப் பதிவுகளை மேற்கொண்டனர்.

"ஒங்க பேர் என்னா?"

"சஞ்சை"

"ஒங்கட வயசு என்னா?"

"பதினாலு"

"ஒன்ன புலி புடிச்சதுதான?"

"இல்ல நான் புலி இல்லை சேர்"

"ஏ பொய்சொல்றது சரியில்லே.. உண்ம சொல்றது வேணும்... ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் உண்மையாத்தான் சொல்றன். நான்புலி இல்லை சேர்"

"ஒங்கட ஊர் எங்க?"

"புதுக்குடியிருப்பு"

"புதுக்கொடியிருப்பு எல்லாம் புலிதான். நீ பொய் சொல்றது?"

"இல்ல பொய்யில்ல சேர்"

"வீட்ட எத்தன பேரு?"

"நாலு பேர் சேர்"

"ஒங்கட அப்பா புலி தான?"

"இல்ல சேர் அப்பா புலி இல்ல."

"ஏ நீ பொய் சொல்றதுதான்..."

"இல்ல சேர் நான் பொய் சொல்லேல"

"ஒங்கட அம்மா புலிக்கு சமைச்சு கொடுத்த தான?"

"இல்ல சேர் நாங்க புலி இல்லை."

"ஏ ஒங்கலுக்கு தெரிஞ்ச புலி ஆக்கல் இங்க இருக்குதான? எல்லாம் காட்டித்தர வேணும்.. நாங்க ஒங்கல எல்லாம் விடுறது. சரியா?"

"இல்லை சேர்.. எனக்கு யாரையும் தெரியா சேர்.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஆயிரம் கேள்விகள் என்னைச் சூழ்ந்து கொண்டன. ஒவ்வொன்றிற்கும் பயத்துடனேயே பதிலளிக்கவேண்டியதாய் இருந்தது. ஒவ்வொருவரிடமும் இவ்வாறான கேள்விகளைக் கேட்டுத் தகவல்களை இராணுவத்தினர் பதிந்தெடுத்துக் கொண்டனர். இவ்விசாரணைகளில் பலர் மாட்டிக்கொண்டனர். பலர் சந்தேகத்தின் பேரில் பிடிக்கப்பட்டனர். எஞ்சியவர்களே பேருந்தில் ஏற்றப்பட்டோம். மீளவும் பேருந்து பயணிக்கத் தொடங்கியது. பேருந்துக்குள் பல இருக்கைகள் வெறுமையாய் இருந்தன. பலர் தம் உறவுகளைச் சோதனைச் சாவடியில் பறிகொடுத்துவிட்டுப் புலம்பிக்கொண்டிருந்தனர். பேருந்தின் வேகம் இப்போது அதிகமாய்த்தான் இருந்தது. யாருமற்ற வீதியின் வழியே, கிரவல் புழுதி பறக்கப் பேருந்து பயணித்துக் கொண்டிருந்தது. இரவிரவாகப் பேருந்து நின்று நின்று வந்ததால் உடல் மோசமாகவே களைப்படைந்திருந்தது. அதனாலோ என்னவோ, ஜன்னலோரத் தென்றலின் வருடல் என்னை நன்றாகத் தூங்கவைத்துக்கொண்டிருந்தது.

"தம்பீ... தம்பீ... எழும்படா.. அடுத்த செக்கிங் பொயின்ற் வந்திட்டு... எழும்படா.."

அம்மாவின் அதட்டல், என் தூக்கத்தைக் கலைத்துவிட்டது. விழித்துப் பார்த்தேன். பரந்த பெருங்காட்டின் நடுவில் பாரிய முள்வேலிமுகாம் அமைக்கப்பட்டிருந்தது. அது முள்வேலி சூழ்ந்த திறந்தவெளிச் சிறைச்சாலை என்பது நன்றாகவே தெரிந்தது. பல்லாயிரக்கணக்கான கூடாரங்கள் அங்கு தென்பட்டன. சனங்கள் இன்னும் அங்கு குடியமர்த்தப்படவில்லை. இங்குதான் நம் வாழ்க்கை போகப்போகிறது என்று தெரியாமல் சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டிருந்தேன்.

"ஏ எல்லாம் போலின்லே வாங்க... வாங்க.... நாங்க ஒங்கல செக்பண்ணி விடுறதான்.. எல்லாம் போலின்லே நில்லுங்க.. இங்கே புலி ஆக்கல் வந்தால் எங்கலிட்ட வாங்க.. நாங்க ஒண்ணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒங்கல செய்யிறது இல்லே. நாங்க விசாரிச்சு விடுறதானே... பயம் வேண்டாம்..."

ஒரு இராணுவவீரன் ஒலிபெருக்கியில் அறிவித்துக் கொண்டிருந்தான். யார்தான் சரணடைவார்கள்? யாருக்குத்தான் அந்தத் துணிச்சல் வந்துவிடப்போகிறது? எல்லோரும் அமைதியாக வரிசையில் நின்று சோதனைச்சாவடியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தோம். மறுபக்கம் விசாரணைகளும், பதிவுகளும் நடைபெற்றுக்கொண்டிருந்தன. எங்களுக்கு முன்னுக்குப் பேருந்துகளில் வந்தவர்கள் சோதனைகளையும், விசாரணைகளையும் முடித்துக்கொண்டபின், அவர்கள் முட்கம்பிவேலிசூழ் திறந்தவெளிச் சிறைக்குள் மாற்றப்பட்டார்கள். பல இளசுகள், குடும்பத் தலைவர்கள் என்று பலர் சந்தேகத்தின்பேரில் விசாரணைகளுக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். கணவனைப் பறிகொடுத்த பெண்களும், பிள்ளைகளைப் பறிகொடுத்த தாய்மாரும், உறவுகளைப் பறிகொடுத்த சொந்தங்களும் முள்வேலிகளைப் பிடித்தபடி புலம்பிக்கொண்டிருந்தனர். ஆனாலும் விசாரணைகளுக்காகத் தடுக்கப்பட்டவர்கள் விடுபடவில்லை. அவர்கள், வேறு முகாம்கள் நோக்கி இராணுவ வாகனங்களில் கொண்டு செல்லப்பட்டார்கள்.

நாங்களும் சோதனை செய்யும் பகுதியை நெருங்கி விட்டோம். எல்லோரையும் தனித்தனியாக அழைத்துச் சோதனை செய்தபின், வழமையான கேள்விகளையே கேட்டுப் பதிந்தெடுத்துக் கொண்டார்கள். சந்தேகத்திற்குரிய நபர்களைப் பிடித்துக் கொண்டே எஞ்சியவர்களை முகாமுக்குள் அனுப்பினார்கள். எங்களிடம் ஒன்றும் இல்லை. வெறும் குடும்பக்காட், பிறப்புச் சான்றிதழ்கள் உள்ளிட்ட சிறிய பொலித்தீன் கைப்பை மாத்திரமே இருந்தது. மாற்றுவதற்குக்கூட வேறு ஆடைகளும் இல்லை. ஆமியிடம் சரணடையும்போது, போட்டிருந்த உடுப்புடனேதான் வந்திருந்தோம். நாங்கள் மட்டு மல்ல எம்மோடு வந்த பல குடும்பங்கள் வெறுங்கையோடுதான் வந்திருந்தார்கள். உயிர் தப்பினால் மட்டும் போதும் என்று நினைத்திருந்த எமக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டினால் சாவில்லை, ஆமியின் சித்திரவதைகளால்தான் சாவு என்பது கொஞ்சம் புலப்படத்தான் தொடங்கியது.

முள்வேலி முகாம். இது பெரிய முகாம். அந்த முகாம் வாசலில் நடப்பட்டிருந்த பெரியபலகையிலிருந்த zone - 04 என்ற பெயர் இன்னும் கண்ணுக்குள்தான் நிக்கிறது. அதுதான் இந்த முகாமின் பெயர் என்று பின்புதான் விளங்கியது. "சோன் போர்" என்ற சொல், அன்று எல்லோரின் நாவிலும் அதிகம் உச்சரிக்கப் பட்டது. பரந்த வெளி முகாம். பெரிய வனப்பகுதிகளை அழித்து, வெட்டையாக்கி இம்முகாம் அமைக்கப்பட்டிருந்தது. பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் தங்குமளவிற்குத் தறப்பாழ் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. யுஎன்எச்சிஆர், யுனிசேவ் என்ற நிறுவனங்களின் பெயர்களைத் தாங்கியவைகளாக அக்கூடாரங்கள் காட்சிகொடுத்தன. சனங்கள் எல்லோரும் தமக்குப் பிடித்தமான கூடாரங்களில் சென்று அமர்ந்து கொண்டனர். நாங்களும் ஒரு வீரைமரத்திற்குக் கீழிருந்த கூடாரத்திற்குள் சென்று அமர்ந்து கொண்டோம். இப்பொழுதான் ஒரு சந்தோசம். நமக்கென்று ஒரு சிறிய தறப்பாழ் வீடு. இனி எந்த அலைச்சலும் இல்லை என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டேன். சனங்களெல்லாம் இந்த முகாமுக்குள்தான் அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தனர். கூடாரத் துக்குள் இருந்து வெளியில் வந்து புதினங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். சனங்களெல்லாம் தமக்குப் பிடித்தமான கூடாரங்களைத் தெரிவுசெய்து கொண்டிருந்தனர். ஒருபக்கம் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் பழைய உடுப்புப்பொதி மற்றும் உலருணவுப் பொதிகளை வாகனங்களில் வந்து வழங்கிக் கொண்டிருந்தன.

> "அம்மா... அம்மா.. அங்க ஏதோ சாமான் குடுக்கிறாங்கள் போல கிடக்கு... என்னெண்டு பாத்திட்டு வாறனணே..."

என்றபடி ஓட்டமெடுத்தேன். வரிசையில் நின்று அவற்றை வாங்கிக்கொண்டேன். சனங்களும் புதினமறிந்து பொதி கொடுக்கும் இடத்தைநோக்கி ஓடினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி என்னடாப்பா குடுக்கிறாங்கள்?"

"உடுப்புப்பையும், சாப்பாட்டுச் சாமான்களும் குடுக்கிறாங்கள்.. வேளைக்கு ஓடிப் போங்கோ சரியான சனம் கூடிற்றுதுகள்..."

ஒரு கிழவியின் கேள்விக்குப் பதிலளித்தபடி கூடாரத்தை அடைந்தேன். எல்லோரும் பைக்குள் என்ன கிடக்கின்றது என்ற ஆர்வத்தில் நின்றுகொண்டிருந்தனர். உடுப்புப்பையைத் திறந்து பார்த்தேன். யாரோ பாவித்த உடுப்புக்கள் என்பது தெரிந்தது. பெரிய இரண்டு சேட்டுக்கள். ஒரு சாறம், ஒரு காற்சட்டை. இரண்டு சாறி உள்ளிட்ட ஆடைகள் இருந்தன. வெறுங்கையுடன் வந்த எமக்கு இது கிடைத்ததே பெரிய புண்ணியம் என்று நினைத்துக் கொண்டேன். ஒருபக்கத்தால் அம்மா உணவுப்பொதியை ஆராய்ந்துகொண்டிருந்தார். பிஸ்கட் பைகள், அங்கர், சீனி, தேயிலை என்று பல உணவுப்பொருட்கள் அதற்குள் இருந்தன. நான் பிஸ்கட் பையொன்றை உடைத்து, ஐந்தாறு பிஸ்கட்டுகளைக் கொறிக்கத்தொடங்கினேன். எங்கு பார்த்தாலும் சனங்களே ஓடித்திரிந்தனர். பல இடங்களில் நிறுவனங்கள், அத்தியவசியத் தேவைகளுக்கான சாமான்களை வழங்கிக்கொண்டிருந்தன. அப்பாவும் சனங்களோடு சனங்களாக வரிசையில் நின்று, சாமான்களை வாங்கி வந்தார். மதியமும் உணவுப் பார்சல் வழங்கப் பட்டது. இரவும்தான். இப்படி வாகனங்களில் கொண்டுவந்து மக்களுக்குரிய உணவுகளையும், அத்தியவசியப் பொருட்களையும் நிறுவனங்கள் வழங்கிக்கொண்டிருந்தன.

ஓரிரு நாட்களுக்குள் இம்முகாம் சனத்தினால் நிரப்பப் பட்டது. இது இறுதியாக அமைக்கப்பட்ட முகாங்களில் ஒன்று என்பது எல்லோருக்கும் பின்புதான் தெரியவந்தது. வன்னிப் போர்க்களங்களிலிருந்து ஆமியிடம் சரணடைந்த மக்கள், கட்டம் கட்டமாகப் பல முகாங்களில் குடியமர்த்தப்பட்டனர். "முத்துக் குமாரசுவாமி முகாம்", "ஆனந்த குமாரசுவாமி முகாம்", "அருணாசலம் முகாம்", "பூவரசங்குளம் முகாம்" உள்ளிட்ட பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாங்களில் அவர்கள் தங்கவைக்கப்பட்டிருந்தனர். போர் முடிவுக்கு வருவதற்கு முன்னர், ஆமியிடம் சரணடைந்த அதிகளவான மக்கள் இம் முகாங்களிலேயேதான் தங்கவைக்கப் பட்டிருந்தனர். போர் முடிவுக்கு வந்த இறுதிநாட்களில் சரணடைந்தவர்கள் பெரும்பாலும் "சோன் போர்" முகாமில்தான் குடியேற்றப்பட்டனர். எல்லா முகாங்களும் பெருங்காட்டுப் பகுதிகளிலேயே அமைக்கப்பட்டிருந்தன. யாரும் வெளியேறாதபடி பல அடுக்கு முட்கம்பி வேலிகள் சூழ, சுமார் ஒவ்வொரு இருபது மீற்றர்களுக்கு இடையிலும் இராணுவக் காவலரண்கள் அமைக்கப்பட்டு மக்கள் அவதானிக்கப்பட்டு வந்தனர். மக்களுக்குத் தேவையான அனைத்தையும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களே வழங்கிக்கொண்டிருந்தன.

நாட்கள் நகர்ந்தன. மக்களின் வசதிகளை இலகுவாகப் பூர்த்தி செய்யும் பொருட்டு "சோன் போர்" முகாமானது ஏ, பீ. சீ, டீ, ஈ எனப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. நாங்கள் 'C" பிளக்கில் (Block) இருந்தோம். ஓரிரு கிழமைகளுக்குப் பிறகு, சாப்பாட்டுப் பொதிகள் வழங்கப்படுவதும் நிறுத்தப்பட்டது. ஒவ்வொரு பிரிவுகளுக்கும் ஒவ்வொரு பொதுக் கிச்சின் அமைக்கப் பட்டுச் சமைத்த உணவே எல்லோருக்கும் வழங்கப்படலாயின. அதனால் மூன்று நேரச் சாப்பாட்டுக்கும் வாளிகளுடன் வரிசையில் நிக்கவேண்டியதாயிற்று. எங்கள் வீட்டில் அந்தப்பொறுப்பை நானே எடுத்துக்கொண்டேன். காலை ஒன்பது மணிக்குக் காலைச்சாப்பாடு வழங்கப்படும். நான் எட்டுமணிக்கே வரிசையில் நிற்பதற்குச் சென்று விடுவேன். என்னைப்போலப் பல சிறுசுகள் வாளிகளுடனும், கிண்ணிகளுடனும் வந்து நிற்பதுண்டு. அதைப்போல மதியம், இரவுச்சாப்பாடுகளுக்கும் வேளைக்கே வரிசையில் வந்து நிற்பதுண்டு. உணவு, சமைத்து வழங்கப் பட்டாலும், நிறுவனங்களும் சில வேளைகளில் அத்தியவசிய உணவுப்பொருட்களையும் வாகனங்களில் வந்து வழங்குவதுண்டு. வன்னியில் ஒருநேர உணவே இல்லாமல் உப்புக் கஞ்சியைக்குடித்த எங்களுக்கு, இங்கு கிடைக்கும் உணவுகள், சாப்பாட்டின் மேலிருந்த ஆசையையே தணித்துவிட்டன. ஏனெனில் குடல் சுருங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டதால் ஆசைப்பட்டமாதிரி உணவுகளைச் சாப்பிட முடியாத நிலையே இருந்தது. எங்களுக்கு மட்டுமல்ல இங்கிருக்கும் அனைத்துச் சனங்களுக்கும் இதே நிலைதான். ஒரு பிடி உணவு உண்டபின் வயிறு பொருமிவிடும். பின்பு எப்படிச் சாப்பிடுவது? ஆனாலும் ஆசையின் பொருட்டுக் கிடைக்கும் உணவுகளை எல்லாம் சேர்த்து வைத்துக்கொண்டோம்.

பட்டினிச்சாவில் கிடந்த மக்களுக்கு, இப்படி அளவுக்கு அதிகமான உணவுப்பொருட்கள் கிடைத்தனால் அவற்றை உண்டுவிட்டுப் புதிய நோய்க்கு ஆளாகினார்கள். நாங்களும் தான். எங்களுக்கு அருகில் இருந்தவர்களும் தான். பல மாதங்களாக உணவின்றிப் பலவீனப்பட்டுப்போய் இருந்த எங்களின் உடல், உணவின்றிச் செயற்பட இசைவாக்கமடைந்துவிட்டது. திடீரெனக் கண்டகண்ட உணவுகளைச் சாப்பிடும்போது உடல் தன்னிலை இழந்து, மேலும் பலவீனப்பட்டு நோய்த்தாக்கத்திற்கு உட்படத் தொடங்கியது. அந்தச் ஷெல்லடிகளில் உணவின்றி, உப்புக் காற்றில் வாழ்ந்தபோது நோயின்றி இருந்தவர்கள், இங்கே பலவீனப்பட்டு நோய்க்கு ஆளாகினர். பல நூற்றுக்கணக்கானோர் இங்கு நோய்களினால் இறந்துபோயினர். பெரும்பாலான சனங்கள், இம்முகாமின் ஓரத்தில் இருந்த பாரிய தறப்பாழ் கொட்டில் வைத்தியசாலையில் தஞ்சமடைந்தனர். அவ்வைத்தியசாலையில் கடமையாற்றுவதற்கு இராணுவத்தினரால் சிங்கள வைத்தியர்களும், தாதியர்களும் கொண்டுவரப்பட்டனர். கட்டில்களற்ற வைத்திய சாலையில் பல்லாயிரக் கணக்கானவர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த காட்சி இன்னும் என் மனதில் இருக்கிறது. நானும் பல தடவைகள் சென்று முட்கம்பி கிழித்த காயங்களுக்கு மருந்து கட்டியிருக்கிறேன். ஒரு நாள் காய்ச்சல் என்று போன என்னை மறித்துச் சேலைன் ஏற்றிவிட்டார்கள். மருந்தெடுக்க வந்த என்னை வாட்டில் மறித்தது வீட்டில் தெரியாது. அவ்வளவு சனத்திற்குள் எங்குதான் விசாரிப்பார்கள்? எங்குதான் தேடுவார்கள்? எப்படி ஆவது கூடாரத்திற்குப் போய்விடவேண்டும் என்றே நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனாலும் சேலைன், ஒரு ஒரு துளியாக விழுந்து முடிவதற்குள் நாளையாகிவிடும்போல் இருந்தது. அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுநீர்கழிக்கச் செல்லும் சாட்டில், சேலைன்போத்தலோடு ஓடிவந்து, கையில் கொழுவிக்கிடந்த ஊசியையும், வயரையும் பிடுங்கியெறிந்துவிட்டுப் போன நிகழ்வை என்றும் மறக்க முடியாது.

முகாமுக்குள் வந்து இருவாரங்கள்தான் ஆகியிருக்கும் நிலையில், போதிய உணவுகள் கிடைக்கத்தொடங்கிய நிலையிலும் மக்கள் புதிய நோய்களுக்கு ஆளாகினர். நானும்தான் புதிய வருத்தத்தினால் பாதிக்கப்பட்டேன். எழுந்து நடக்கவே முடியாத நிலையில் உடல் பலவீனப்பட்டு விட்டது. கொஞ்சம் சூரிய ஒளி பட்டால்கூடக் காய்ச்சல் காயத்தொடங்கிவிடும். அதனால் அம் முகாமில் இருக்கும் வீரை, பாலை மரங்களுக்குக் கீழே பாய் விரித்துவிட்டுப் படுத்திருப்பவர்களோடு நானும் ஒருவனாய் படுத்திருப்பேன். சூரியன் நகரும்போது மரக்கிளைகளுக்குள்ளால் வரும் கதிர்கள் பட்டால்கூட, எனக்குக் காய்ச்சல் காயத் தொடங்கிவிடும். மருந்து எடுத்தும் சரிவராத நிலையில், முகாம் வைத்தியசாலையில் தந்த மருந்துகளையே அம்மாவின் கரைச்சல் தாங்க முடியாமல் மீண்டும் மீண்டும் போடுவதுண்டு. மாலை ஆறு மணியாகியவுடன் எனக்குப் பார்வை தெரியாமல் போய்விடும். இதனை அவதானித்த சிலர் எனக்கு மாலைக்கண் நோய் என்று பேசிக்கொண்டனர். நடக்கமுடியாத பலவீனம் வேறு என்னை வாட்டிக்கொண்டிருந்தது. மாலையாகினால் கூடாரத்தைவிட்டு எங்கும் வெளியே செல்லமுடியாத நிலையில் இருப்பேன். இந்த நாட்களில் அப்பாதான் வரிசையில் நின்று சாப்பாடு வாங்கி வரப் பழகிக்கொண்டார். நான் கூடாரமும், மரநிழலும், பாயுமாகவே கிடந்தேன்.

நாட்கள் நகர்ந்தன. ஆனாலும் என் வருத்தம் குணமாக வில்லை. இப்போதெல்லாம் மாலையானதும் எனக்குப் பூரணமாகவே கண்கள் பார்வையிழந்துவிடும். வெளிச்சம் இருந்தாலும் பார்வை தெளிவற்றே இருந்தது. இரவில் கூட மூத்திரம் பெய்யப்போவதென்றால், அம்மாதான் என்னைப் பிடித்துக் கொண்டுபோய் வெளியில் விடவேண்டியதாய் இருந்தது. பல நாட்கள், அப்படி அம்மாவின் துணையுடன் போனாலும், பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடவைகள் நிலத்தில் தடக்கி விழுந்த சந்தர்ப்பங்களும் உண்டு. அந்த நாட்களில் தனியே நடமாடமுடியாத மனிதனாகவே நான் வாழ வேண்டியதாயிருந்தது. எங்கள் வீட்டில் எனக்கு மட்டுமே இப்படி ஒரு வருத்தம். ஏனையவர்கள் நலமாகவே இருந்தனர். என்னைப் போலவே எங்கள் கூடாரத்திற்கு முன்னால் இருந்த அண்ணன் ஒருவரும் வருத்தத்தினால் பீடிக்கப்பட்டிருந்தார். பகல் நேரத்தில் கூட, மக்கள் நடமாடிக்கொண்டிருந்தாலும், கூடார வாசலுக்கு முன்னால் நடக்கமுடியாத நிலையில் வந்து மூத்திரம் பெய்வார். வெக்கமே தெரியாத நிலைக்கு அந்த இளந்தாரியை, அந்த நோய் பலவீனப்படுத்திவிட்டது. அவரைப்போலவே நானும் எத்தனை நாட்கள் வாசலில் வந்து மூத்திரம் பெய்திருக்கிறேன். நான் மட்டுமல்ல, அவர் மட்டுமல்ல எங்களைப்போலப் பலர் அந்த முகாமில் இப்படிப் புதுவித வருத்தங்களால் பீடிக்கப்பட்டிருந்தனர். இறப்புக்களும் இப்போது அதிகரித்து விட்டன. எங்கள் கூடாரத்திற்கு முன்னால் இருந்த அண்ணனை ஒருநாள் வைத்திய சாலைக்குக் கொண்டுபோனதுதான் தெரியும். மறுநாள் பிரேதமாகவே வந்தார். நானும் இறந்துவிடுவேன் என்றே நினைத்துக்கொண்டிருந்தேன். அப்பா, சாப்பாட்டு வரிசையில் போய் நிற்பதிலையே காலத்தைக் கழித்தார். அம்மா தண்ணீர் எடுப்பதற்கு வரிசையில் காத்துக்கொண்டு இருப்பதிலேயே காலத்தைக் கழித்தார். நானோ கூடாரமும், மர நிழலும், வைத்தியசாலையுமாகவே திரிந்தேன். தங்கச்சியோ அம்மாவின் பின்னாள் திரிந்தாள்.

முகாம் வாழ்வில் தண்ணீர்ப்பிரச்சினை பெரிய பிரச்சினை யாகவே இருந்தது. அவ்வளவாயிரம் மக்களுக்கும் பௌசர்கள் மூலமே தண்ணீர் வழங்கப்படலாயிற்று. சில பகுதிகளில் குழாய்க் கிணறு இருந்தாலும் அவ்விடத்தில் கூடும் வரிசை, பல நூறு மீற்றர்கள் தூரம்வரை நீண்டுசெல்லும் நிலையே இருந்தது. அதனால் ஒவ்வொரு பிளக்குகளுக்கும் பௌசர் வரும் நேரம் குறிக்கப்பட்டிருந்தது. அதனால் மக்கள் வரிசையில் வாளிகளை, வேசன்களை, கேன்களை அடுக்கிவிட்டுக் காத்திருந்து தண்ணீர் வாங்கவேண்டிய நிலையே இருந்தது. அதுவும் ஒரு குடும்பத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாளைக்கு 20 லீற்றர் தண்ணீரே வழங்கப்பட்டது. அன்றைய நாட்களில் சாப்பாடு, குளிப்பு, உடுப்புத்தோய்ப்பு என்று அக் கொஞ்சத் தண்ணீரிலேயே சமாளிக்கப் பழகிக்கொண்டோம். அம்மா, கூடாரத்திற்கு வெளியே வீரைச்சுள்ளிகள் மூட்டிக் கொதிக்கவைத்துத் தரும் இரண்டு, மூன்று லீற்றர் தண்ணீரை, ரம்ளரினால் அள்ளிக் குளித்துவிட்டு மீதித்தண்ணீர் வைக்கும் சந்தர்ப்பங்கள் மாதக்கணக்காய் நிகழ்ந்ததுண்டு. ஒரு நாள் ஒருவர் மாத்திரமே குளிக்கும் வண்ணம், மக்கள் செயற்பட்டு வந்தனர். இன்று நான். நாளை அம்மா. மறுநாள் அப்பா. அடுத்தநாள் தங்கச்சி இப்படியே அங்கு வாழ்ந்த மக்களின் நிலை காணப்பட்டது. தண்ணீர்ப் பிரச்சினைபோக மலங்கழிப்பதிலும் பாரிய பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டியதாய் இருந்தது. குழாய்க் கிணற்றடியும், மலசலகூடப் பகுதியும் 24 மணித்தியாலங்கள், சேவை நிலையங்களாகவே இயங்கிக்கொண்டிருந்தன. எந்த இடத்திலும் நூறு, இருநூறு மீற்றர்கள் தூரம் வரை வரிசையில் காத்திருந்தே காரியத்தை நிறைவேற்றவேண்டியதாய் இருந்தது.

மலம் கழிப்பதாய் இருந்தால் அதிகாலை மூன்று, நான்கு மணிக்கே போய் வரிசையில் நின்றால்தான் இருபது, இருபத்தைந் தாவது ஆளாக நிற்கமுடியும். காலையானால் வரிசை பழைய நிலைக்கு நீண்டுவிடும். அப்படி மலசலகூடத்திற்குள் போய் குந்துவதற்கிடையில், காத்துக்கொண்டிருப்பவர்கள் கதவில் தட்டி நேரம் முடிவடைந்து விட்டதற்கான அறிகுறியைத் தருவார்கள். சுமார் இரண்டு, மூன்று நிமிடங்களே மலங்கழிக்க ஒவ்வொருவரும் எடுத்துக்கொள்ளும் நிலையே நிலவியது. சுதந்திரமாக மலம் கழிக்கமுடியாத நிலை. முன்னால் பலநூறுபேர் காத்துக் கொண்டிருப்பதும், நேரம் முடிவடைந்த அறிகுறியாகக் கதவில் தட்டப்படுவதும், குறித்த சில நிமிடங்களில் மலத்தைக் கழித்துவிட வேண்டும் என்ற இலக்கினை உருவாக்கிவிடும். அதனால் உள்ளே போகும் ஒவ்வொருவரும் போன வேகத்திலேயே வெளியேறி விடுவதுண்டு. மலங்கழிப்பதே அன்றைய நாட்களில் பெரும் போராட்டமாகவே இருந்தது. மலங்கழுவுவதற்குரிய தண்ணீர், அருகில் ராங்கில் வைக்கப்பட்டிருக்கும். அந்தற் ராங்கிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீரைச் சிறிய ஐந்து லீற்றர்கள் கொள்ளளவுடைய வாளியில் எடுத்து வந்து, வரிசையில் நின்று, குறித்த நேரத்தில் மலங்கழித்துவிட்டு, அவ்வாளித் தண்ணீரில் மலங்கழுவியபின், எஞ்சும் தண்ணீரில் கால்கை கழுவியே எல்லோரும் வெளியேறுவர். தண்ணீரின் அருமையை அன்றைய நாட்களில் முகாமில் வாழ்ந்தவர்கள் உணர்ந்த தருணங்கள் கொஞ்சமல்ல. பலர் வரிசையில் நின்று மலசலகூடத்தை நெருங்குவதற்கிடையில் தங்களை அறியாமலே மலங்கழித்துவிட்ட சந்தர்ப்பங்களும் இருந்தன. இவ்வளவு வலிகளையும், வேதனைகளையும் அனுபவித்துக்கொண்டே அந்த முகாம் வாழ்வு பயணித்துக் கொண்டிருந்தது. பல பகல்கள் போயின. இரவுகள் வந்தன. இப்படியே எத்தனையோ நாட்கள். ஆனாலும் எங்குபோய் முடியும் இந்த வாழ்க்கை? என்று தெரியாமலேயே அந்த முகாம் வாழ்வு பயணித்துக்கொண்டிருந்தது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம்: 04**

அன்றொருநாள் காலை நேரமிருக்கும். வரிசையில் நின்று காலைக்கடனை முடித்துவிட்டு, அம்மா வைத்துத் தந்த சுடுதண்ணீரில் மேலைக்கழுவிக்கொண்டேன். பின் கூடாரத்திற்குள் இருந்த பாயை எடுத்துக்கொண்டு வீரை மரத்தடியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தேன். அப்போதெல்லாம் காய்ச்சல் எனக்குப் பூரணமாக மாறாத நிலையிலேயே இருந்தது. வைத்தியசாலையில் மருந்து எடுத்து எடுத்துக் களைத்துவிட்ட நிலையில் இறப்பை நோக்கியே வாழ்க்கை போய்க்கொண்டிருந்ததாக உணர்ந்தேன்..

"தம்பீ எங்க போறாய்?... இப்படியே வருத்தத் தோட படுத்துக் கிடந்தா எப்ப வருத்தம் மாறுறது? வெளிக்கிடு ஆசுப்பத்திரிக்குப் போட்டு வருவம். 'D" பிளக்கிலதானாம் பத்மாக்கா இருக்கிறா.. அவோட்டயும் ஒருக்காப் போட்டு வருவம் வெளிக்கிடு."

"போம்மா என்னால ஏலாது.. நான் வரேல.. நீங்கபோய் மருந்தெடுத்திட்டு வாணே...."

"தம்பி விளையாடாம வா. இன்னொருக்கா மருந் தெடுத்துப் பாப்பம். வேற டொக்டர்மார் இருந்தால் நல்ல மருந்தேதும் தருவாங்கள்.. அங்க போட்டு வரேக்க பத்மாக்காட்டயும் ஒருக்கா போட்டு வருவம். ஏதும் தருவாடா..."

அம்மாவின் கரைச்சல் தாங்க முடியாமல் வைத்தியசாலைக்குப் போகச் சம்மதித்தேன். தனியே வைத்திய சாலைக்குப் போவதாக இருந்தால் மறுத்திருப்பேன். ஆனால் பத்மாக்காவிடமும் போவதால் சம்மதித்துவிட்டேன். நாங்கள் புதுக்குடியிருப்பில் இருந்தபோது எங்களின் வீட்டுக்கு அருகில் இருந்தவாதான் பத்மாக்கா. அவவின் கணவர் மருத்துவப்பிரிவுப் போராளியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தவர். அவர்கள் போராளி குடும்பமாக இருந்ததால் பொருளாதாரத்திலும் சற்று உயர்வாகவே இருந்தார்கள். பத்மா அக்காவிற்கு ஏதும் சுகவீனம் என்றால் அம்மாதான் அவர்களின் வீட்டில் சமையல் வேலை செய்வதுண்டு. அவர்களுக்குச் சிறு குழந்தைகள் இருந்தார்கள். அவர்களைக் குளிப்பாட்டுதல், மாவிடித்தல், மாவறுத்தல், தூள் இடித்தல் என்று சில வேலைகளையும் சதுர உதவியாக அம்மா செய்துகொடுப்பதுண்டு. அதனால் அவர்களுக்கு எங்களின் மேல் நல்ல வாரப்பாடு இருந்தது. நான் சிறுவனாக இருந்ததால், அம்மா எங்கு சென்றாலும் நானும் அம்மாவின் பின்னாலேயே சென்றுவிடுவதுண்டு. பத்மாக்காவின் வீட்டிற்குப் போனால், அங்கு நிற்கும் கொய்யா மரங்களில் ஏறுவதும், கொய்யாப்பழம் பறித்து உண்பதும் என்று எனக்கு ஒரே மகிழ்ச்சியாகத்தான் இருக்கும். அதுமட்டுமன்றி அங்கு சென்றால் ஏதாவது சாப்பாடு கிடைக்கும் என்ற எதிர்பார்பும் இருந்தது. அது உண்மைதான். போர்க்காலம். விமானங்களின் குண்டுவீச்சுக்கள், எறிகணைகள் என்று மக்களின் குடியிருப்புப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருந்த காலம். பொருளாதாரத் தடைகளினால் பொருள்களின் விலை ஏற்றமடைந்திருந்த காலம். அதனால் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவின. நாங்கள் மட்டுமல்ல பெரும்பாலான குடும்பங்கள் வறுமையிலேயே வாழ்ந்தனர்.

அக்காலங்களில், காலையில் வீட்டில் உணவு செய்வதே இல்லை. காலையில் தேனீர் மட்டும்தான் எங்களின் வயிற்றை நிரப்புவதுண்டு. அதனால் பசியுடன்தான் எந்நேரமும் இருப்போம். கண்ணில் படுகின்ற மாங்காய், கொய்யாக்காய், விளாங்காய் என்று எதையெல்லாம் சாப்பிடலாமோ அதையெல்லாம் சாப்பிட்டுத் திரிவேன். பசியின் உக்கிரம் சிறுவயதிலேயே நன்றாகப் பழகிப் போய்விட்டது. பத்மாக்கா வீட்டுக்குப்போனால் மிஞ்சியிருக்கும் சாப்பாடுகளைத் தருவார் என்ற நம்பிக்கையில் அம்மாவின் பின் நானும் அங்கு செல்வதுண்டு. நான் எதிர்பார்த்ததுபோலவே நல்ல நல்ல சாப்பாடுகள் வயிறு நிறையச் சாப்பிடுவேன். பள்ளிக்கூடத்தில் கல்விக்கழகக்காசு கட்டுவதற்கு வீட்டில் காசு இல்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதெல்லாம் அம்மா, பத்மாக்காவிடம்தான் காசுவாங்கித் தருவதுண்டு. அம்மா வேலை செய்துகொடுத்து வீட்டுக்குப் புறப்படும்போதும் அரிசி, மா, பருப்பு என்று அள்ளித் தந்து விடுபவர். அதனால் பத்மாக்கா என்றால் நல்ல பிரியம். இப்போது அவவின் கூடாரத்திற்குப் போவதற்காகவே வைத்தியசாலை போகச் சம்மதித்தேன்.

நான் கொடியில் கிடந்த நல்ல சாறத்தினை எடுத்து உடுத்துக்கொண்டு அம்மாவுடன் நடையைக் கட்டினேன். தங்கச்சியும் எங்களுக்குப் பின்னால் வந்துகொண்டிருந்தாள். ஆமியிடம் சரணடையும்போது, போட்டிருந்த உடுப்புடனேயே வந்ததால் போடுவதற்கு எங்களிடம் ஆடைகள் இருக்கவில்லை. நிறுவனங்கள் பழைய உடுப்புக்களைத் தந்திருந்தாலும் அவை எங்களுக்கு அளவாக இருக்கவில்லை. அதனால் நான் சாறத்தினையே கட்டப்பழகிக்கொண்டேன். நான் மட்டுமல்ல என்போன்ற சிறுசுகளும் முகாமில் சாறத்துடனேயே திரிவதுண்டு. அது இங்கு இயல்பாகப் பழகிப்போனதொன்றாகி விட்டது. நடக்க முடியாத பலவீனத்துடன் ஒருவிதமாக வைத்தியசாலைக்குச் சென்று மருந்தெடுத்துவிட்டுத் திரும்பும்போது மதியம் தாண்டிவிட்டது. வைத்தியசாலை, சனக்கூட்டத்தினால் நிரம்பிப்போயிருந்தது. எங்கு பார்த்தாலும் படுக்கைவிரிப்புக்களுடன் நோயாளர்களே காணப்பட்டனர். அவ்வளவு சனத்துக்குள் நின்று மருந்தெடுப்பதற்கு இடையில் சீ என்றாவிடும். வைத்தியசாலையடியில் ஏதோவொரு நிறுவனம் குடுத்த சத்துமா உருண்டையை வாங்கிச் சாப்பிட்டபடி 'D" பிளக்கை நோக்கி நடக்கத் தொடங்கினோம். அன்றைய மதிய உணவை மாவுருண்டை பூரணப்படுத்திவிட்டது. கடும் வெய்யிலில் அம்மா கொண்டுவந்த துவாயைத் தலைக்குப்போட்டபடி, மெல்ல மெல்லத் தள்ளாடியபடி, அம்மாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு நடந்துகொண்டிருந்தேன். இடையில் வரும் மரங்களின் நிழலில் இளைப்பாறுவதும் இடைக்கிடையே நிகழ்தேறியது.

"அம்மா உங்களுக்கு யார் சொன்னது இதுக்குள்ள
தான் பத்மாக்கா இருக்காவெண்டு?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் தண்ணிக்கு லைன்ல நிக்கேக்க, பத்மாக்காட தங்கச்சியக் கண்டு கதைச்சனான். அப்பத்தான் பத்மாக்காவப் பற்றி விசாரிக்கேக்க சொன்னவா. "D" பிளக்கில 42ஆம் நம்பர் ரென்றில இருக்கிறா எண்டு."

அம்மாவின் உறுதியான பேச்சு, பத்மாக்காவின் கூடாரத்தை அடைந்துவிடலாம் என்று நம்பிக்கை தந்தது. வெய்யில் சுட்டெரித்தாலும் சோர்ந்த எங்கள் நடையால் "D" பிளக்கை ஒருமாதிரியாக அடைந்துவிட்டோம். ஆங்காங்கு மர நிழல்களில் படுத்திருப்பவர்களிடம் கேட்டு 42ஆம் நம்பர் கூடாரம் இருக்கும் இடப்பகுதியை அடைந்து, இலக்க ஒடரின்படி பத்மாக்காவின் கூடாரத்திற்குச் சென்றோம். எங்களைக் கண்டவுடன் பத்மா அக்காவின் முகம் புன்னகைத்து வரவேற்றது. ஓடி வந்து அம்மாவைக் கட்டித் தழுவி ஒருபாடு அழுது தீர்த்துவிட்டார். என் தலையை வருடியபடி உள்ளே வரவேற்றார். உள்ளே அவரின் இரு மகள்களும் விளையாடிக்கொண்டிருந்தனர்.

"பத்மா... நிரோசன் எங்க?"

அம்மாவின் கேள்விக்குப் பதில்சொல்ல முடியாமல் அழத் தொடங்கினார். அதைப்பார்த்துக்கொண்டிருந்த எனக்கும் கண்கள் கலங்கிவிட்டன.

"இல்ல அன்ரி... அவர ஓமந்தைல வைச்சு ஆமி பிடிச்சுக்கொண்டு போட்டுது. எங்கயிருக்கிறார்? என்ன செய்யிறார்? எண்டுகூடத் தெரியேல்ல. நான் இந்த ரெண்டு சின்னனுகளோட என்னதான் செய்யிறது? அங்கயே ஷெல்லடியில செத்திருக் கலாம் அன்ரீ. இங்கால வந்து தனிச்சுப்போட்டன். தங்கச்சி 'B' பிளக்கில இருக்கிறாள். அவள்தான் ஏதோ அடிக்கடி வந்து போறாள். அது சரி நீங்களெல்லாம் எப்படி அன்ரி இருக்கிறியள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுக்குடியிருப்பில இருந்து இடம்பேந்தாப்பிறகு இண்டைக்குத்தான் காணுறன். உங்கள் ஒருவருக்கும் ஒண்டும் ஆகேல்லயே?"

"ஓம் பத்மா.. எங்களுக்கு ஒண்டுமாகேல்ல.. ஏதோ கடவுளின்ர அருள். தப்பீற்றம். இவர் சாப்பாடு வாங்கக் கிச்சினுக்கு வேளைக்கே போட்டார். இவனுக்கும் வந்ததில இருந்து ஒரே வருத்தமாக் கிடக்கு. மருந்தெடுத்தும் சரிவரேல. சரி இன்னும் ஒருக்கா எடுத்துப்பாப்பம் எண்டு ஆசுப்பத்திரிப் பக்கம் வந்தனான். நீயும் இதுக்குள்ள இருக்கிறாய் எண்டு உன்ர தங்கச்சியக் காணேக்க சொன்னவள். அதுதான் ஒருக்காப் பாத்திட்டுப் போவம் எண்டு வந்தனான்."

இருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். கனநாளைக்குப் பிறகு பிரிந்துபோன உறவுகள் இணைந்த சந்தோசம் மனதிலே மலர்ந்து கொண்டிருந்தது. இவர்கள் இருக்கும் கூடாரம் நடுவால் இரண்டாகப் பிரிக்கப்பட்டுத் திரைபோடப்பட்டிருந்தது. கூடாரத்தின் ஒரு அரைப்பகுதியில் ஒரு குடும்பமும், மறு அரைப்பகுதியில் இவர்களும் இருந்தார்கள். இம் முகாங்களில் அமைக்கப்பட்டிருந்த கூடாரங்கள், சுமார் எட்டு, பத்து மீற்றர்கள் நீளமும், சுமார் நான்கு மீற்றர்கள் அகலமும் கொண்டவையாகவே இருந்தன. நடுவில் சுவர் பிரிப்பதுபோல ஒரு திரை மறைப்புப் போடப்பட்டிருந்தது. நான்கு பேர் மற்றும் அதற்குக் குறைவான எண்ணிக்கையுடைய இரண்டு குடும்பங்களுக்கு, ஒரு கூடாரம் பகிரப்பட்டிருந்தது. ஒரு பகுதியில் ஒரு குடும்பமும், மறுபகுதியில் இன்னொரு குடும்பமுமாக வசிக்கலாயினர். ஐந்து அல்லது ஐந்திற்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்திற்கே முழுமையாக ஒரு கூடாரம் வழங்கப்பட்டிருந்தது. நாங்களும் நான்கு பேர் என்பதால் பாதிக் கூடாரப்பகுதியிலேயேதான் வசிக்கலானோம். அதற்குள் எல்லோரும் இரவில் ஒரேயடியாகத் தூங்குவது என்பதும் கஷ்டம். கால் நீட்டிச் சுதந்திரமாகப் படுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாததால், அப்பா எங்கள் கூடாரத்திற்கு முன்னாள் உள்ள வீரை மரத்திற்குக் கீழ்த்தான் இரவில் படுப்பதுண்டு. அப்பா மட்டுமல்ல பெரும்பாலானவர்களின் படுக்கைகள் மரங்களுக்குக் கீழ்த்தான் காணப்பட்டன. பத்மாக்காவும் இரண்டு சிறுசுகளுமாக மொத்தம் மூன்று பேர் என்பதால் இவர்களுக்குக் கூடாரம் போதுமானதாகவே இருந்தது.

பத்மாக்கா வாங்கி வைத்திருந்த மத்தியானச் சாப்பாட்டை முடித்துவிட்டுப் பாயில் சரிகையில் நேரம் மூன்றைத் தாண்டி விட்டது. அந்த இந்த ஊர்ப்புதினங்களையெல்லாம் அம்மாவும், பத்மாக்காவும் பேசிக்கொண்டிருந்தனர். நான் அப்படியே கண்ணயர்ந்து விட்டேன்.

"தம்பி... தம்பி..."

"என்னம்மா.."

"முன்னுக்கு மரத்தடியில இருக்கிற கோயிலில பூசை நடக்குது.. எழும்பு வா... வா... பத்மாக்கான்ர பிள்ளையள் நூல்கட்டடப்போதுகள். நீயும் வா நூல்கட்டீற்று வருவம்."

அம்மாவின் ஆக்கினை தாங்க முடியாமல், நித்திரைச் சோம்பலில் மெல்ல மெல்ல நடந்து கோயிலடிக்குச் சென்றேன். அங்கே யாரோ ஐந்தாறுபேர் குழுமி நின்று சாமி கும்பிட்டுக்கொண்டிருந்தனர். காட்டுக்குள் புதிதாக அமைக்கப்பட்ட முகாம் பகுதியில் எப்படி இந்தக்கோயில் வந்தது? என்று என் மனதுக்குள் கேள்வி எழுந்து என்னை உறுத்திக்கொண்டேயிருந்தது.

"அம்மா.. அம்மா... முதல்லயிருந்தே இந்தக் கோயில் இருக்காம்மா? இல்லாட்டி எப்பிடியம்மா இஞ்ச கோயில் வந்தது?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லத்தம்பீ... பூசை செய்யிற ஐயாதான் புதிசா இதில சாமி வைச்சுப் பூசைசெய்யிறார்"

"அப்ப இந்தக்கோயில் இப்பயா வந்தது?"

"ஓமடா தம்பி.... பேசாம சாமியக் கும்பிடு.."

நான் அங்கு நடக்கும் புதினங்களைப் பார்த்தபடி கையைக் கூப்பிக்கொண்டிருந்தேன். எல்லா மக்களும் நோய்நொடியால் பாதிக்கப்பட்டிருந்ததனால் பூசாரிக்கு நல்ல உழைப்பு. எல்லோரும் ஆரம்பத்தில் அவரின் வீட்டிற்குச் சென்று நூல்கட்டி வந்ததாகவும், பின்பு சனங்களின் அதிகரிப்பை அடுத்து, இவ் வீரைமரத்திற்குக் கீழே வழிபாட்டை அமைததாகவும் பின்பு பத்மாக்கா கூறிக் கேட்டிருக்கிறேன். அவர் கூறியதில் உண்மைதான் இருந்தது. வீரை மரத்திற்குக் கீழே ஐந்தாறு கருங்கற்கள் வைக்கப்பட்டிருந்தன. அக் கற்களுக்கே பூசை நடைபெற்றது. பூசை முடிவில் எல்லோருக்கும் திருநீறு ஓதிப் பூசிவிட்டுக் கையில் நூல்போட்டு விட்டார். நானும் பூசாரியின் முன்பு போய் நின்றேன். கையில் இருந்த வேம்பு நெட்டுக்களால் செம்பில் இருந்த தண்ணீரில் தோய்த்து என்மேல் தெளித்தார். பின்பு விபூதியை எடுத்து என்னைச்சூழ எறிந்து மந்திரங்களை உச்சாடனம் செய்தார். யாருக்கும் புரியாத விதத்தில் மந்திரத்தை வாய்க்குள் உச்சாடனம் செய்துகொண்டிருந்தார். பின், என் நெற்றியில் கட்டைவிரலை வைத்து வட்டமாகத் திருநீற்றைப் பூசினார். கையில் நூலையும் கட்டிவிட்டபின், பத்மாக்கா தந்த பத்து ரூபாய்க் காசைப் பூசைத்தட்டில் வைத்துவிட்டு வெளிக் கிட்டோம். என்னைப் போலப் பலர் வந்து நூல்கட்டிச் சென்றார்கள். நாங்கள் எங்களின் கூடாரத்திற்குப் போகவேண்டிய நேரம் நெருங்கி விட்டது. பத்மாக்காவிடமிருந்து விடைபெற்று எங்களின் பிளக்கை நோக்கித் திரும்ப ஆயத்தமானோம்.

"அன்ரீ... அன்ரீ இதக்கொண்டு போங்கோ... நேரமிருக்கேக்க இங்கால வாங்க அன்ரீ."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறியபடி பொதிப்பை ஒன்றை அம்மாவிடம் கொடுத்து விட்டு, என் கையில் எதையோ திணித்தார். அது காசு என்பதை உணர்ந்தேன்.

"பத்மாக்கா போட்டு வாறம்..."

நாங்கள் நடையைக் கட்டத்தொடங்கினோம். நேரம் மாலை நான்கரையைத் தாண்டிக்கொண்டிருந்தது. எல்லாச் சனங்களும் சாப்பாட்டிற்கும், தண்ணீருக்கும், மலசல கூடங்களுக்கும் அலைந்து கொண்டிருந்தார்கள். பலர், மரங்களுக்குக் கீழே குழுக்களாக இருந்து கதைத்துக்கொண்டிருந்தார்கள். இளைஞர்கள் பலர், கிளித்தட்டு மறித்துக்கொண்டிருக்கும் சத்தமும் கரப்பந்தாட்டம் ஆடிக்கொண்டிருக்கும் சத்தமும் கேட்டுக்கொண்டிருந்தது. ஆங்காங்கு சிறுசுகள் ஒப்பு, சிரட்டைப்பந்து, கிட்டிப்புள், ஓடிப் புடிச்சு முதலிய கிராமிய விளையாட்டுக்களை எல்லாம் விளையாடிக்கொண்டிருந்தனர். மரங்களுக்குக் கீழே இருக்கும் கிழடுகளும், பெண்களும் டக்குடிக்குடோஸ் விளையாடிக் கொண்டும் சில்லிக்கோடு விளையாடிக்கொண்டும் இருப்பதும் தெரிந்தது. இந்தச் சிறைமுகாமுக்குள் வந்த பின்புதான் மறந்துபோன எம் பாரம்பரிய விளையாட்டுக்கள் எல்லாம், மீண்டும் விளையாடப்பட்டுக்கொண்டிருந்தன. சிறை முகாமுக்குள் கொண்டு வந்து எல்லோரையும் அடைத்து வைத்ததனால் எவ்வித பொழுது போக்குக்களும் இல்லாத நிலையில், பழைமையான எமது பாரம்பரிய விளையாட்டுக்களை விளையாடத் தொடங்கியுள்ளனர். இங்கு கிளித்தட்டுப் பெரும் விமர்சையாக விளையாடப்பட்டது. பிளக்குகளுக்கு இடையிலான போட்டிகளாகவும் அவை நடை பெறத்தொடங்கின. கிளித்தட்டுக்கென்றே பெரும் ரசிகர் படை கூடத்தொடங்கியிருந்தது. எந்த பிளக்கிலும் கிளித்தட்டுப் போட்டி நடந்தால், அனைத்துச் சனங்களும் கூடிவிடுமளவிற்கு இக்காலத்தில் கிளித்தட்டு, பேர்போன விளையாட்டாக மாறியிருந்தது. மாலை நேரமாகையால் எல்லோருடைய பொழுதுபோக்குக்களையும், செயற்பாடுகளையும் பார்த்தவண்ணமே எங்களது கூடாரத்தை வந்து சேர்ந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாரத்திற்குள் வந்ததும்தான் தாமதம் தங்கச்சி, அம்மா கொண்டு வந்த பொதியைப் பிரித்து ஆராயத் தொடங்கினாள். பிஸ்கட் பைகள், அப்பிள், ஒரேஞ் உள்ளிட்ட பழங்கள், சில உடுப்புக்கள் என்று பல பொருட்கள் அப்பொதிக்குள் வைக்கப்பட்டு இருந்தன. அப்பிள் பழத்தைக் கண்டதும் நான் பாய்ந்து ஒரு பழத்தை எடுத்துத் தின்னத்தொடங்கினேன். அப்பிள், ஒரேஞ், திராட்சைப் பழங்களை நாங்கள் பிறந்ததிற்குச் சாப்பிட்டதே குறைவு. யாராச்சும், எங்கேயும் தூரத்திற்குப் போய் வந்தால் மட்டுமே இவற்றினை வாங்கி வருவார்கள். நாங்களெல்லாம் மாங்காய், கொய்யாக்காய் சாப்பிட்டுத்தான் வளந்தவர்கள். இப்படியான ஆடம்பரமான பழங்களைக் கண்டால் சாப்பிடவேண்டும் என்ற ஆசை இருக்கும். இடப்பெயர்வுக்குப் பின் இப்போதுதான் இப்பழங்கள் எங்களுக்குக் கிடைத்திருக்கின்றன. அதனால்தான் ஆசையில் எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். எனக்குப் போட்டியாகத் தங்கச்சி, இரண்டு மூன்று ஒரேஞ் பழங்களை எடுத்துக்கொண்டாள்.

"அம்மாபாரணே உவள் ஒரேஞ் பழம் எல்லாத்தையும் எடுத்திட்டாளணே... வாங்கித் தாவணே..."

"தம்பி நீ உத முதல் சாப்பிடு... அவள் எல்லாத் தையுமா தின்னப் போறாள்? தருவாள் தானே.."

என் ஆக்கினைக்குப் பதிலளித்தபடி தண்ணீர் வாளியை எடுத்துக்கொண்டு, குழாய்க்கிணற்றடியில் வரிசையில் நிற்பதற்குப் புறப்பட்டுப்போனார். அப்போதுதான் அப்பாவும் வீரைமரத் தடியிலிருந்து பாயைச் சுருட்டிக்கொண்டு கூடாரத்திற்கு வந்தார். வந்ததும்தான் தாமதம் இரவுச்சாப்பாட்டுக்கு வரிசையில் நிற்கப் புறப்படத் தயாரானார்.

"அப்பா இந்தாங்கோப்பா... அப்பிள் பழமப்பா..."

"எங்காலடாப்பா... யார் தந்த?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விடியச் சொல்லீட்டுத்தானப்பா போனாங்கள். பத்மாக்கா வீட்டையும் போட்டுத்தான் வருவ மெண்டு.. அவதானப்பா தந்தவா... காசும் தந்தவாப்பா.."

பத்மாக்கா கையில் திணித்துவிட்ட காசினை, என் சேட்டுப் பையிலிருந்து எடுத்து கொடுத்தேன். ஆயிரம் ரூபாய் தாள் காசு. எங்களுக்கு அவ்வளவு ஆனந்தம். ஒரு சதக் காசில்லாத இந்த நேரத்தில் இவ்வளவு தொகைக் காசு யாரும் தரமாட்டார்கள். அம்மா செய்த உதவிகளுக்கு நன்றிக்கடனாகவே, இதைப் பத்மாக்கா தந்திருக்கிறார் என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டேன்.

"தம்பீ.. இதைக் கவனமா அம்மாட்ட குடு. நான் சாப்பாடு எடுத்திட்டு வாறன்.."

அப்பா சாப்பாட்டு வாளியை எடுத்துக்கொண்டு கிச்சின் பக்கம் போய்க்கொண்டிருந்தார். நான் தங்கச்சியிடம் இரண்டு ஒரேஞ் சுளைகளை வாங்கித் தின்றுகொண்டிருந்தேன். ஆகா எவ்வளவு சுவை. பணக்காரர்களாகப் பிறந்திருந்தால் இப்படி ஒவ்வொரு நாளும் விரும்பிய பழங்களையெல்லாம் தின்னலாம் என்று நினைத்துக்கொண்டேன். எவ்வளவு காலத்திற்குப் பிறகு இந்தப் பழங்களை நா சுவைத்திருக்கின்றது.

நாங்கள் முகாமிற்குள் வந்து ஓரிருமாதங்களுக்குப் பிறகு, பாரிய சோதனைகளை அடுத்து, நடமாடும் கூட்டுறவுக் கடை ஒன்று, பெரிய லொறியில் வாரத்திற்கு ஒருமுறை முகாமுக்குள் வந்து போகத்தொடங்கியது. அது சதொச நிறுவனத்திற்குரியதாகவே இருந்தது. அதில் பலசரக்குச் சமான்கள் உட்படப் பழங்கள் எல்லாம் விற்பனை செய்யப்பட்டு வந்தன. சனங்களெல்லாம் அடிபட்டுத் தங்களுக்குத் தேவையான சமான்களை வாங்குவார்கள். அதில் விற்கப்படும் வெத்திலை, பாக்கு, அப்பிள், ஒரேஞ், திராட்சை, ரம்புட்டான், வாழைப்பழம் போன்றவற்றை, காசிருந்தவர்கள் தொகையாக வாங்கி மரங்களுக்குக்கீழே வைத்து விற்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினர். இதனால் முகாமிற்குள் வெத்திலை, பாக்கு, பழங்கள் விற்கும் புதிய சிறுசிறு கடைகள் உருவாகின. அவற்றையெல்லாம் பார்க்கும்போது வாங்கிச் சாப்பிடவேண்டும் போல ஆசை வரும். ஆனால் எங்களிடம் ஒரு சதக் காசுமில்லை. ஆமியிடம் சரணடையும்போது வெறுங்கையுடனே வந்தோம். என்ன செய்வது? காசிருப்பவர்கள் வாங்கிச் சாப்பிட்டார்கள். நாங்கள் வாய்பார்த்தோம். நடமாடும் கடை வந்துவிட்டால் என்னைப் போன்ற பல சிறுவர்கள் புதினம் பார்க்கச் செல்வதுண்டு. பணம் வைத்திருந்தவர்கள் தங்கள் பிள்ளைகளுடன் வந்து, அவர்களுக்குப் பிடித்தமான தீன்களை வாங்கிச் செல்வார்கள். அதையெல்லாம் கண்களால் மட்டுமே பார்க்க முடியும். வாயால் சுவைக்க இயலாது. எங்களைப் போலத்தானே இவ்வளவு சனங்களும் ஆமியிடம் சரணடைந்தார்கள். "இவர்களுக்கு எப்படிக்காசு வந்தது? எங்களிடம் ஒன்றுமே இல்லயே" என்று அடிக்கடி நினைத்துக் கொள்வேன். நாங்கள் ஆரம்பத்திலிருந்தே கஷ்டப்பட்டவர்கள். காசில்லாமல்கூட எத்தனைநாளும் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள். அதனால் நான் இதைப் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. இன்று பத்மாக்கா தந்த இந்தப் பழங்கள், என் ஆசைகளைத் தணித்து விட்டன. எத்தனை நாட்கள் அந்த வாகனக்கடையடியில் வாய்பார்த்திருப்பேன். இன்று அந்த ஆசை நிறைவேறிவிட்டதே என்று உலகளந்தவரைக் கும்பிட்டுக்கொண்டேன்.

"தங்கச்சி அடியேய்...எல்லாத்தையும் திண்டிராத... ரெண்டு மூண்டு நாளைக்கு வைச்சுச் சாப்பிடுவம்... எல்லாத்தையும் இப்பவே முடிச்சா, யாரும் சாப்பிடேக்க வாய்தான் பாக்கோணும்... கொண்டு போய் வை.. நாளைக்குச் சாப்பிடுவம்"

"ஏன் நான் வைக்க? எனக்குத் தெரியாம நீ எடுத்துத் தின்னுறத்துக்கா?"

"இல்லடி.. வைச்சு வைச்சுத் தின்னுவம்.. நான் எடுக்கவே மாட்டன்...சத்தியமா எடுக்கவே மாட்டன்... கொண்டுபோய் வை.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மாவாண எடுக்க மாட்டியோ"

"ஓமடி.. அம்மாவாண எடுக்கமாட்டன்"

அவள் தின்ற பழத்தைத் தவிர ஏனையவற்றை அப்படியே பிஸ்கட் பைகளுடன் வைத்துவிட்டாள். எங்களுக்காவது இன்றைக்கு இவ்வளவும் கிடைத்தது. ஆனால் எங்களைப்போல எத்தனை சிறுசுகள் ஏக்கங்களோடு இருப்பார்கள். எல்லாம் கடவுளின் செயல் என்று நினைத்துக்கொண்டேன்.

சூரியன் தன் கதிர்களை ஒடுக்கி மேல்வானில் மறையத் தொடங்கினான். இருள் மெல்ல மெல்ல சூரியனை விழுங்கத் தொடங்கியது. நான் அரைகுறைப் பார்வையுடன், இருள் வருவதற்கு முன் வெளியில் சென்று சிறுநீர் கழித்துவிட்டு வந்து, கூடாரத்திற்குள் கிடந்த பாயை விரித்துச் சரிந்துகொண்டேன். பொழுது இருண்டுவிட்டால் எனக்கும் கண்கள் இருண்டுவிடும். காலைச்சூரியனோடே அவை ஒளிபெறும் இயல்புடையனவாய் இப்போது மாறிவிட்டன. சத்துக் குறைபாட்டால்தான் இவ்வாறு வந்துவிட்டது என்றுதான் பலர் சொன்னார்கள். சத்துக்குறை பாடென்றால் எங்களால் என்ன செய்ய முடியும்? கிச்சினில் தரும் உப்புப்புளியில்லாத சாப்பாட்டைத்தான் சாப்பிடவேண்டும். நல்ல சத்தான மாக்கள், பழங்கள் வாங்கி உண்ண எங்களிடம் காசா இருக்கின்றது? இல்லையே. நடப்பது நடக்கட்டும் என்று ஆசுப் பத்திரியில் தந்த குளிசைகளை எடுத்துவைத்துவிட்டு, அப்பா கொண்டுவரும் சாப்பாட்டுக்காய்க் காத்திருந்தேன். சிறிது நேரத்தில் தண்ணீருடன் அம்மாவும் வந்து சேர்ந்தார். காலையில் தண்ணீர்க் கேனை வரிசையில் வைத்துவிட்டுப்போனதால் இப்போது வேளைக்குத் தண்ணீர் எடுத்து வந்துவிட்டார். போகும்போது கொண்டுபோன தண்ணீர் வாளியை வரிசையில் வைத்துவிட்டு வந்ததனால் நாளைக்குத் தண்ணீர் எடுப்பது இலகுவாக இருக்கும். இப்படித்தான் இங்கு எல்லாவற்றிற்கும் சனங்கள் வரிசையில் நிற்கப் பழகிவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா வருவதற்கிடையில் வெளியில் அடுப்பு மூட்டித் தேநீர் வைத்து எடுத்து வந்தார் அம்மா. ஏதோ நிறுவனங்கள் ஆரம்பத்தில் உலருணவுப்பொதிகளில் சீனி, தேயிலை உள்ளிட்ட பொருள்களைத் தந்ததனால் அவ்வப்போது ஆசைக்குத் தேநீர் குடிக்கக்கூடியதாக இருந்தது. அம்மா தந்த தேநீரைக்குடித்து விட்டுக் கோப்பையைக் கீழே வைக்கும்போது அப்பாவும் வந்துசேர்ந்து விட்டார். அப்பா வந்ததும், எனக்குச் சாப்பாட்டைப் போட்டுத் தந்துவிட்டு, அப்பாவுக்குத் தேநீர் ஆத்திக்கொடுத்தார் அம்மா. நான் சாப்பிட்டு விட்டு இரவுக் குளுசைகளைப் போட்டுக்கொண்டு சரிந்துவிட்டேன். என்றைக்கும் இல்லாதமாதிரி இன்று என் மனம் ஆறுதலாக இருந்தது. கூடாரத்தின் முன்வாசல் வழியாக வந்த தென்றல் என்னைத் தாலாட்டிக்கொண்டிருந்ததை உணர்ந்தேன். தொலைவிலே யாரோ இறந்துவிட்டதற்கான அறிகுறியாய் ஒப்பாரி ஓலம் ஒலித்துக்கொண்டிருப்பது காதில் விழுந்தது. நாங்கள் இருக்கும் கூடாரத்தின் மறுபாதியில் இருந்தவர்களின் ஆறுமாதக் குழந்தை, பசியால் வீரிட்டழுது அமைதியைக் குலைத்துக்கொண்டிருந்தது. அத்தனை சத்தங்களுக் குள்ளும், நடந்து நடந்து களைத்துவிட்ட என் தேகம் இப்போது நன்கு ஓய்வெடுத்துக்கொண்டிருந்தது. இப்போது எனக்கு எவ்வித வலிகளும் தோன்றவில்லை. நீட்டியபடி கிடந்த கைகால்கள் உளையவில்லை... உடல் நடுங்கவில்லை... தலை இடிக்க வில்லை... உடலை விட்டுப் பிரிந்த ஆத்மா வேறோர் உலகம் புகுந்ததுபோல், என் இருண்டுபோன விழிகளை இமைகள் அரவணைத்துக் கொண்டிருந்தன....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம்: 05**

அன்று ஞாயிற்றுக் கிழமையென நினைக்கிறேன். சதொச கூட்டுறவுக்கடை லொறியின் உறுமல் சத்தம், உறங்கிக் கொண்டு இருந்த முகாமையே எழுப்பிவிட்டது. வழமையாக ஞாயிற்றுக் கிழமைகளில் பத்துப் பதினொரு மணியளவில் வரும் லொறி, இன்று வேளைக்கே வந்துவிட்டது. சனங்களெல்லாம் ஓடும் கால்நடைச் சத்தங்களும் நிலத்தை அதிரச்செய்து கொண்டிருந்தன. வழமை போல அடித்து முறித்தாற்போலிருக்கும் என் உடல், இன்று புதிய நாளைச் சந்தித்திருந்தது. படுக்கையிலிருந்து எழும்பி முறிவெடுத்த படி கூடாரத்திற்கு வெளியில் வந்து, தேநீருக்கு மூட்டிய அடுப்பில் கூதல் காய்ந்துகொண்டிருந்தேன். நேரம் ஏழைத் தாண்டியிருக்கும். ஆனாலும் பனிப்புகை மூட்டங்கள் இன்னும்தான் தணியவில்லை.

"தம்பீ டேய்....இப்ப ஏன் உந்தப் பனீக்க போயிருக் கிறாய்?... உள்ளதுக்கயே காச்சல் உடம்பு... பிறகு உதுக்கபோய் இருந்து இன்னும் தேடப் போறியே?..."

அம்மாவின் பேச்சைச் சமாளிக்க முடியாமல் எழும்பி உள்ளே வந்து அமர்ந்துகொண்டேன். என்றுமில்லாதவாறு இன்று என் உடல் ஆரோக்கியமாக இருந்தது.

"அம்மா இண்டைக்கு எனக்குக் காச்சல் சுகமாயிருக்கம்மா... இரவும் காய்ச்சல் காயேல.. நல்லா நித்திரை கொண்டனான்.... உடம்பும் உளையேல்லயம்மா..."

"இஞ்ச கிட்டவா பாப்பம்..."

அம்மா என் தலையில் கையைவைத்துப் பார்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓமடா தம்பீ...இண்டைக்கு உனக்கு, மேல் சுடேல்ல... ஏதோ நேற்று திருநீறு போட்டு நூல்கட்டிற்று வந்தது நல்லதாப்போச்சு..."

அம்மா கிழக்குத் திசையை நோக்கி நின்று, எதையோ வாயில் முணுமுணுத்தபடி கும்பிடத்தொடங்கினார். அம்மாவின் கூற்றில் எனக்கும்தான் உடன்பாடிருந்தது.

"அந்தக்கோயிலில திருநீறு போட்டிற்று வந்ததால தான் நேற்றிரவும் எனக்குக் காச்சல் காயேல்லை போல கிடக்கு. அதுதான் அந்த ஐயாட்ட அவ்வளவு சனங்கள் வந்து நூல்கட்டிற்றுப் போவுதுகள் என அம்மா?"

"ஓமடா தம்பீ. காச்சல் இதோட விட்டிற்றெண்டா, வாற வெள்ளிக்கிழமையும் ஒருக்கா அந்தக் கோயிலுக்குப் போட்டு வரோணும்"

"ஓமணேயம்மா... போவமணே"

சாப்பாடு எடுத்துக்கொண்டு வந்த அப்பாவிடமும் அம்மா இதைக் கூறினார். அப்பாவும் வந்து என் மேலைத் தொட்டுப்பார்த்துக் காய்ச்சல் காயாமையை உறுதிப்படுத்திக்கொண்டார். ஆனாலும் நான் வெய்யிலுக்குள் போவதைத் தவிர்த்தே வந்தேன். நாட்கள் நகர்ந்து, குறித்த வெள்ளிக்கிழமையும் வந்தது. கற்பூரம், வெத்திலை, பாக்கு முதலியவற்றை மரத்திற்குக் கீழிருந்த சிறு வியாபாரக் கடையில் வாங்கிக்கொண்டு கோவிலைநோக்கி நகர்ந்தோம். பத்மாக்கா தந்த காசிருந்ததால் இப்போது நேர்த்திக்குரிய சாமான்களை வாங்கமுடிந்தது. இல்லையேல் வெறுங்கையோடே போயிருக்க வேண்டும். இப்போது எனக்குக் காய்ச்சல் காய்வ தில்லை. உடல் சற்றுத் தேறி வந்துகொண்டிருந்தது. இன்று என் உடம்பும் நடப்பதற்குப் பஞ்சிப்படவில்லை. வந்ததிலிருந்து "ஆசுப்பத்திரி ஆசுப்பத்திரி" என்று பாய்ந்ததில் எவ்வித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனுமில்லை என்பதை உணர்ந்துகொண்டேன். அந்தப் பூசாரியின் கோயிலில் புதுமை இருப்பதாக மனம் நம்பியது. பத்மாக்காவிடம் நடந்ததைக் கூறி, மாலைப் பூசைக்காகக் காத்திருந்தோம். மாலை மூன்று, மூன்றரை இருக்கும். கோயிலில் பூசை தொடங்கியது. பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டு திருநீறு போடுவதற்காய் காத்து நின்றோம். எங்களைப்போலப் பலர் நின்றுகொண்டிருந்தனர். ஒவ்வொருவராகத் திருநீறு போட்டு நூல்கட்டிக்கொண்டிருந்தனர். நானும் பூசாரியின் அருகில் சென்றேன்.

> "ஐயா.. போன வெள்ளிக்கிழமை வந்து திருநீறு போட்டிற்றுப் போனாங்களய்யா... முகாமுக்கு வந்ததில இருந்து ஆசுப்பத்திரிக்கு அலைஞ்சு ஏலா.. ஒரே காச்சல்... திருநீறு போட்டதில இருந்து காச்சல் விட்டிற்றையா.. அதுதான் இண்டைக்கும் திருநீறு போட்டிற்றுப் போவமெண்டு வந்தனாங்கள்..."

அம்மா கூறுவதைக் கேட்டுக்கொண்டிருந்த பூசாரி, ஏதோ மந்திரங்களை உச்சரித்துக்கொண்டு, கண்ணை மூடித் தியானத்தில் இருந்தார். சற்று நேரத்தில், திருநீற்றை என்னைச்சுற்றி நாலாபுறமும் வீசி, நெற்றியில் வட்டமாகப் பெருவிரலால் பூசி விட்டுக் கையிலும் நூல் கட்டிவிட்டார்.

> "பிள்ளை... உந்த காடு மேட்டை அழிச்சுத்தான் முகாம் போட்டுத்தந்தவங்கள்... இதெல்லாம் பலி கொண்ட இடங்கள்.. அதுதான் ஊத்தை ஒண்டு இவனில பார்வையா நிண்டிருக்கு... இப்பிடி ஊருப் பட்ட சனங்கள் இங்க வந்திட்டுப் போவுதுகள். நூல் கட்டிருக்கன்தானே இனிப்பிரச்சனை இல்லை.. இல்லாட்டி ஆள முடிச்சிருக்கும்"

ஐயா சொல்லும்போதுதான் எங்களுக்கும் உண்மை புரிந்தது. பத்மாக்காவிடமிருந்து விடைபெற்று எங்களின் கூடாரத்தை அடைந்து நடந்தவற்றை அப்பாவிடம் கூறினோம். கோயிலிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவந்த திருநீற்றில் கொஞ்சத்தைக் கரைத்துக் கூடாரத்தைச் சுற்றித் தெளித்து விட்டு, எல்லோருக்கும் திருநீற்றை அம்மா பூசி விட்டார். என் மனதுக்குள் பல கேள்விகள் எழுந்து கொண்டேயிருந்தன.

"அப்பா , இஞ்ச முதல் ஆக்கள் செத்தவையோப்பா? பேய் பிசாசெல்லாம் இஞ்ச இருக்காப்பா? எனக்கும் பேய் பிடிச்சதெண்டுதான் பூசாரி சொன்னவர்."

"இருக்கும்.. இந்த இடமெல்லாம் பிரச்சனைக் காலத்தில கன உயிர்போன இடங்களா இருக்கும்... செட்டிக்குளக் காடுதானே இது... நடுக்காட்டைத் தள்ளி ரெண்டை அடிச்சிருக்காங்கள்... அதுதான் சனங்களுக்கு வருத்தம். எல்லாம் காத்துக் கறுப்பின்ரை பார்வைபோலதான் கிடக்கு..."

இனப்பிரச்சினைக்காலத்தில் இந்தக்காடுகளில் எத்தனையோ உயிர்ப்பலிகள் நடந்திருக்கும். எத்தனையோ சனங்கள் கொல்லப் பட்டிருப்பார்கள். அவ்வளவு பேரின் ஆத்மாக்களும் அலைந்து கொண்டுதான் இருக்குமென்று நினைத்துக்கொண்டேன். எல்லாச் சனங்களும் எனக்கு நடந்த விடயத்தை அறிந்து, பூசாரியிடம் சென்று திருநீறு போட்டு நூல்கட்டி வந்தார்கள். சனங்கள் இப்போது ஆசுப்பத்திரியைத் தவிர்த்து அந்தக்கோயிலுக்கே செல்லத்தொடங்கினர். இதனால் வருத்தங்கள் குறைந்தன. அதிகமானவர்கள் உடல்நிலை தேறினார்கள்.

இப்படியே நாட்கள் நகர்ந்தன. ஒருநாள் காலை நேரமிருக்கும். எங்களின் பிளக்கிற்கு முன்னாலுள்ள 'B' பிளக்கில் பெரும் கலவரம்போல் சனங்களின் சத்தம் கேட்டது. சனங்களெல்லாம் அங்குமிங்குமாக ஓடத்தொடங்கினார்கள். என்ன நடக்குதென்றே தெரியாத நிலையில் புதினம் பார்ப்பதற்கென்று ஏனைய பிளக்குகளிலிருந்து சனங்கள் 'B' பிளக்கை நோக்கி ஓடத்தொடங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி என்ன தம்பி சனங்களெல்லாம் ஓடுதுகள்?"

"இல்லயண்ண... ஒரு கிழவியொண்டு சின்னப் பிள்ளையத் தூக்கீட்டு ஓடுதாம்.. அதுதான் திரத்தித் திரியுறாங்கள். அந்தக்கிழவி, புடிக்கேலாத அளவுக்கு வேகமா ஓடுதாம். அதுதான், கிழவி அங்கயோடுது இங்கயோடுதெண்டு, கிழவிக்குப் பின்னால சனங்களும் ஓடுதுகள்"

அப்பாவின் கேள்விக்குப் பதிலளித்தபடி அந்த அண்ணனும் ஓடத்தொடங்கினார். அதனைக் கேட்டுக்கொண்டிருந்த பலர் அவன்பின்னால் ஓடினார்கள். அவர்களுக்குப் பின்னால் நானும் புதினம் பார்ப்பதற்காக ஓடத்தொடங்கினேன். என் வயதை ஒத்த சிறுசுகளும் ஓடத்தொடங்கினர். ஒவ்வொருவரும், கைகளிலே வீரைமரக் கொட்டான்களும், தடிகளும் எடுத்துக்கொண்டு ஓடினார்கள். யாரைப்பார்த்தாலும் கைகளில் பெரிய தடிகளோடே நின்றுகொண்டிருந்தனர். அந்தக் கிழவி, ஓடுவதும் திடீரென மறைவதும், வேறொரு இடத்திற்குள்ளால் ஓடுவதுமாகத் திரிந்துகொண்டிருந்தாள். ஆனால் அங்கு நிற்பவர்களால் அக்கிழவியைக் காணமுடியவில்லை. ஒரு சிலரே கிழவியை அவதானித்துவிட்டுக் கூச்சலிட்டபடி ஓட, அவர்களுக்குப் பின்னால் ஏனையவர்கள் ஓடினார்கள். அன்று "சோன் போர்" முகாமே கலவரபூமியாக மாறியது. எங்கு பார்த்தாலும் சனங்கள் கொட்டன்களோடும், தடிகளோடும் ஒவ்வொரு பிளக்குகளிலும் நின்றுகொண்டிருந்தனர். அந்தக்கிழவி ஒவ்வொரு பிளக்குகளுக் குள்ளால் ஓடுவதும், மறைவதுமாக இருந்தாள். ஆனாலும் யாரும் களைப்படையவில்லை. நானும் ஓடுபவர்களுக்குப் பின்னால் ஓடியபடி நடப்பவற்றை அவதானித்துக்கொண்டிருந்தேன்.

"பேய்க் கிழவி அந்தா ஓடுறாள்... புடியுங்கோ புடியுங்கோ"

திடீரென அங்கொருவன் வேறுதிசைநோக்கி ஓட, அவனுக்குப் பின்னால் சனங்கள் ஓடினார்கள். திடீரெனக் கிழவியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணவில்லை. அவள் அடுத்த பிளக்குக்குள் நுழைந்து ஓடுவதாகக் கூறி அடுத்த பிளக்குக்குள்ளாலும் ஓடினார்கள். கடைசியில் அந்தக்கிழவியைப் பிடிக்கமுடியவில்லை. ஒவ்வொரு பிளக்கு களையும் பிரிப்பதற்காக இராணுவத்தினர், அழித்த காட்டின் கழிவுகள் அனைத்தையும் பெரிய குளத்து வண்டுபோல் உயர்த்தி அணைபோட்டிருந்தார்கள். அவ்வண்டுகளுக்கு மேலால் கிளவி எப்படி ஓடுவாள்? என்று எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். எங்கு பார்த்தாலும் பேய் மனிசியின் கதையே பேசப்பட்டது. கண்ணுக்கு அகப்படுவதும் திடீரென மறைவதுமாக அக்கிழவி ஓடியதில் அவளை யாரும் நெருங்க முடியவில்லை. இப்படி இரண்டு, மூன்று மணித்தியாலங்கள் கிழவிக்குப் பின்னால் ஓடும் படலம் தொடர்ந்தது. எல்லோரும் அங்குமிங்கும் ஓடியோடிக் களைத்து விட்டனர்.

> "அந்தப் பேய் மனிசி, அந்தக் குழந்தையை விடவே இல்லயாம். இறுக்கிப் பிடிச்சுக்கொண்டு.. எல்லா பிளக் பண்டுகளுக்கு மேலாலயும் பறந்துகொண்டு ஓடுதாம் சில பேருக்கு தெரியுதாம். சில பேருக்குத் தெரியேலயாம்...சனமெல்லாம் ஓடியோடிக் களைச்சே போட்டுதுகள். கடைசியா அந்தக் கிளவியப் புடிக்கவே முடியேல்ல.. அது எங்கயோ மறைஞ்சு போட்டுது.."

எங்கு பார்த்தாலும் இக்கதையே தொடர்ந்தது. நானும் சனங்களோடு சனங்களாய் அந்தக்கிழவியைத் திரத்திக்கொண்டு ஓடினாலும், என் கண்களுக்கு அக்கிழவி புலப்படவேயில்லை. அன்றைய பொழுது அந்தப் பேய்க்கிழவியின் கதைகளோடே நகர்ந்தது. அன்றிலிருந்து சிறு குழந்தைகளை யாரும் கூடாரத்திற்கு வெளியே விளையாட விடுவதில்லை. இருட்டிவிட்டாலே அந்தப்பேய் மனிசிக்குப் பயந்து யாரும் வெளியே நடமாடுவதையும் குறைத்துக் கொண்டனர். அன்றொரு வெள்ளிக்கிழமை. மீளவும் சனங்கள் கலவரப்பட்டுத் தடிகளோடு ஓடினர். அந்தக் கிழவி இன்றும் வேறொரு பிள்ளையைத் தூக்கிக்கொண்டு ஓடுவதாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையடிபட்டது. ஆனால் அன்றும், இன்றும் யாருடைய குழந்தையைத் தூக்கிக்கொண்டோடுகிறாள் என்று யாரும் முறைப்பாடு செய்ததாகத் தெரியவில்லை. ஆனால் சனங்களும் அந்தப் பேய் மனிசியைத் துரத்திக்கொண்டிருந்தனர். பல பிளக்குகளுக்குள்ளால் ஓடியோடிச் சனங்களும் களைத்துவிட்டனர். ஆனாலும் அவர்கள் கிழவியைத் திரத்துவதை விடவேயில்லை. கடைசியில் அந்தப் பேய்க்கிழவி, குழந்தையைத் தூக்கிக்கொண்டு 'B' பிளக்குக்குள் ஓடிவருவதாகக் கூறிச் சனங்களும் 'B' பிளக்கைச் சூழ்ந்து கொண்டனர். ஆனாலும் யாரும் அக்கிழவியைக் கண்ணால் கண்டிருக்க மாட்டார்கள். யாரோ ஒருவர் பார்த்துக் கத்தியதை அடுத்தே, அத்திசைநோக்கி ஓடுவதையே வழக்கமாகக் கொண்டிருந்தனர். இன்றும் புதினம் பார்ப்பதற்காகவே நானும் சனங்களோடு சனங்களாய் அவர்களின் பின்னால், என்வயசை ஒத்த பெடியளோடு ஓடித்திரிந்தேன். கடைசியில் அக்கிழவி காணாமல்போன பகுதியைச் சனங்கள் சூழ்ந்து கொண்டார்கள். அங்குள்ள எல்லாக் கூடாரங்களையெல்லாம் சோதனை செய்து பார்த்தபோது, ஒரு கூடாரத்தினுள் ஏதோ கிடப்பதாகக்கூறி, அந்தக் கூடாரத்தைச் சூழ்ந்து கொண்டனர். ஆனால் அதற்குள் யாரும் இருந்ததாகத் தெரியவில்லை.

> "ஐயோ.. அந்தக்கிழவி, அந்தப் பிள்ளையப் பலி எடுத்துப்போட்டுதாம். மண்டையோடும் எலும்பு களும்தான் அந்த ரென்றுக்குள்ள கிடக்குதாம்..."

எல்லாருடைய காதுகளிலும் இக் கதையே வந்து பரவியது. அதனால் அதைப்பார்ப்பதற்கென்றே சனங்கள், எல்லா பிளக்கு களிலுமிருந்து வரத்தொடங்கினார்கள். நானும் சனங்களின் நெரிசல் களூடாக மெதுமெதுவாக நகர்ந்து, அந்தக் கூடாரத்தை அடைந்துவிட்டேன். கூடார வாசலடியில் எல்லோரும் குழுமி நின்றதால், கஷ்டப்பட்டு உள்நுழைந்து பார்த்தேன். பார்க்கவே பயங்கரமாக இருந்தது. கும்பம், வைக்கோல் பொம்மை, பாவைப் பொம்மை, மண்டையோடு - எலும்புகள் முதலியவை வைக்கப் பட்டிருந்தன. குத்துவிளக்குப் பிரகாசமாய் எரிந்துகொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாரத்துக்குள் அங்குமிங்குமாய் இரத்தக்கறைகள் படிந்திருந்தன. திருநீறு, குங்குமங்கள் சிதறுப்பட்டுக்கிடந்தன. நீத்துக்காய் வெட்டிக் குங்குமம் பூசப்பட்டிருந்தது. சாம்பிறாணிப்புகை கூடாரத்துக்குள் பரவி பேயுலகத்தையே நினைவுபடுத்திற்று. நான் பயத்தில் சன நெரிசலுக்குள் இருந்து விடுபட்டு, எங்கள் கூடாரத்தை நோக்கி ஓடிவந்துவிட்டேன். எங்கு பார்த்தாலும் அந்தப் பேய் மனிசி, குழந்தையைப் பலியெடுத்த விடயமே கதைக்கப் பட்டுக்கொண்டிருந்தது.

"தம்பீ என்னவாமடா? பேயக்கிழவீன்ர கதை பொய்யேடா?..."

"போம்மா...அந்தக்கிழவி, பிள்ளையப் பலியெடுத் திட்டு எண்டுதான் எல்லாரும் சொல்லுறினம். ஆனா அந்த ரெண்றுக்குள்ள மண்டையோடும் கொஞ்ச எலும்புகளும்தான் கிடக்கு. அந்தப் பிள்ளையையும் கிழவியையும் காணேல... நான் பயத்தில விட்டிற்று வந்திட்டன்"

என் கதையைக் கேட்டுக்கொண்டிருந்த தங்கச்சி அம்மாவின் மடிக்குள் படுத்துக்கொண்டாள். அவளுக்கு ஏதும் பேய்க் கதை கதைத்தால் பீத்தல்பயம்.

"சின்னப் புள்ளயள தனிய வெளியில விளையாட விடக்கூடாது.. பேய் மனிசி புடிக்குதாம்"

என்று எல்லோரும் கதைத்துத் திரிந்தது, அவளது காதுகளுக்கும் எட்டியிருக்க வேண்டும். பேய்க்கிழவியின் கதை அடிபட்ட நாளிலிருந்து அம்மாவுக்குப் பின்னால்தான் எந்தநேரமும் தங்கச்சி திரிந்துகொண்டிருந்தாள். அன்றைய நாள் அந்தக் கூடாரத்திலிருந்த அனைத்துப் பொருட்களையும், பிளக்கின் ஒதுக்குப் புறத்திற்குக் கொண்டு சென்று எல்லோரும் எரித்துவிட்டார்கள் என்று கதை வந்தது. அன்றிலிருந்து அந்தப்பேய்க்கிழவியின் நடமாட்டம் தணிந்துபோனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலைந்து மாதங்கள் கடந்தன. ஒருநாள் மதியமிருக்கும், நிறுவனம் ஏதோ சாப்பாடு வழங்குவதாக எல்லோரும் வரிசையில் நின்று கொண்டிருந்தனர். சாப்பாட்டு வாகனத்தையே நான் காணவில்லை. அந்தளவிற்கு வரிசை, சுமார் ஐந்நூறு மீற்றர்கள் தூரமளவிற்கு வளைந்து வளைந்து கூடாரங்களுக்குள்ளால் நகர்ந்து கொண்டிருந்தது. சூரியனும் சுட்டெரித்துக் கொண்டிருந்த நேரம். வெய்யிலுக்குள் நின்று நின்று, ஒவ்வொரு கூடாரக்கரைகளிலும் குந்திக்குந்தி வரிசையில் நின்றவர்கள் நகர்ந்துகொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவனாக நானும் நகர்ந்துகொண்டிருந்தேன். இப்போது சுமார் ஐம்பது மீற்றர் தூரத்திலேயே சாப்பாடு கொடுக்கப்பட்டுக்கொண்டிருப்பது கண்களுக்குப் புலனாகியது. ஒவ்வொரு அடியாக வரிசை நகர்ந்து கொண்டிருந்தது. சூரிய வெப்பத்தால் தலையைக் கீழே குனிந்தபடி மெதுவாகவே நகர்ந்து கொண்டிருந்தேன். என் காலுக்குள் சிறு பொருளொன்று மணலுக்குள் புதைந்தபடி சூரிய ஒளிபட்டு மின்னிக்கொண்டிருந்தது. குனிந்து எடுத்து அதனைக் காச்சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டேன். பசியின் கொடுமையும், வெய்யிலின் கொடுமையும் அது என்னபொருள்? பவுணா பித்தளையா? என்று ஆராய இடம் தரவில்லை.

நான் அருகில் சென்றவுடன், அந்தச் சாப்பாடு முடிந்து விடக்கூடாது என்றே மனதுக்குள் நினைத்துக்கொண்டிருந்தேன். இவ்வளவு வெய்யிலுக்குள்ளால் வரிசையில் நின்று, அருகில் வந்தவுடன் சாப்பாடு முடிந்துவிட்டால் எப்படியிருக்கும்? இப்படிப் பல சந்தர்ப்பங்களில் எனக்கு ஏமாற்றங்கள்தான் நடந்திருக்கின்றன. அதனால் அந்தப் பயமே மனதில் படர்ந்திருந்தது. என்னைப்போலச் சனங்களும் உணவின்மேல் கண்ணும் கருத்துமாக இருந்ததால், நான் காலடியில் கிடந்த பொருளை எடுத்ததை யாரும் பார்க்கவில்லை என்றுதான் நினைக்கின்றேன். ஒருவிதமாகச் சாப்பாட்டுப் பார்சலை வாங்கிக்கொண்டு கூடாரத்தைநோக்கிச் சென்றுகொண்டிருந்தேன். சனங்களெல்லாம் வரிசையில் நின்று ஏங்கிக்கொண்டிருந்தார்கள். வரிசையின் நீளமும் அதிகரித்தபடியே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாரத்திற்குச் சென்று, கொண்டுபோன சாப்பாட்டுப் பார்சலை எல்லோருமாகப் பகிர்ந்து உண்டோம். அது இறைச்சிச் சோற்றுப் பார்சல். இறைச்சி சாப்பிட்டு எவ்வளவு காலமாகி விட்டது. இப்போதுதான் அதன் சுவையை நா மீளவும் நினைவூட்டி இருக்கிறது. உணவு உண்டபின்பு, பாயை எடுத்துக்கொண்டு வீரைமர நிழலுக்குச் சென்று சரிந்தேன். அப்போதுதான் காற்சட்டைப் பைக்குள் இருக்கும் பொருளின் ஞாபகம் வந்தது. எடுத்துப் பார்த்தேன். அழகான மோதிரம். அது பித்தளையா? பவுணா? என்றுகூடத் தெரியாத நிலையில் மறுபடியும் கூடாரத்துக்குள் ஓடினேன்.

"அப்பா அப்பா... நான் சாப்பாட்டுக்கு லைன்ல நிக்கேக்க, காலுக்குக்கீழ வெய்யிலில மினுங்கிக் கொண்டு இருந்ததப்பா...பவுணா பித்தளையா எண்டு தெரியாம பொக்கேற்றுக்க எடுத்து வைச்சிட்டு வந்தனான்...இது பவுணாப்பா?"

"இஞ்ச கொண்டா... ஓமடா தம்பி... உது பவுணடாப்பா... ஒரு பவுண் வரும்போலதான் கிடக்கு"

நம்பிக்கை இல்லாமல் பவுணா என்று அதனை உரசிப்பார்த்து உறுதிப்படுத்திக்கொண்டார். அம்மாவும் தன் பங்கிற்கு ஆராய்ந்து பவுண் என்பதை உறுதிப்படுத்தினார்.

"எல்லாம் கடவுளின்ர சித்தம்... இந்தக் கஷ்ரமான நேரத்தில இது உன்ர கண்ணில பட்டிருக்கே... கடவுளுக்குத்தான் நன்றி சொல்லோணும்"

கிழக்கைப் பார்த்தபடி அம்மா தலையிலே குட்டிக் கும்பிட்டுக் கொண்டிருந்தார். முள்ளிவாய்க்கால் பகுதியில் இருக்கும்போது பவுண், காசு என்பவற்றின் பெறுமதியே எமக்குத் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை அங்கு மதிப்பிழந்திருந்தன. உயிர் தப்பினால் மட்டுமே போதும் என்று, உயிரைக் கையில் பிடித்தபடி ஓடிவந்தோம். ஷெல்லடிகளில் உயிரிழந்து ஆங்காங்கே சிதறுண்ட பிணங்களில் கிடந்த பவுண்களைப் பலர், தம் உறவுகளென அழுதுபுலம்பி எடுத்துச்சென்றனர். போரின் இறுதிநாட்களில் திறந்துவிடப்பட்ட தமிழீழ வைப்பகத்தின் பணங்களையெல்லாம் சனங்கள் அடிபட்டு எடுத்துக்கொண்டதும் ஞாபகம் இருக்கிறது. ஆனால் நாங்களோ உயிர் தப்பினால் போதும் என்றே பதுங்குகுழிகளில் முடங்கிக் கிடந்தோம். அதுதான் இப்போது ஆசைப்பட்டதெல்லாம் எல்லோரும் வாங்கிச்சாப்பிடும்போது, நாங்கள் மட்டும் வாய் பார்த்துக்கொண்டிருக்க வழிசமைத்தது. ஆனாலும் நாங்கள் தீமை செய்யாததால்தான் கடவுள், இச்சிறு துண்டையாவது இப்போது எங்களுக்குக் கொடுத்திருப்பதாக நினைத்துக்கொண்டேன்.

எங்கள் முகாமில் தற்காலிகமாகப் பாடசாலை ஒன்று இயங்கி வந்தது. முகாமுக்குள் இருக்கும் ஆசிரியர்கள் மற்றும் தொண்டராசிரியர்களின் உதவியோடு அது இயங்கிக் கொண்டிருந்தது. தேவைக்கேற்ப அரச நிறுவனங்களின் உதவியோடு, வவுனியாவிலிருந்தும் ஆசிரியர்கள், சோதனைக் கண் காணிப்புடன் அழைத்து வரப்பட்டுக் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். காலை எட்டு மணிக்குப் பேருந்து வந்து மீளவும் பன்னிரண்டு மணிக்கு அவர்களை ஏற்றிச்செல்லும். முகாமில் இருந்த பிள்ளைகளெல்லாம் பள்ளிக்கூடம்போய் படித்தார்கள். நிறுவனங்களால் புத்தகங்களும், கொப்பிகளும், பேனை, பென்சில்களும், புத்தகப்பைகளும் வழங்கப்பட்டிருந்தன. 2008இன் பிற்பகுதியிலிருந்து பள்ளிக்கூடம் போகும் சூழலே இல்லாமல் போனதால், இப்போது பள்ளிக்கூடம்போய்ப் படிக்கும் சிந்தனை எனக்கு ஏற்படவில்லை. அடுத்த என்ன நிகழும் என்றே தெரியாத நிலையில் வாழ்ந்துகொண்டிருந்ததால், என்னையும் வீட்டில் பள்ளிக்கூடம்போகச்சொல்லி யாரும் வற்புறுத்தவில்லை. எனக்கும் பள்ளிக்கூடம் போகப் பிடிக்கவில்லை. படிப்பின் அவசியம் உணராமல் தண்ணீர் குழாயடியிலும், உணவுக்கான வரிசையிலும் காலம் கடந்துகொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளக் 'C' யில் இருக்கும் அனைத்துக் குடும்பங்களும் வேறொரு முகாமிற்குக் கொண்டு செல்லப்படவுள்ளதால், சாமான்களைக் கட்டிக்கொண்டு தயார் நிலையில் இருக்குமாறு திடீரென ஒரு நாள் அறிவித்தல் வந்தது. நாங்களும் எல்லாச் சமான்களையும் கட்டிக்கொண்டு தயார் நிலையில் இருந்தோம். இரண்டு, மூன்று வாளியும், வேசனும், கேனும், பாயும், ஐந்தாறு பழைய உடுப்புக்களும்தான் எங்களிடமிருந்த சாமான்கள். குறித்த நேரத்தில் அவற்றை எடுத்துக்கொண்டு, பலத்த சோதனைகளை அடுத்து, எங்களுக்கென வந்திருந்த பேருந்துகளில் ஏறிக் கொண்டோம். சுமார் இருபது, இருபத்தைந்து பேருந்துகள். காட்டுப்பாதை வழியாக நாங்கள் கொண்டுசெல்லப்பட்டோம். இடையில் ஒவ்வொரு பேருந்துகளில் இருந்தவர்களையும் இறக்கி இராணுவத்தினர் சோதனைகளை மேற்கொண்டார்கள். சோதனைக் கெடுபிடிகள் முடிந்து மீளவும் ஏற்றி அனுப்பினார்கள். சுமார் நாலைந்து மணித்தியாலங்களுக்குப் பிறகு புதிய முகாமை வந்தடைந்தோம். யாருமே இல்லாத முகாம். இப்போதுதான் இங்கே சனங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள். பாரிய முள் வேலிகளமைத்து இராணுவக் காவலரண்கள் சூழ்ந்த விதமாக இம் முகாம் அமைக்கப்பட்டிருந்தது. முகாம் வாசலில் எல்லோரையும் இறக்கிச் சோதனைகளைச் செய்து, பெயர்விபரங்களைப் பதிந்தெடுத்தபின் உள்ளே அனுப்பினார்கள். இம்முகாமின் பெயர் "Zone 05". "சோன் பைவ்" தான் வன்னிப்போரில் இடம் பெயர்ந்தவர்களுக்காகக் கடைசியாக அமைக்கப்பட்ட முகாம் என்றும் எல்லோரும் பேசிக்கொண்டார்கள்.

பேருந்துகளில் கொண்டுவரப்பட்டவர்கள் அனைவரும் இம்முகாமுக்குள்தான் அனுப்பப்பட்டார்கள். இம்முகாமிலே எட்டு சிறிய பிளக்குகள் மட்டுமே அமைக்கப்பட்டிருந்தன. ஒரு பிளக்கில் **20, 30** குடும்பங்களே தங்கவைக்கப்பட்டனர். இங்கே சன நெரிசலே இல்லாததால், கூடாரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பிளக்குகளிலும் இருக்கும் கூடாரங்களுக்கு அமைவாகவே தண்ணீர் ராங்கிகளும், மலசல கூடங்களும் அமைக்கப்பட்டிருந்தன. நாங்கள் 7ஆவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளக்கிற்குக் கொண்டுவரப்பட்டோம். எல்லோரும் தமக்குப் பிடித்தமான கூடாரத்தைத் தெரிவு செய்து கொண்டனர். நாங்களும் பாலைமரத்திற்குக் கீழே இருந்த கூடாரமொன்றுக்குள் வந்திருந்தோம். அன்றிரவு நிறுவனம் ஒன்று வழங்கிய சாப்பாட்டை உண்டுவிட்டு, எல்லோரும் உறக்கத்திற்குச் சென்றோம். சில்லென்ற குளிர் காற்று வீசப் பௌர்ணமி நிலவு எறித்துக்கொண்டிருந்த இரவு அது. எங்கும் ஓர் இனந்தெரியாத அமைதி. எந்தச் சத்தங்களும் இல்லை. பாலை, வீரைமரச் சோலைகள் காற்றில் அசைந்து எம்மைத் தாலாட்டிக்கொண்டிருந்தன.

பழக்கதோசத்தில் அதிகாலை எழுந்து மலசலகூடம் சென்று பார்த்தபோது சனங்களையே காணவில்லை. சனங்களுக்குப் போதுமானதாக மலசலகூடங்கள் அமைக்கப்பட்டிருந்ததால், இந்நேரத்தில் யாரும் காத்திருக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. எல்லா மலசலகூடங்களுக்கும் ஒவ்வொன்றாகத் தண்ணீர் ராங்கிகள் வைக்கப்பட்டிருந்ததனால் கால், கை கழுவும் தண்ணீருக்கும் தட்டுப்பாடு ஏற்படவில்லை. சனங்கள் எல்லோரும் சுதந்திரமாகக் காலைக்கடனை நிறைவேற்றினார்கள். "சோன் போர்" போலவே இங்கும் ஒவ்வொரு பிளக்குகளுக்கும் ஒவ்வொரு கிச்சின் அமைக்கப் பட்டிருந்தது. சமைப்பதற்கான பொருட்களை நிறுவனங்கள் வழங்கின. ஒவ்வொரு நாளும் சமையல் அட்டவணைப்படி சாப்பாடுகள் சமைத்து வழங்கப்பட்டன. ஒவ்வொருநாளும் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் ஐம்பது லீற்றர் வீதம் தண்ணீர் வழங்கப்பட்டது. "சோன் போரில்" கிடைத்ததை விடவும் இங்கு கிடைக்கும் தண்ணீர் எல்லோருக்கும் போதுமானதாகவே இருந்தது. ஏனெனில் முகம் கழுவுவதற்கும், குடிப்பதற்குமே எல்லோரும் இந்தத் தண்ணீரைப் பயன்படுத்திக்கொண்டார்கள்.

குளிப்பதற்கென்று பிளக் 02 இல் குளியல் தொட்டிகள் கட்டிவிடப்பட்டிருந்ததால், எல்லா பிளக் சனங்களும் வாரத்தில் இருமுறையோ அல்லது பலமுறையோ போய் அங்கு குளிப்ப துண்டு. நாங்களும் அடிக்கடி அங்கு சென்றுதான் குளிப்போம். குளிக்கும்போது, இருக்கும் இரண்டு, மூன்று உடுப்புக்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோய்த்துக்கொண்டு வருவோம். எங்கள் பிளக்கில் இருந்து சுமார் எண்ணூறு மீற்றர் தொலைவில்தான் பிளக் 02 அமைந்திருந்தது. முள்வேலிக் காப்பரண்களின் கரையால் அமைக்கப்பட்டிருந்த கிரவல் பாதைவழியாகவே ஆடியசைந்து குளிக்கப்போவதும் வருவதுமாக இருப்போம். அந்தத் தண்ணீர் கொஞ்சம் சவர்த் தன்மையுடையதாக இருந்ததால், அத்தண்ணீரில் முழுகி முழுகி எனக்குத் தலைமுடிகள் செம்பட்டை நிறமாகிவிட்டன. அதனால் என்னைச் செம்பட்டை என்றே அழைப்பார்கள். குளித்து விட்டு வருகிறபோது, நண்பர்களுடன் ஒவ்வொரு ஆமிக்காப்பரண்களிலும் போய்,

"ஐயே பத் தியனவதே? ஏக்கா பத் தென்டக்கோ ஐயே"

என்று எமக்குத் தெரிந்த அரைகுறைச் சிங்களத்தில் கேட்போம். மிஞ்சிப்போய் இருக்கும் சோற்றுப்பார்சல்களை இராணுவ வீரர்கள் எங்களுக்குத் தருவதுண்டு. அந்தச் சாப்பாட்டின் சுவை, அந்த நேரத்தில் எமக்கு உயர்வாகத்தான் இருந்தது. மீன்கறிவிட்டுக் கட்டப்பட்ட அந்த வெள்ளையரிசிச் சோற்றுப்பார்சல் இப்போதும் தான் எனக்கு நினைவில் வந்துபோகிறது. ஒவ்வொரு அரணாக ஓடியோடிச் சென்று வாங்கிய பார்சல்களைக் கணப்பொழுதில் உண்டுவிடுவோம். அவ்வளவிற்கு எம் தோழர்கள் கூட்டம், இந்தச் சாப்பாட்டிற்கே அடிமைப்பட்டிருந்தது. தினமும் எங்களுக்காகவே எஞ்சியிருக்கும் சாப்பாட்டுப் பார்சல்களை காவலரண்களில் நிற்கும் ஆமிக்காரர்கள் எடுத்துவைத்திருப்பதையும் வழக்கமாக்கிக் கொண்டார்கள். முகாம் கிச்சினில் எந்த நாளும் மரக்கறிச் சாப்பாடுதான். இருந்துவிட்டு ஒருநாள்தான் மீன்ரின் கறி அல்லது கருவாட்டுக் கறி கிடைப்பதுண்டு. அதனால் மாமிச உணவு என்றால் எங்களுக்குக் கொள்ளைப் பிரியமாக இருந்தது.

"டேய் வாங்கடா.. அங்கால பிளக்பொடியள் பொயின்றடிக்கு வேளைக்கே போட்டாங் களாமடா... ஓடுங்கடா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று யாராவது சொன்னால் போதும், எங்கள் பிளக்கிலிருந்து பொடிப்பட்டாளம் வேகமாகப் படையெடுக்கத் தொடங்கும். எப்போது மதியமாகுமென்று காத்திருந்து, குறித்த நேரத்திற்கு முள்வேலி அரண்கள் நோக்கி ஓடிய அந்தத் தருணங்கள், மீளவும் கிடைத்துவிடாத கனாக்காலங்களாகும். சிறைக்குள் இருந்தாலும் நண்பர்களுடன் மகிழ்ந்திருந்த அந்நிகழ்வுகளை மறக்க முடியாமல், மீண்டும் மீண்டும் மனம் அசைபோட்டுக்கொண்டே இருந்தது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம்: 06**

"சோன் பைவ்" முகாமிற்கு நாங்கள் கொண்டுவரப்பட்டு ஒருமாதத்திற்குப் பின்னர், இங்குள்ள மாணவர்களுக்காகத் தற்காலிகப் பாடசாலை ஆரம்பமாகியது. இப்போது எல்லா இளசுகளும் பள்ளிக்கூடம்போகத் தொடங்கிவிட்டார்கள். எனக்குப் படிக்கவே பிடிக்கவில்லை. அவ்வளவிற்கு இந்த முகாம் வாழ்க்கை எங்களை மாற்றியிருந்தது. ஆனாலும் என்னுடைய நண்பர்கள் போகிறார்கள் என்பதால், அவர்களின் ஆக்கினை தாங்கமுடியாமல் பள்ளிக்கூடம் செல்லவேண்டியேற்பட்டது. பிளக் 01 இல் இப்பள்ளிக்கூடம் அமைக்கப்பட்டிருந்ததால் எங்கள் பிளக்கில் இருந்து கால்நடையாக ஒவ்வொரு பிளக்குகளுக் குள்ளாலும் ஊடுருவி, அங்கு இருக்கும் ஆற்றுப் பள்ளங்களில் இறங்கி, மரங்களில் ஏறியிறங்கிப் பள்ளிக்கூடத்தை அடைவோம். பெரிய தறப்பாழால் போடப்பட்டிருக்கும் கூடாரமே பள்ளிக் கூடமாகவிருந்தது. பள்ளிக்கூடத்திற்கு இந்தக்காலங்களில் வெள்ளை உடுப்பு அணிந்து செல்வதில்லை. வெள்ளையுடுப்பும் எங்களுக்கு வழங்கப்படவில்லை. வீட்டில் உடுத்த உடுப்புடனேயே எல்லோரும் பள்ளிக்கூடம் போய் வந்ததுண்டு. எங்களுக்கான ஆசிரியர்கள், வவுனியாப் பகுதியிலிருந்து மிகுந்த பாதுகாப்புக் கண்காணிப்புக்கு மத்தியில் கொண்டுவரப்பட்டு கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

வன்னியில் 2008 ஆண்டின் பிற்பகுதியில், பள்ளிக் கூடங்களில் சனங்களெல்லாம் இடம்பெயர்ந்திருந்ததனால் நான் பள்ளிக்கூடம் போவதையே நிறுத்திவிட்டேன். போர் உக்கிரம் பெற்றிருந்த காலமாகையால் யாரும் பள்ளிக்கூடம் போகவும் தூண்டவில்லை. பின்பு "சோன் போர்" முகாமிலும் வருத்தம், துன்பமென்று திரிந்ததால் பள்ளிக்கூடம் போவதில் கரிசனையைக் காட்டவில்லை. இப்போது நான் பள்ளிக்கூடத்தில் படித்து ஒரு வருடத்திற்கும் மேலாகிவிட்டது. இப்போது நான் எந்த வகுப்பில் போயிருப்பது? ஒன்றுமே எனக்கு விளங்கவில்லை. தரம் எட்டைப் படிப்பதா? இல்லை தரம் ஒன்பதைப் படிப்பதா? என்ற குழப்பத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தேன். ஆனாலும் நண்பர்கள் தரம் ஒன்பதில் போய் இருந்ததால் நானும் ஒன்பதாம் வகுப்பில் போய் இருந்துவிட்டேன். இப்போது மூன்றாம் தவணைக்குரிய காலமாக இருந்தாலும், முதலாம் பாடத்திலிருந்தே சொல்லித் தந்தார்கள். வகுப்பில் கதிரை, மேசைகளே இல்லை. பெரிய கூடாரத்திற்குக் கீழே தறப்பாளை விரித்துவிட்டே எல்லோரும் இருந்து படித்தோம். எட்டு, எட்டரைக்குத் தொடங்கும் பள்ளிக்கூடம், காலைப் பிரார்த்தனை களின்றி நடைபெற்றதாகவே எனக்கு ஞாபகம் இருக்கின்றது. இல்லையேல் நாங்கள் ஆடிப்பாடிச் செல்ல நேரம்போய் விடுவதால் காலைப் பிரார்த்தனை நடைபெறுவது எங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஒருநாள்கூட காலைப் பிரார்த்தனை நடந்ததைக் கண்டதில்லை. இங்கு எத்தனை மணிக்கும் வகுப்புக்குப் போவோம். எங்களை ஏன் பிந்தி வந்தீர்கள்? என்று கூடக் கேட்கமாட்டார்கள். அப்படிக்கேட்டாலும் ஏதும் சாட்டுச்சொல்லி விடுவோம்.

சிறை வாழ்க்கையில் இருப்பதால் வெளியிலிருந்து வரும் ஆசிரியர்கள், எங்களோடு நல்ல சந்தோசமாகவே பழகிவந்தனர். நாங்கள் வகுப்பிற்குச் சென்று சிறிது நேரத்துக்குள்ளேயே இடைவேளை விட்டுவிடும். இடைவேளை நேரத்தில் எங்களுக்குத் திரிபோசா உருண்டை, பிஸ்கட், இலைக்கஞ்சி முதலியவற்றில் ஏதாவதொரு உணவு வழங்குவார்கள். வாங்கிச் சாப்பிட்டுவிட்டுக் கொஞ்சநேரம் படித்தபின் வந்துவிடுவோம். சிலவேளைகளில் வேறு வகுப்புக்களிலும் போய் இருந்து படித்த நினைவுகளும் உண்டு. காலையில் பள்ளிக்கூடத்திற்கென்று வெளிக்கிட்டுச் சென்று, இடையில் பள்ளிக்கூடம் போகாமல் கிளித்தட்டு விளையாடிய நாட்களும் ஏராளம். நாங்கள் பொழுது போக்கிற் காகவே பள்ளிக்கூடம் போவதுண்டு. நாங்கள் மட்டுமல்ல அங்கிருந்த ஏராளமானவர்கள் அதற்காகத்தான் சென்றார்கள். பள்ளிக்கூடம் போகாமல் விட்டாலும் யாரும் கேட்பதில்லை. சுதந்திரப் பறவைகளாகவே அந்தச்சிறைக்குள் இளமைக்காலம் போய்க்கொண்டிருந்தது. அந்தமுகாமில் காலையில் தொடங்கும் பள்ளிக்கூடம், மதியம் பன்னிரண்டு மணிக்கே முடிவடைந்துவிடும். இந்தப் பள்ளிக்கூடத்தில்தான் புதுக்குடியிருப்பில் என்னோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்த நண்பனையும் காணமுடிந்தது. அவன் பெயர் டினா. அவனுடைய தம்பி கிரி. அவன் எங்களுக்கு இரண்டு வகுப்புக் கீழே படித்துக்கொண்டிருந்தவன். இப்போது இந்தப் பள்ளிக் கூடத்தில்தான் அவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். நான் பள்ளிக்கூடம் போன நாளே டினாவைக் கண்டுவிட்டேன். வன்னியில் என்னோடு படித்த நண்பனை இங்கு காண்பது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும். முதல் நாள் வகுப்பில், நான் பின்னால் இருந்ததால் முன்னால் உள்ளவர்களை இலகுவாகப் பார்க்க முடிந்தது. நான் வகுப்புக்குள் வந்ததை அவன் காணவில்லை. நானும்தான் அவனைக் காணவில்லை. வகுப்பில் ரீச்சர் பாடத்தில் ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு டினாவை எழுப்பிவிட்டார். அப்போதுதான் அவனைக் காண நேர்ந்தது. இடைவேளை நேரம் எப்போது வருமென்று காத்திருந்து அவன் முன்னால் போய் நின்றேன்.

"அடேய்.. நீ எங்கடா இங்க. இந்தமுகாமிலயாடா இருக்கிறாய்? நான் உன்னைக் காணவேயில்லடா"

"நாங்கள் வந்து இரண்டுகிழமை ஆகுதுடா.. "சோன் போர்" முகாமில வச்சிருந்திட்டு சன நெருக்கத்தால இங்க கொண்டந்தவங்கள். உன்னக்கண்டது சந்தோசமா இருக்குடா.. வீட்ட எல்லாரும் இருக்கினமோடா? யாருக்கும் ஒண்டும் ஆகேல யாடா? எங்கட பெடியள் வேற யாரும் இங்க இருக்கிறாங்களா?"

"டேய் எங்களையும் "சோன் போர்" ல இருந்துதான் கொண்டந்தவங்கள். அங்க "பீ" பிளக்கில இருந்தனாங்கள்டா. எல்லாரும் இங்கதான் இருக்கம்... யாருக்கும் ஒண்டுமாகேல்ல. எங்கட பெடியளயும் நான் கண்டதில்ல... அது சரி நீ எந்த பிளக்கில இருக்கிறாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் ஏழாவது பிளக்கில இருக்கிறன். தம்பி யாக்களும் பள்ளிக்கூடம் வந்தவங்களோடா?"

"நாங்கள் நாலாவது பிளக்கில இருக்கிறம் டா...ஓம் டா, தம்பியாக்களும் இஞ்சதான்... அவங்கட கிளாஸ்ல இருக்கிறாங்கள். போகேக்க நில்லு எல்லாரும் சேந்து போவம்...."

"ஓம் டா டினா... உனக்குப் பக்கத்திலயே வந்திருக்கிறன் பொறு"

என்னுடைய புத்தகப்பையை அவனுக்குப் பக்கத்தில் கொண்டு போய் வைப்பதற்கிடையில் டினா, நான் இருந்த இடத்திற்குப் புத்தகங்களோடு வந்து குந்தினான். பிறகென்ன ஒவ்வொரு புதினங் களாகக் கதைத்துக்கொண்டிருந்ததில் அன்றைய பள்ளிக் கூடப்பொழுது போனதே தெரியவில்லை. காலையில் என்னோடு வந்த நண்பர்களிடம் சொல்லிவிட்டு, நான் டினாவுடன் சேர்ந்து வந்துகொண்டிருந்தேன். அவனுடைய தம்பி கிரியும் எங்களோடு வந்துகொண்டிருந்தான். வரும்போது முகாம் புதினங்களையும், ஊர்ப்புதினங்களையும் கதைத்தபடியே வந்துகொண்டிருந்தோம்.

நாங்கள் புதுக்குடியிருப்பில் இருக்கிற காலத்தில் உலகளந்த பிள்ளையார் கோவிலடியில் ஒவ்வொருநாளும் பின்னேரங்களில் கிரிக்கெட், சிரட்டைப்பந்து, ஒளித்துப்பிடித்து, புளிச்சல், கிளித் தட்டு, அசோக்காய்களால் எறிதல் போன்ற விளையாட்டுக்களை எல்லாம் விளையாடுவதுண்டு. அவ்விளையாட்டுக்களால் வெவ்வேறு பள்ளிக்கூடங்களில் படித்த நண்பர்களும் ஒன்றிணைவது வழக்கம். மாலை நேரமென்றாலும் சரி, விடுமுறை நாட்களில் காலை நேரமென்றாலும் சரி உலகளந்த பிள்ளையார் கோவில் வெளிவீதி கலகலப்பாகத்தான் இருக்கும். மதி, அமுதன், சதீஸ், எழிலன், சுள்ளான், கஜி, கவி, டினா, கிரி, அனோயன், தர்சன், புவி என்று எத்தனையோ நண்பர்களை மறக்கவே முடியாது. எல்லோரும் உலகளந்தபிள்ளையார் கோயிலடியைச் சூழ்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியில்தான் இருந்தார்கள். ஆனால் எல்லோரும் ஒரே பள்ளிக்கூடத்தில் படிக்கவில்லை. மத்தியகல்லூரி, ஸ்ரீசுப்பிரமணிய வித்தியசாலை, வேணாவில் பள்ளிக்கூடம், கொக்கிளாய் அ.த.க. பாடசாலை, றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், விக்கினேஸ்வரா வித்தியாலயம் என்று பல பாடசாலைகளிலும் படித்துக் கொண்டிருந்தார்கள். டினாவும், கிரியும் ஸ்ரீசுப்பிரமணிய வித்தியசாலையில் படித்ததாகவே ஞாபகம் இருக்கிறது.

பள்ளிக்கூடம் விட்டு வந்த உடனே, உலகளந்த பிள்ளையார் கோவிலடிக்கு வந்து விடுவோம். கவி வீட்டில் கிளித்தட்டு மற்றும் ஒளிச்சுப்பிடிச்சு விளையாட்டுக்களை விளையாடுவோம். அங்கே காய்த்திருக்கும் மாங்காய்களைப் பிடுங்கி உப்பும், தூளும் போட்டுத் தின்ற நாட்கள் கொஞ்சமல்ல. அன்னமுன்னாவின் முற்றிய காய்களைப் பிடுங்கி, யாருக்கும் தெரியாமல் சருகுகளுக்குள் வைத்துவிட்டு, இரண்டு - மூன்று நாட்களின் பின் எடுத்து, நண்பர்களுடன் பறிபட்டுத் தின்னும் நினைவுகளையும் மறந்துவிட முடியாது. பிள்ளையார் கோவிலில் பொங்கல் விசேடங்கள் என்றால், பூசை முடியும் நேரம்அறிந்து புக்கை, மோதகங்களுக்காய் ஓடியநாட்களும் அதிகம்தான். கோவிலடிக்கு முன்னால் பல வருடங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி வாகனத்தைக் களமாகக்கொண்டு, நண்பர்களில் ஒரு குழு வாகனத்திற்கு வெளியேயும், மறு குழு வாகனத்திற்கு உள்ளேயும் நின்று, அசோக்காய்களால் எறிந்து விளையாடும் விளையாட்டு அந் நாட்களில் எங்கள் அனைவரையும் மகிழ்ச்சியால் கட்டிப் போட்டிருந்தது. கோயில் வெளிவீதியில் தகரப்பேணிகளையும் - சிரட்டைகளையும் அடுக்கிப் பேணிப்பந்து - சிரட்டைப்பந்து விளையாடியதும் மறந்துபோகவில்லை. விளையாடிக் கொண்டிருக்கும்போது கிபீர் அல்லது மிக் ரக விமானங்கள் வந்துவிட்டால் போதும், எல்லோரும் அவ்வெட்டையில் நின்று எங்கு குத்துகிறான்? எத்தனை குண்டு போடுறான்? என்று பார்த்துக்கொண்டு நிற்போம். அருகில் எங்கேயும் தாக்குதல் நடத்தப்பட்டால், கோவிலடியில் நின்ற ஆலமரங்களில்தான் காப்பெடுத்துக்கொள்வோம். அதுவும் முடியாத பட்சத்தில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரத்திற்கு நிலத்தில் குப்பறப்படுத்துக் காப்பெடுப்பதுமுண்டு. விமானங்கள், தாக்குதல்களை நடத்திவிட்டுப் போனவுடன் தாக்குதல்கள் நடத்தப்பட்ட குடியிருப்புப் பகுதிகளை, நண்பர் களோடு போய்ப்பார்ப்பதும் வழக்கத்திலிருந்தது.

அக்காலம் பயமறியாத மகிழ்ச்சியான வசந்தகாலமென்றே சொல்லலாம். அத்தனை நிகழ்வுகளிலும் என்னோடு ஒன்றாக இருந்த நண்பர்களில் டினாவும், கிரியும் முக்கியமானவர்கள். இவர்களின் வீடு, உலகளந்த பிள்ளையார் கோவிலுக்குப் பின்னால், சுமார் நூறு மீற்றர்கள் தொலைவில்தான் இருந்தது. ஓங்கி உயர்ந்து பட்டுப்போய் நின்ற காட்டாமணக்கே அவனுடைய வீட்டை அடையாளப்படுத்திவிடும். டினாவுக்கு மூன்றும் ஆண் சகோதரர்கள். மூத்தவன் படித்துக்கொண்டிருந்தபோது புலிகளால் வலுக்கட்டாயமாகப் போராட்டத்தில் இணைக்கப்பட்டவன். அவன் கோம்பாவிலில் இருந்த அவனுடைய அம்மம்மா வீட்டில் தங்கியிருந்து படித்தபோது முயல், கிளி, லவ்பேர்ட்ஸ், மீன், புறா என்று பல செல்லப்பிராணிகள் வளர்த்து வந்ததனால், நாங்கள் அங்கு அடிக்கடி சென்று அவற்றினைப் பார்ப்பதுண்டு.

அவனுக்கு அப்போது 16 வயது வருமென நினைக்கின்றேன். அரும்பு மீசை தளிர்விடும் வயது. இராணுவத்தின் அதி விரைவான முன்னேற்ற நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். வீட்டுக்கொருவர் போராட்டத்தில் கட்டாயமாக இணைக்கப்பட்ட காலம். யாராவது ஒருவர் நாட்டுக்காகச் செல்லவேண்டிய கட்டாயக் கட்டுப்பாடு இருந்த காலம். இளைஞர்களும், யுவதிகளும், சிறுவர்களும் வலுக் கட்டாயப்படுத்திப் போராட்டத்தில் இணைக்கப்பட்ட காலம். வயது குறைந்த பள்ளிச்சிறுவர்களாக இருந்தாலும் தோற்றமாக இருக்கும் பட்டசத்தில், அவர்கள் வலுக்கட்டாயமாகப் பிடிக்கப்பட்டு, போராட்டத்தில் இணைக்கப்பட்டனர். அதுமட்டு மன்றி அத்துமீறி வீடு புகுந்து, போராட வலுவுடையவர்களையும் போராளிகள் பிடித்துச் சென்றனர். ஈழப்போரின் இறுதிக் காலகட்டம் பெரும் துன்பங்களையே மக்களுக்குக் கொடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது. ஒருநாள் மாலை நேர வகுப்புக்குப் போன டினாவின் அண்ணனார், போராளிகளால் வழிமறித்து வலுக் கட்டாயமாக ஏற்றிச்செல்லப்பட்டான். அவனுக்கு வயது குறைவு. படிக்கிற பெடியன். ஆனாலும் அன்றைய நாட்களில் அவன் ஆயுதமேந்த வேண்டிய தேவையை இராணுவத்தினர் ஏற்படுத்தி விட்டனர். வகுப்பிற்குச் சென்ற பிள்ளையைப் போராளிகள் பிடித்துவிட்டார்கள் என்ற செய்தி பெற்றோருக்கு எட்டியது. அன்று மாலை, நாங்கள் உலகளந்த பிள்ளையார் கோயில் வெளிவீதியில் சிரட்டைப்பந்து விளையாடிக்கொண்டிருந்த நேரம்.

> "தம்பி டேய்...தம்பி டேய்.. உன்ர கொண்ணாவப் பெடியள் பிடிச்சுக்கொண்டு போறாங்கள். எங்கட கடைக்கு முன்னாலதான் மறிச்சுப் பிடிச்சிட்டுப் போறாங்கள். கொம்மாக்களுக்கு இதப்போய் சொல்லுடா.. ஓடடா..."

வேகமாகச் சைக்கிளை உழக்கிக்கொண்டு வந்த சுந்தரமண்ணை, எங்களோடு விளையாடிக்கொண்டிருந்த டினாவைக் கண்டுவிட்டு, அவனிடம் பதற்றப்பட்டுச் சொல்லிய செய்தி எங்களுக்கு அவ்வளவு ஆச்சரியமாக இருக்கவில்லை. ஏனெனில் அன்றைய நாட்களில் இது பழக்கப்பட்டுப்போன செய்தியாகவே இருந்தது. அண்ணனை இயக்கம் பிடித்துக்கொண்டுபோன செய்தியைக் கேட்டுவிட்டு டினா வீட்டைநோக்கி ஓடத்தொடங்கினான். அவனுக்குப்பின்னால் அவனுடைய தம்பி கிரி. அவர்களுக்குப் பின்னால் விளையாடிக் கொண்டிருந்த நாங்கள் என்று நண்பர்கள் எல்லோருமே டினாவின் பின்னால் புதினம் பார்ப்பதற்காக ஓடினோம். நாங்கள் அவனுடைய வீட்டை அடைந்தபோது, அங்கு அக்கம்பக்கத்தினர் கூடிநிற்பது தெரிந்தது. உள்ளே சென்றோம். அவனுடைய தாய் தலையில் அடித்துப்புலம்பிக்கொண்டிருந்தார்.

> "என்ர பிள்ளை.. என்ர குழந்தை.. படிக்கிற பிள்ளையக்கூடக் கோதாரி பிடிப்பாங்கள் விட்டு வைக்கிறாங்கள் இல்லையே... கடவுளே பாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுப் போவாங்களுக்கு ஒரு அழிவு வருதில்லையே. என்ர பிள்ளையக் கொல்லத்தான் கொண்டு போட்டாங்கள்.. ஐயோ நாசமறுவாங்கள்.. துலைவார்.. இதையெல்லாம் பாத்திட்டு இருக்க முடியேல்லையே.. பொத்திப் பொத்தி வளத்தேனே. பெத்த வயிறு பத்தி எரியுதே.. ஐயோ..."

அவனின் தாய் புலம்பும் சத்தம் எல்லோரையும் கலங்கவைத்து விட்டது. இப்படியான அழுகுரல்களும், ஒப்பாரிகளுமே இன்றைய நாட்களில் மலிந்து கிடந்தன. வன்னியில் இருந்த ஒவ்வொரு வீடுகளிலுமே இவ் நிகழ்வுகள் சாதாரணமாகவே நடைபெற்றுக் கொண்டிருந்தன. நாட்கள் ஓடிச் சில மாதங்கள் கடந்தன. அன்றும் உலகளந்த பிள்ளையார் கோவிலடியில்தான் விளையாடிக் கொண்டிருந்தோம். நண்பன் புவி, கோவிலடியால் இத்துப்போன அவனுடைய சைக்கிளில் பதறியடிச்சபடி சென்று கொண்டு இருந்தான்.

"டேய் புவி... வாடா டேய்.. எங்கடா பறக்கிறாய்? விளையாடுறதுக்கு ஆக்கள் காணாமக்கிடக்கு வாடா..."

என்று சொல்லியபடி அவனுடைய சைக்கிளைப் போய் இழுத்து மறித்தேன்.

"விடடா... டேய் விடடா... அவசரமாபோறன் விடு..."
"உனக்கென்னடா அவசரம். கொஞ்ச நேரம் விளையாடீட்டுப் போவலாம் வா."

"டேய் டினான்ர அண்ணா வீரச்சாவாம் டா.. கடையடில கதைச்சிட்டு இருந்தவயள். அதுதான் ஒருக்கா உண்மையோண்டு பாக்கப்போறன்...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மனதில் அவனுடைய எத்தனையோ நினைவுகள் வந்துபோயின. நேற்றுத்தான் கண்டமாதிரி இருந்தவன். அதற்கிடையில் வீரச்சாவடைந்துவிட்டான். எனக்கு மட்டுமல்ல, என்னோடு விளையாடிக்கொண்டிருந்த அத்தனை பேருக்கும்தான் இச்செய்தி துக்கத்தைக் கொடுத்தது. சிறிது நேரத்திலேயே முகாரி ராகம் ஒலிக்கும் சத்தமும் வீரவணக்கச் செய்தி அறிவிப்பும் தொலைவில் ஒலித்துக்கொண்டிருந்தன.

நண்பர்கள் எல்லோரும் டினா வீட்டைநோக்கிப் பயணித்தோம். வீட்டு வாசலில் சிகப்பு, மஞ்சள் கொடிகள் காற்றிலே அசைந்தாடிக்கொண்டிருந்தன. போராளிகளின் ஜீப் வண்டிகள் அங்குமிங்குமாய் பறந்துகொண்டிருந்தன. ஒருபக்கம் வீர வணக்கச் செய்தி அறிவிப்புக்களும் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அவற்றுக்கும் மேலால் ஒப்பாரிச் சத்தமும் ஒலித்துக் கொண்டிருந்தது. சொந்தம், பந்தம், உறவுகள், அயலவர்கள் என்று யார் யாரோவெல்லாம் போய் வந்துகொண்டிருந்தனர். வளவை நெருங்கி விட்டோம். கடப்பைக் கடந்து உள்ளே நுழைந்தோம். அங்கு நின்றுகொண்டிருந்த எல்லோரும், சோகத்தால் முகங்களைத் தொங்கப்போட்டுக்கொண்டிருந்தனர். போராளிகள், இறுதிக் கிரியைகளுக்காகப் பந்தல் போட்டுக் கொடிகளால் சோடித்துக் கொண்டிருந்தனர். வீட்டுமண்டப வாசலை அடைந்து உள்ளே சென்றோம். வாங்கில் வித்துடல் வைக்கப்பட்டிருந்தது.

> “ஐயோ... குஞ்சுகளா.. என்ர பிள்ளையப் பாருங்கோடா. என்ர செல்லத்தைப் பாருங்கோடா.. குருவி, முயல் பார்க்கவெண்டு ஒரே அவனுக்குப் பின்னால திரிவியளே. என்ர குழந்தை இப்படிக் கிடக்கிறானே. ஐயோ.. செல்லம்.. என்ரை குஞ்சு.. எழும்படா.. உன்னப் பாக்க யாரெல்லாம் வந்திருக் காங்களெண்டு பாரடா.. இதப் பாக்கத்தான் நான் உயிரோட இருக்கிறனோ? ஐயோ.. படிச்சிட்டு இருந்த குழந்தையக்கொண்டே பலிகொடுத்திட்டு வந்திட்டாங்களே.. இவங்கள் நாசமாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவாங்கள். என்ர குழந்தேன்ர முகத்தைக்கூடப் பாக்க முடியேல்லயே.. ஐயோ.. என்ர செல்லம் வாடா.. எழும்பி வாடா..."

எங்களைக் கண்டவுடன் தாயார் தலையிலும், மார்பிலும் அடித்துப் புலம்பத்தொடங்கினார். அவனுடைய தந்தையார், வித்துடல் பெட்டியில் தலைசாய்ந்து அழுதுகொண்டிருந்தார். டினாவும், அவனுடைய சகோதரர்களும் வித்துடல் பெட்டியின் கால்மாட்டில் கிடந்து அழுதுகொண்டிருந்தனர். சொந்தங்கள், உறவுகள், அயலவர்களென்று பலர் மண்டபத்தையே நிறைத்திருந்து ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்தனர். எங்களை அறியாமலே கண்களில் இருந்து கண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. வித்துடல் பார்வைக்காகத் திறக்கப்படவில்லை. சீல் பண்ணியே வித்துடல் வைக்கப் பட்டிருந்தது. இரு கரைகளிலும் போராளிகள் இருவர் ஆயுதந் தாங்கியபடி மெய்ப்பாதுகாப்பினை வழங்கிக்கொண்டிருந்தனர். வித்துடலின் தலைமாட்டில் அவனுடைய படம் இருந்தது. அவன் வீரப்புலியாகப் பச்சை உடையில் கம்பீரமாயிருந்தான். அவனுடைய கழுத்தில் நச்சுக்குப்பி தொங்கியபடி இருந்தது. ஆயுதத்தைக் கரங்கள் தாங்கி, நெஞ்சோடு அணைத்தபடியிருந்தன. தலையிலே புலிச்சின்னம் பொறித்த தொப்பி அணிந்திருந்தான். அந்தக் குழந்தை முகத்தில் முளைத்திருந்த அரும்பு மீசை, அவனின் இளமையைக் கம்பீரப்படுத்திக்கொண்டிருந்தது. ஆனாலும் அவனுடைய உடலைப் பார்க்கக்கூட முடியாத நிலை எல்லோரையுமே துக்கப்படுத்திற்று.

"ரெண்டு மூண்டு நாளைக்கு முதல் மணலாத்தில நடந்த சண்டைலதானாம் பெடியன் வீரச் சாவடைஞ்சவன். அவன்ர பொடி சிதறிப்போச்சாம். ரெண்டு மூண்டு துண்டுகள் தானாம் கிடைச்சது. அதுதான் பொடிய சீல்பண்ணிக் கொண்டந் திருக்காங்கள். நாளைக்கு விடிய முள்ளியவளைத் துயிலுமில்லத்திலதானாம் வித்துடலை விதைக்கப் போறாங்கள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதுபோன ஐயா ஒருவர் யாருக்கோ சொல்லிக்கொண்டிருந்த கதை, என் காதில் விழுந்தது. என் நண்பனின் அண்ணன், இன்று இளம் வயதிலேயே நாட்டுக்காகத் தன் உயிரைத் தியாகம் செய்திருக்கிறான். அவனின் திருவுருவம் என் கண்ணுக்குள்ளே தோன்றி மறைந்துகொண்டிருந்தது. நாங்கள் எல்லோரும் பக்கத்து வீடுகளில் சென்று பூக்கள் பறித்து வந்து, அண்ணனின் திருவுருவப் படத்தடியில் வைத்து அஞ்சலி செலுத்திவிட்டு வெளியேறினோம். எல்லோரது மனதிலும் கவலையே தோய்ந்திருந்தது. முகாரி ராகம் அனைவரையும் கலங்க வைத்துக்கொண்டிருந்தது. எனக்கு அன்றிரவு தூக்கமே வரவில்லை. உருண்டு, பிரண்டு படுத்துக் கொண்டிருந்தேன். நேரமோ போவாதாகத் தெரியவில்லை. அண்ணனின் பழைய நினைவுகளை அசைபோட்டபடி, மனது விம்மி வெடித்துக்கொண்டிருந்தது. விடிந்ததும் தேவையான பூக்களை ஆய்ந்து, பக்கத்து வீட்டு அக்காவிடம் கொடுத்து, மாலை கட்டிக்கொண்டு போகவேண்டும் என்று நினைத்துக்கொண்டேன். விடிந்ததற்கான அறிகுறியாய் காலைச்சேவல்கூவி, ஐந்தரைக்குக் கோயில் மணி ஒலித்துக்கொண்டிருந்தது. எழும்பிப் பல் மினுக்கி முகத்தைக் கழுவிவிட்டு, பெரிய பையொன்றை எடுத்துப் பூமரங்களில் ஏறித் தேவையான பூக்களை ஆய்ந்துகொண்டு பக்கத்து வீட்டுக்கு ஓடினேன்.

"அக்கா... அக்கா...."

"ஓமடா தம்பி சொல்லுடா... என்ன விடியயே பூக்ளோட திரியிறாய்..."

"காவியா அக்கா இன்னும் எழும்பேல்லயா? என்ர வகுப்புப் பெடியன்ர அண்ணா வீரச் சாவடைஞ் சிட்டார். அதுதான் அக்காவக்கொண்டு மாலை கட்டுவமெண்டு வந்ததனான்."

"எங்கயாமப்பு வீரச்சா... ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முந்தநாள் மணலாத்தில நடந்த சண்டேல வீரச் சாவாம்... பொடி சீல்பண்ணித்தான் வந்திருக்கு..."

"ஐயோ கடவுளே. பெத்ததுகள்கூடப் பொடியப் பாக்கேலாத நிலைமையிலதான் பொடியக் குடுத்திருக்கிறாங்களே. அவள் வீட்டுக்குப் பின்னால தாவாரம் கூட்டிற்று நிக்கிறாள் தம்பி.. கொண்டு போய்க்குடு கட்டித்தருவாள்.."

வீட்டிற்குப் பின்னால் கூட்டிக்கொண்டு நின்ற அக்காவிடம் நடந்ததைக்கூறி, பூக்களைக்கொடுத்து மாலைகட்டிக்கொண்டு வந்தேன். அப்போதுதான் அம்மா குசினிக்குள் காலைச்சாப்பாடு சரிக்கட்டிக்கொண்டிருந்தாள். நான் கொண்டு வந்த மாலையையும், பூக்களையும் சுவரில் இருந்த ஆணியில் கொழுவிவிட்டுக் குசினிக்குள் போனேன்.

"என்னடா தம்பீ... விடியக்கிடேல ஓடுப்பட்டுத் திரியுறாய்...தேத்தண்ணியும் குடிக்காம எங்க போனீ? இரவும் வடிவாச் சாப்பிடாமப் போய் கிடந்திட்டாய்..?

"இல்லையம்மா.. இஞ்ச வருவான் டினாவத் தெரியும் தானேயணே உங்களுக்கு. அவன்ர அண்ணா வீரச்சாவடைஞ்சிட்டாரணே. அதுதான் பூவாஞ்சு கொடுத்துக் காவியாக்காவக் கொண்டு மாலை கட்டிற்று வந்தனான்.."

"யாரடா? உன்ன விளையாடக் கூட்டீற்றுபோக வருவாங்கள் அந்த ரெண்டு பெடியங்களின்ர தமயனே?"

"ஓமணே..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புடிச்சுக்கொண்டுபோய் ரெண்டு மூண்டு மாதந் தானடா வரும். அதுக்கிடேல வீரச்சாவே.. உவங்கள் ஒருவேரையும் விடமாட்டாங்கள். எல்லாச் சின்னனுகளையும் கொண்டே பலிகொடுக்கத்தான் நிக்கிறாங்கள்.."

"மூண்டு மாதந்தானாமணே. ஒரு கிழமைக்கு முதல் புதுக்குடியிருப்புச் சந்தீல, பெடியளோட நிக்கேக்க தேப்பனக் கண்டு கதைச்சவனாம்.. "பெரிய கஷ்ட மொண்டுமில்லை. ஈசியான வேலைதான் பாத்துக் கொண்டு நிக்கிறன். வீட்ட ஒருவேரும் ஒண்டும் யோசிக்க வேண்டாம் எண்டு சொல்லிட்டுப் போனவனாம்" எண்டு அவற்றை அப்பா சொல்லிக் கத்தீற்று நிண்டவர். பொடிகூட சீல் பண்ணித் தானணே வந்திருக்கு.. பொடி சிதைஞ்சிட்டாம்.. விடிய பத்துமணிக்கு முள்ளியவளைத் துயிலு மில்லத்திலதான் விதைக்கப்போகினமணே. நான் பெடியங்களக்கொண்டு பூவாயோணும். நான் வெளிக்கிடுறன். துயிலுமில்லம் போய்த்தான் வருவனணே..."

"சரி போயிற்றுவா.. இரவும் ஒழுங்காச் சாப்பி டேல்ல... இந்தா ரெண்டு றொட்டியச் சாப்பிட் டிற்றுப் போவன் தம்பீ"

"எனக்குப் பசிக்கேலயம்மா... வந்து சாப்பிடுறன்.."

அம்மாவிற்குக் கதைசொல்லி விட்டு, ஆணியில் கொழுவிக்கிடந்த பூப்பையை எடுத்துக்கொண்டு நண்பர்களின் வீட்டை நோக்கிப் புறப்பட்டேன்... எல்லோரையும் சாய்ச்சுக்கொண்டு ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று, பூக்களை ஆய்ந்துகொண்டு டினாவின் வீட்டுக்குப் போகும்பொழுது ஒன்பது மணியாகிவிட்டது. ஊர்கூடி அஞ்சலி செலுத்திக்கொண்டிருந்தார்கள். வித்துடல் வெளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தலில் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது. வித்துடல் சுமக்கும் போராளிகளின் ஜீப்வண்டி, சோடிக்கப்பட்டுப் புறப்பட ஆயத்தமாக இருந்தது. தாய், தந்தை, சகோதரர்கள், உற்றார், உறவினர்களென்று அனைவரும் பெட்டியில் அடித்து ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்தனர். நாங்கள் கொண்டு சென்ற மலர் மாலையை வித்துடல்பெட்டிக்கு மேலே வைத்து அஞ்சலி செலுத்தினோம். அளவான பூக்களை அஞ்சலிக்காகப் போராளி களிடம் கொடுத்துவிட்டு, எஞ்சியதைத் துயிலுமில்லம் கொண்டு செல்வதற்காக வாகனத்தில் வைத்துக்கொண்டோம். இறுதி நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. உற்றார், உறவுகள் என்று சனங்கள் திரண்டு அஞ்சலிகளைச் செலுத்திக்கொண்டிருந்தார்கள். தாய், தந்தையரின் இறுதி அஞ்சலிகளைத் தொடர்ந்து, போராளிகளின் இராணுவ மரியாதைகள் நிகழ்ந்தன. ஒப்பாரிச் சத்தங்கள் அதிகரித்து வானை அதிரச்செய்தன. எல்லோரது கண்களிலும் கண்ணீர் பெருகிக்கொண்டிருந்தது.

> "என்ர ஐயோ.. என்ர குழந்தேன்ர முகத்தை ஒருக்கா காட்டுங்கோவன். என்ர செல்லத்தின்ர முகத்தை நான் கடைசியாப் பாக்கோணும்.. என்ர அப்பு.. எங்கள விட்டிற்றுப் போகாதையப்பு.. என்ர செல்லக்குஞ்சு.. உன்னைப் பெத்து வளத்தது இதுக்கா... என்ர குழந்தேன்ர முகத்த ஒருக்கா காட்டுங்கோ.."

அவனது அம்மா, பெட்டியில் அடித்துப் புலம்பிக்கொண்டி ருந்தாள். அவனுடைய தந்தையார், பெட்டியைப் பிரித்தெடுத்துத் தன் மகனைப் பார்க்கத் துடித்துக்கொண்டிருந்தார்.

> "அண்ணா எங்கள விட்டிற்றுப் போகாதை யண்ணா.. நீயில்லாம எப்பிடியண்ணா நாங்க இருப்பம். உன்னப் பாக்கோணும்போல இருக் கண்ணா. திரும்பி வாண்ணா. ஐயோ கடவுளே என்ர அண்ணாவக் கொண்டு போகாதேங்கோ... எங்கட அண்ணாவ ஒருக்காத் திறந்து காட்டுங்கோ..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்துடல் பெட்டியைக் கட்டியணைத்துச் சகோதரர்கள் ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்தனர். அங்கு வந்தவர்கள் எல்லோரது இதயங்களிலும் சோகமே படிந்திருந்தது. வித்துடலைத் தூக்கிச் செல்லக் குடும்பத்தார் விடவேயில்லை. ஒப்பாரிக்கும், தள்ளுப்பாடுகளுக்கும் மத்தியில் போராளிகள், வித்துடலை வாகனத்தில் ஏற்றிக்கொண்டனர். சிகப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில், புலிக்கொடி போர்த்திய வண்ணம் வித்துடல்பெட்டி வைக்கப்பட்டிருந்தது. பெற்றோர் மற்றும் அவரது குடும்பத்தார், அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட வாகனத்தில் ஏற்றப்பட்டனர். உறவுகள், நண்பர்கள், அயலவர்கள் என்று அனைவரும் துயிலுமில்லம் செல்வதற்கு ஒழுங்கு செய்யப் பட்ட பேருந்தில் ஏறிக்கொண்டனர். புலிகள் அமைப்பிற்குரிய சோகக் கீதத்துடன் வித்துடலைத் தாங்கிய வாகனம், முள்ளிய வளைத் துயிலுமில்லம் நோக்கிப் புறப்பட்டது. வித்துடலின் கால்மாட்டின் இருபுறமும், மெய்ப்பாதுகாப்பு மரியாதைக்காக ஆயுதந்தரித்த போராளிகள் இருவர் அமர்ந்திருந்தார்கள். சோகக்கீதம் ஒலித்துக்கொண்டிருக்க, வித்துடல் தாங்கிய வாகனத்தின் பின்பு ஏனைய வாகனங்கள் பயணித்துக் கொண்டிருந்தன.

வீதிகளில் சனங்கள் பூத்தூவி அஞ்சலிகளைச் செலுத்திக் கொண்டார்கள். அஞ்சலிகளுக்கு மத்தியில் மெல்ல மெல்ல வித்துடல்தாங்கிய வாகனம் பயணித்துக்கொண்டிருந்தது. வீதி நீளத்திற்கும் மக்கள் நின்று அஞ்சலி செலுத்திக்கொண்டிருந்தனர். இதனால் சுமார் இரண்டரை மணித்தியாலப் பயணத்தின் பின் முள்ளியவளைத் துயிலுமில்லத்தை அடைந்தோம். அங்கு மீளவும் வித்துடலுக்கான இறுதி அஞ்சலியும், புலிகளின் இராணுவ மரியாதைகளும் நடைபெற்றன. புலிவீரர்களின் துப்பாக்கி வேட்டு சத்த மரியாதைகளுக்கு மத்தியில், புதைகுழியில் வித்துடல் விதைக்கப்பட்டது. "எங்கள் தோழர்களின் புதைகுழியில் மண்போட்டுச் செல்கின்றோம்" என்ற பாடல் ஒலித்துக் கொண்டிருக்கப் பெற்றவர்கள், உறவுகள், அயலவர்கள், தோழர்கள் என்று அனைவரோடும், வித்துடலுக்கு மண்தூவி நாம் விடைபெற்றுக்கொண்டிருந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சந்தனப் பேழைகளே!
இங்கு கூவிடும் எங்களின்
குரல்மொழி கேட்குதா? குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர் உங்களின்தோழர்கள்
உறவினர் வந்துள்ளோம்!
அன்று செங்களம் மீதிலே
உங்களோடாடிய தோழர்கள் வந்துள்ளோம்!
எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம்
காட்டியே மறுபடி உறங்குங்கள்!"

என்ற சோகப்பாடலொன்று அப்போது ஒலித்துக்கொண்டிருந்தது. தாய், தந்தையர், சகோதரர்கள் மண்ணிலே புரண்டு, மனம் வெடித்து அழுது தீர்க்க, கண்களில் நீர் சொரியச் சோகமே உறைந்துபோன முகத்துடன் விம்மி விம்மி அழுதபடி எல்லோரும் வெளியேறிய ஞாபகம் இன்றும் என் மனதில் ஆழமாய் பதிந்திருக்கின்றது. இன்று என் நண்பனை பார்த்தபோது பழைய நினைவுகள் மீளெழத் தொடங்கிவிட்டன. டினாவிடம் விடைபெற்றபடி பழைய நினைவுகளை அசைபோட்டுக்கொண்டு என் கூடாரத்தை நோக்கி நடக்கலானேன். கண்களில் கசியும் நீர்த்துளிகளை என் கரங்கள் அழித்துக்கொண்டிருந்தன...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் "சோன் பைவ்" முகாமிற்கு வந்து ஐந்தாறு மாதங்கள் ஆகிவிட்டன. மலசலகூடக்கழிவுகளை அகற்றுவதற்கான வாகனத்தை, முகாமுக்குள் அனுப்புவதற்கு இராணுவத்தினர் பின் நின்றனர். மலசல கூடங்களெல்லாம் நிரம்பி வழியத்தொடங்கின. இதனால், நிரம்பாத மலசலகூடங்களை நோக்கிச் சனங்கள் படையெடுத்ததனால் பழைய வரிசை நிலை மீண்டும் உருவானது. வரிசை சுமார் இருநூறு, முந்நூறு மீற்றர்கள் வரை நீடித்தது. வரிசையில் பொறுமைகாக்க முடியாதவர்கள், நிரம்பிய மலசலகூடங்களையே மீளவும் பயன்படுத்தத்தொடங்கினர். மலசலகூடங்களின் குழிகளின் மேல்விளிம்புப் பகுதிகளினூடாக மலங்கள் வெளியேறி அப்பகுதிகளில் நாற்றத்தை ஏற்படுத்தின. புழுக்கள் துடித்துக்கொண்டிருக்கும் வகையிலான மலசலநீர் வெளியேறி, அப்பகுதிகளில் இருந்த பள்ளங்களில் தேங்கிக் கொண்டது. எங்கு பார்த்தாலும் மலசல மணமாகவே இருந்தது. மக்களும் பிளக் விதானையாருக்கூடாக இராணுவத்தினருக்குப் பலமுறை தகவல் கொடுத்தும், எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. மக்களும் மலசலங்கள் வெளியேற வெளியேற அவற்றினைப் பயன்படுத்திக்கொண்டே இருந்தனர்.

இப்பொழுது கிச்சினில் உணவு வழங்கப்படுவதும் நிறுத்தப்பட்டுவிட்டது. ஒவ்வொரு குடும்பங்களுக்கும் குறிப்பிட்ட அளவு உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டு, அவரவருக்குத் தேவையான உணவுகளை அவர்களே தயார் செய்து சாப்பிடும் திட்டத்தினைக் கொண்டு வந்தனர். அதனால் நாங்கள் பெரிதும் பாதிப்படைய நேரிட்டது. முன்பு சமைத்த உணவு வழங்கப் பட்டதால் அதையே வாங்கி உண்டோம். இப்போது சமைப்பதற்கு அரிசி, மா, பருப்பு, உருளைக்கிழங்கு, எண்ணெய் உள்ளிட்டவையே வழங்கப்பட்டன. கறி வைப்பதற்குத் தேவையான தேங்காய், வெங்காயம், மிளகாய், பூண்டு, சின்னச் சீரகம், பெருஞ்சீரகம், கடுகு உள்ளிட்ட எந்தப்பொருட்களும் வழங்கப் படவில்லை. இதனால் கறியில்லாமல் வெறுஞ்சோற்றையே உண்டுவாழும் நிலைக்குத் தள்ளப்பட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காசிருக்கிற சனங்கள் நடமாடுற கூட்டுறவுக் கடையில சாமான வாங்கிச் சமைக்குங்கள்... காசில்லாத நாங்கள் எப்பிடிச் சமைச்சுச் சாப்பிடுற... எல்லாரையும் பட்டினி போட்டுக் கொல்லுற துக்குத்தான் எங்கள இப்பிடியே வைச்சிருக் கிறாங்கள்..."

இப்படித்தான் சனங்கள் எல்லாம் புலம்பிக்கொண்டு திரிந்தார்கள். எந்த நிறுவனங்களும் இப்போது சமைத்த உணவுப் பரிமாற்றத்தை நிறுத்திக்கொண்டன. அதனால் பெரும்பாலான கூடாரங்களில், வன்னியில், போர்க்காலத்தில் உண்டதுபோல் உப்புக்கஞ்சியையே காய்ச்சிக்குடிக்கலாயினர். அதுமட்டுமன்றிக் கூடாரங்களுக்கு மின்சார வசதிகள் ஏற்படுத்தாத நிலையே இருந்தது. சாதாரணதரப் பரீட்சை எழுதும் இளசுகள், கூடாரங்களுக்கு வெளியே போடப்பட்டிருந்த மின்குமிழ் வெளிச்சத்தில்தான், நிலத்தில் இருந்து குழுக்களாகப் படித்துக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு கூடாரத்திற்கும் வெளியில் மின்குமிழ் போடப்படவில்லை. ஆங்காங்கு ஐந்தாறு கூடாரங்களுக்கு இடையில் மின்குமிழ்கள் ஒளிரவிடப்பட்டிருந்தன. ஆனால் முகாம் எல்லைகளிலும், முள்வேலிக்காப்பரண்களிலும் மக்கள் வெளியேறிவிடாதபடி, நெருக்கமாக மின்குமிழ்கள் போடப்பட்டு ஒளிரவிடப்பட்டுக் கொண்டிருந்ததும் நினைவிலிருக்கிறது. எனக்கு இரவுநேரப் பார்வைக்கோளாறால் படிப்பதே இல்லை. இப்போது முன்பை விடச் சற்றுப் பார்வை தெளியத்தொடங்கியுள்ளதை உணர முடிந்தது.

காலங்களும் வேகமாகவே நகர்ந்துகொண்டிருந்தன. இம்முகாமிற்கு வந்து ஒருவருடமாகி விட்டது. இப்போதுதான் சொந்த ஊரில் மீள்குடியேற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளை இராணுவத்தினர் மேற்கொண்டு வந்தனர். முதலில் கிழக்கு மாகாண மக்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களைக் கொண்டு செல்வதற்கான பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருப்பதாக எல்லோரும் பேசிக்கொண்டார்கள். திருகோணமலையைச் சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பங்களின் பெயர் விபரங்கள், விதானையாரால் அறிவிக்கப் பட்டதை அடுத்து மீளவும் மூட்டைமுடிச்சுக்களைக் கட்டத் தொடங்கினோம். குறித்த நாளில் திருகோணமலைச் சனங்கள், பேருந்துகளில் ஏற்றப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டார்கள். ஒரு வருடகாலமாக ஓடியாடித்திரிந்த முகாமை விட்டுப் பயணப்பட்டுக் கொண்டிருந்தோம். எங்களோடு புதிதாகப் பழகிய நண்பர்கள், உறவுகள் என்று எத்தனையோ பேரைப் பிரிந்து செல்லவேண்டிய தாயிருந்தது. அன்றைய நாட்கள் பிரிவின் வலியை எமக்கு இயல்பாகவே ஏற்படுத்தியிருந்தன. ஆனாலும் எங்களின் சொந்த இடத்திற்குப் போகிறோம் என்ற மகிழ்ச்சி அதனைச் சற்றுத் மறக்கச் செய்தது. அடர்பெரும் காடுகளினூடாகப் பேருந்துகள் பயணித்துக்கொண்டிருந்தன. எனக்கு எங்களின் சொந்த இடத்தைத் தெரியாது. எப்படியிருக்கும் என்று அப்பாக்கள் பேசுகின்றபோதே கேள்விப்பட்டிருக்கின்றேன். மனதிலே, எங்களின் ஊர் இப்படி யிருக்குமா? என்று கற்பனைகள் தோன்றி மறைந்துகொண்டிருந்தன.

"அப்பா... அப்பா... எங்கட ஊர் எப்படியிருக்குமப்பா?..."

"ம்ம்... எங்கடயிடம் நல்லாயிருக்கும். மலை, கடல், ஆறு, குளம், காடு எண்டு எல்லாம் இருக்கு. எங்கட காலத்தில அந்த ஊரப்போல எங்கயும் பாக்கேலாது... இப்ப எப்படியிருக்கோ கடவுளுக் குத்தான் தெரியும்.."

அப்பா சொல்வதில் உண்மை புரிந்தது. அப்பாக்கள் இனப் பிரச்சினை முற்றிய காலத்தில் ஏற்பட்ட கலவரங்களால், திருகோணமலை திரியாய்க் கிராமத்தைவிட்டு, 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து முல்லைத்தீவுக்குச் சென்றனர். அதன்பின்பு ஒருக்காலும் சொந்த ஊருக்கு வரவேயில்லை. அதனால் ஊருடனான தொடர்பும் துண்டிக்கப்பட்டது. அப்பாவின் சொந்தங்களும் வன்னிப்பகுதியிலேயே வசித்து வந்தமையால் ஊர்ப் புதினங் களையும் அறியமுடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திரியாய் பொன் விளையிற பூமி... வயல்வெளிச் சோலைகளும், மாமரக் காடுகளும், விளாத்தி வெட்டைகளும், ஆறு, குளம், குட்டையெண்டு ஒரே வசந்தமாய்த்தான் இருக்கும்... மலையடி வாரங்களில் காட்டிறைச்சி, தேன்களுக்குக் குறைவே யில்லை.. எங்களுக்கெல்லாம் ஒரு காலத்தில திரியாய் வசந்தபூமியாய்த்தான் இருந்தது..."

என்று என்னுடைய அப்பம்மா முதல் அடிக்கடி சொல்வது ஞாபகத்தில் இருக்கிறது. அப்பம்மா பிறந்த பூமி திரியாய் என்பதால், அவவுக்கு அம்மண்மீது அளவு கடந்த பிரியம் இருந்தது. திரியாயில் ஓர் அழகான குளமொன்று, திரியாய் மலையடிவாரத்தில் இருந்ததாகவும், அதற்குத் திரியாய்க்குளம் என்று வழங்கியதாகவும், அத்திரியாய்க் குளத்திலிருந்து எடுக்கப்படும் தாமரைத்தண்டில் திரிசெய்து கோணேச்சரத்தில் விளக்கெரிக்கப்பட்டதால், இவ்வூர் திரியாய் என்று சொல்லப்பட்டதாகவும் அவர் கூறியிருக்கிறார். யானைகள், மான்கள், மரைகள், பறவைகள், காட்டு விலங்குகள் என்று இயற்கையின் கொடையாகவே அத்திரியாய்ப்பூமி விளங்கியதாக அப்பம்மா கூறியவை மனத்திரையில் படமாகவே விழத்தொடங்கின. ஊருக்குப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில் இருந்த எமக்கு, ஏமாற்றமே கிடைக்கப்போகிறது என்பதைப் பேருந்துக்குள் இருந்த யாரும் உணரவேயில்லை.

வவுனியாவுக்குள், ஒரு முஸ்லிம் பாடசாலை வாசலில் பேருந்துகள் சடுதியாக நிறுத்தப்பட்டு, எல்லோரும் பாடசாலை வளாகத்தினுள் பெயர்ப்பதிவுகளுடன் அனுப்பப்பட்டார்கள். பாடசாலை வளாகத்தினைச்சூழ முள்வேலி மற்றும் இராணுவக் காப்பரண் பாதுகாப்புக்கள் அமைக்கப்பட்டிருந்தன. உள்ளே செல்பவர்கள் வெளியேறாதபடி இராணுவக் கண்காணிப்புக்களும் நடைபெற்றுக்கொண்டிருந்தன. பாடசாலை மைதான வெளிகள் எங்கும் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அக்கூடாரங்களில் ஏற்கனவே சனங்கள் தங்கவைக்கப்பட்டிருந்தார்கள். அதுமட்டு மன்றி வகுப்பறைகளிலும் குடும்பங்கள் தங்கியிருந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது பேருந்துகளில் வந்த சுமார் இருபது, இருபத்தைந்து குடும்பங்களும் தங்குவதற்குக் கூடாரங்கள் இன்மையால், பள்ளிக்கூடத்தாழ்வாரப் பகுதிகளிலே தங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. திருகோணமலையில் மீள்குடியேற்றப்பட வேண்டியவர்கள், எல்லா முகாங்களிலிருந்தும் கொண்டுவரப்பட்டு இப்பள்ளிக்கூடத்தில் அடைக்கப் பட்டிருந்தார்கள். அதனால் எங்களின் சொந்தங்கள், வன்னியில் இருந்த உறவுகள், நண்பர்கள் என்று எல்லோரையும் இங்கு பார்க்க முடிந்தமை கொஞ்சம் சந்தோசத்தைத் தந்தது.

நாட்கள் நகர்ந்ததே தவிர, எங்களை ஊருக்குக்கொண்டு போவதற்கான எவ்வித அறிகுறிகளுமே தென்படவில்லை. இராணுவத்தினரால் எமக்கு இங்கு சமைத்த உணவே வழங்கப்பட்டுக்கொண்டிருந்தன. மதியம் ஓரிரு கறிகளுடன் சோற்றுப் பார்சல் தரப்படும். இரவிலும், காலையிலும் பாணும் பருப்புக்கறியுமே வழங்கப்பட்டன. அவற்றினை, பல மணிநேரம் நின்று வரிசையில் தூங்கியே வாங்கவேண்டிய நிலையிருந்தது. அதிகரித்த சனநெருக்கத்தினால் உணவுகள் கிடைப்பதென்பது இலகுவான காரியமாக அமையவில்லை. உணவு அட்டைப் பதிவுகளின்படியே வழங்கப்பட்டுக்கொண்டிருந்தன. வரிசையில் நின்று தூங்கிக் காலைச்சாப்பாடு வாங்குவதற்குள் பதினொரு மணியாகிவிடும். பின் மதியச்சாப்பாடு மாலை மூன்றரை, நான்கு மணியளவிலேயே கைக்குக் கிடைப்பதுண்டு. அந்தளவிற்குக் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகமானவையாகவே இருந்தன. அதிகரித்த சன நெருக்கத்தினால் விளையாடுவதற்கோ, பொழுது போக்குவதற்கோ எவ்வித இடங்களும் காணப்பட வில்லை. சிறிய அறைக்குள் பலநாட்கள் அடைக்கப்பட்டது போலவே வாழ்வு பயணித்துக்கொண்டிருந்தது. எங்களுக்குப் பொழுதுபோக் கென்பது, இங்கு சாப்பாட்டு வரிசையில் நிற்பதும், மலசலம் கழிப்பதற்காக வரிசையில் நிற்பதுமேயாகும்.

பள்ளிக்கூடம் என்றபடியால் இங்கு பெரிய இரண்டு கிணறுகள் அமைக்கப்பட்டிருந்தன. அதனால் தண்ணீர்ப்பிரச்சினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு அவ்வளவாகத் தெரியவில்லை. சுமார் முந்நூறு, நானூறு குடும்பங்கள், இம்முகாமுக்குள் இருந்திருப்பார்கள் என நினைக்கிறேன். நாங்கள் வந்து ஓரிரு கிழமைகளில் அங்கிருந்த மலசலகூடங்கள் நிரம்பி வழியத் தொடங்கின. நிரம்பி வழிந்தாலும், இராணுவம் அதனைக் கண்டு கொள்வதாக இல்லை. சனங்களும் நிரம்பிய மலசலகூடங்களையே தொடர்ந்தும் பாவித்துக் கொண்டிருந்தனர். மலங்களும், சலங்களும், புழுக்களும் வெளியேறிக்கொண்டேயிருந்தன. அவை பெருகி கூடாரங்கள் இருந்த பகுதிகளிலெல்லாம் சேறாகிக் கிடந்தன. துர்நாற்றம் வீசத்தொடங்கியது. சனங்களுக்கு இவ் நிகழ்வு, முன்னைய முகாங்களில் இயல்பாகவே பழக்கப்பட்டு விட்டதால், இங்கு அவை பெரும் பாதிப்புக்களைத் தந்ததாகத் தெரியவில்லை. அம்மலசலக் கழிவுகளுக்கும், நாற்றங்களுக்கும் மத்தியிலேயேதான் சாப்பிட வேண்டியிருந்தது. அதற்குள்ளால்தான் மலசலக்கழிவுகள் படாத வண்ணம், எட்டியெட்டிக் கால்வைத்து, மலசலங்கழிக்க வரிசைகளில் நிற்பதுமுண்டு. சுடுநீருக்குள் போடப்பட்ட நூடில்ஸ், எப்படிப்பொருமி, நெளிந்து காட்சிதருமோ அவ்வாறே மலசலக் கழிவுகள், துடிக்கும் புழுக்கழிவுகளாகவே வெளியேறுவதுண்டு. அவ்வளவு சனங்களுக்கும் சுமார் ஏழெட்டு மலசலகூடங்களே அமைக்கப்பட்டிருந்தன. அதுவும் தற்காலிகத் தகரக் கூடங் களாகவே அவை அமைக்கப்பட்டிருந்தன.

சனங்கள் ஆயிரம் தடவைகள் இராணுவத்தினரிடம் அறிவித்தும் பயனளிக்கவில்லை. இறுதியில் அம்மலசலக்கழிவுகள் இராணுவக் காப்பரண் பகுதிகள் வரை சென்றதால், இராணுவத்தினர் புதிய நடவடிக்கைகளில் இறங்கினர். நிரம்பிய அனைத்து மலசலகூடங்களையும் பூட்டினர். மலசலங்கழிக்க வந்தவர்களை வரிசையில் காத்திருக்க வைத்து, பெயரைப் பதிந்துவிட்டுப் பத்துப் பத்துப்பேராகப் பள்ளிக்கூட வளாகத் திற்குப் பின்னால், கண்ணுக்கெட்டிய தூரம்வரை பரந்திருந்த பற்றைக்காட்டுக்குள் மலங்கழிக்க அனுப்பினார்கள். ஒவ் வொருவரும் சிறிய தகர வாளிகளிலும், சிறிய கேன்களிலும், போத்தல்களிலுமே தண்ணீரை எடுத்துச்சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏய் எல்லாம் கேலுங்க. நீங்க அந்தக் காடுக்க ரொய்லெட் போய் வாறது. வேற எங்கும் போறது இல்லே. பத்துப் பத்து பேர்தான் போறது. பத்துப்பேர் போறது.. பொறவு அவங்க வாறது. பொறவுதான் பத்துப் பேர் போறது.. எல்லாம் ஒண்டா போறது இல்லே.. ஐசி தந்தா பொறவு பேர் பதிஞ்சு போறது..."

இராணுவ வீரனொருவனின் அறிவிப்புக்கள் எல்லோரது செவிகளிலும் விழுந்தன. பத்துப் பத்துப் பேராகவே வெளியில் போனார்கள். போன அந்தப் பத்துப்பேரும் திரும்பியவுடனேயே மற்றைய பத்துப்பேரும் போனார்கள். அவர்கள் வரும் மட்டும், ஏனையவர்கள் வரிசையில் காத்துக்கொண்டிருக்கும் நிலையே ஏற்பட்டது. போனவர்கள் நாலைந்து நிமிடங்களிலே வந்து விடுவார்கள். சற்றுத் தாமதமானால், இராணுவத்தினரின் விசாரிப்புக்கு ஆளாகவேண்டிய நிலையும் இருந்தது. இப்படியான வாழ்வின் கொடுமைகள் பலவற்றை, நாங்கள் இம்முகாமில் அனுபவித்ததை மறக்க முடியாது. இப்பள்ளிக்கூட முகாமில் சுமார் ஒன்றேகால் மாதங்கள் அடைத்துவைக்கப்பட்ட பின், பெயர்ப் பதிவுகளின் அடிப்படையில், மீளவும் பேருந்துகளில் ஏற்றப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டோம். அன்று மாலைக் கருக்கல் நேரம். பேருந்துகள் பயணித்துக்கொண்டிருந்தன. இப்போதாவது எங்களை ஊருக்குக் கொண்டு செல்வார்களா? என்ற எதிர் பார்ப்புடன் மனம் அலைந்துகொண்டிருந்தது. பார்க்கும் இடங்கள் எல்லாம் வெளிச்சங்களால் நிரம்பியிருந்தன. கடைகள், குடியிருப்புக்கள், காடுகள், மலைகள், ஆறுகள், குளங்கள், வயல் வெளிகள் எனப் பலவற்றைக் கடந்து சென்று கொண்டிருந்தோம். இரவாகி விட்டதால், நாம் பயணித்துக் கொண்டிருக்கும் இடங்களை மட்டிட முடியவில்லை. சுமார் மூன்று, நான்கு மணித்தியாலப் பயணத்தின் பின்பு பேருந்துகள் நிறுத்தப்பட்டன. எந்த இடம் என்றே தெரியவில்லை. பேருந்து ஜன்னல் களுக்குள்ளால் எல்லோரும் எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இது ஒரு குடியிருப்புப்பகுதி, வீதிகளில் சன நடமாட்டங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ந்துகொண்டிருந்தன. கடலலைகள் எழுந்து மடியும் சத்தமும் அருகில் கேட்டுக்கொண்டிருந்தது.

"இது குச்சவெளிப் பள்ளிக்கூடம். இந்தப் பள்ளிக் கூடத்திலதான் எங்களத் திருப்பியும் போடப் போறாங்கள் போலை கிடக்கு. இப்பிடியே எத்தின இடங்களில் கொண்டுபோய்ப் போட்டுச் சாகடிக்கப் போறாங்களோ தெரியா.. பேசாம வன்னியிலயே செத்திருக்கலாம்..."

யாரோ ஒருவர் புலம்பும் சத்தம் கேட்டு மறைவதற்குள், பேருந்தில் இருந்த அனைவரும் இறக்கப்பட்டுப் பள்ளிக்கூட வளாகத்திற்குள் அனுப்பப்பட்டோம். நேரம் இரவு ஒன்பதைக் கடந்து கொண்டிருந்தது. சந்திரன் எறித்துப் பால்போன்ற வெளிச்சத்தைப் பரப்பிக்கொண்டிருந்தான். வானத்தில் எண்ணுக்கணக்கற்ற நட்சத்திரங்கள் மின்னிக்கொண்டிருந்தன. இராக்குருவிகள், மிகத் தாழ்வாகப் பறந்து ஆங்காங்கிருந்த பெரிய மரங்களில் இரைதேடிக்கொண்டிருந்தன. கடற்காற்று சில்லென்று வீசிப் பள்ளி வளாகத்திற்குள் நின்ற வேம்புகளை அசைத்துக்கொண்டிருந்தது. இயற்கையின் வருடல்களை இரசித்தபடி சனங்களோடு சனங்களாய் பள்ளி வளாகத்தினுள் சென்றுகொண்டிருந்தேன். எங்களுக்கென மாணவர்களின் கலையரங்கப்பகுதி ஒதுக்கப்பட்டிருந்தது. சுமார் நாற்பதைம்பது குடும்பங்கள் இருக்கும் என நினைக்கிறேன். அன்றிரவு தந்த பாணையும் பருப்புக்கறியையும் சாப்பிட்டுவிட்டு நாளை என்ன நடக்குமோ? என்ற கேள்வியுடன் இரவுப்பொழுது கழிந்து கொண்டிருந்தது.

விடிந்ததும் விடியாததுமான அதிகாலைப்பொழுதில், எழுந்து விட்டேன். வீதியால் பொய்க்கொண்டிருந்த வாகனங் களையும், சனங்களையும் பார்த்துக்கொண்டிருந்தேன். இன்றுதான் இப்படிச் சனங்களையும், பொது நடமாட்டங்களையும் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. இந்தப் பள்ளியில்தான் முள்வேலிகளும், இராணுவ அரண்களும் எங்களைச் சூழவில்லை. ஆனாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத்தினர் உள்ளே வருவதும், போவதுமாகத்தான் இருந்தார்கள். புலனாய்வாளர்கள் வந்து சந்தேகத்திற்குரியவர்களை விசாரித்துக்கொண்டிருந்தார்கள். பதிவுகளை மேற்கொண்டிருந் தார்கள். சிலர் சந்தேகத்தின் பேரில் கொண்டுசெல்லப்பட்டார்கள். திருகோணமலையின் நிலாவெளி, குச்சவெளி, திரியாய் உள்ளிட்ட கிராமத்தைச் சேர்ந்த முகாம் மக்கள், இந்தப்பள்ளிக்கூடத்தில் தங்கவைக்கப்பட்ட செய்திகளை அறிந்து, அவர்களின் உறவுகள், வேலிக்கரைகளில் வந்து கதைத்துறவாடி உணவுப்பொருட்களைக் கொடுத்துச் சென்றார்கள். இவ்வாறு இரண்டு நாட்கள் இந்தப் பள்ளிக்கூடத்தில் தங்கவைக்கப்பட்டோம். மூன்றாம் நாள் அவ்வவ் கிராம சேவகர்கள் வரவழைக்கப்பட்டுப் பதிவுகளை மேற்கொண்ட பின், ஒவ்வொரு குடும்பங்களாக இராணுவ வாகனத்தில் ஏற்றப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டோம். எங்களைச் சுற்றி நாலா புறமும் ஆயுதந்தாங்கிய இராணுவவீரர்கள் நின்று கொண்டி ருந்தார்கள். எங்களின் வாகனத்திற்கு முன்னும் பின்னும் இராணுவ ஜீப்புக்கள் வந்துகொண்டிருந்தன. நாங்கள் ஒன்றுமே கதைத்துக்கொள்ள முடியவில்லை. பயத்தில் கடவுளை மனதுக்குள் வேண்டிக்கொண்டிருந்தேன். தங்கச்சியும் பயத்தில் அம்மாவின் மடிக்குள்போய் இருந்து கொண்டாள்.

> "அப்பா... அப்பா... எங்கயப்பா எங்களக்கொண்டு போறாங்கள்? வேற முகாமுக்குள்ள எங்கயும் கொண்டுபோய் போடப்போறாங்களாப்பா....?"

அருகில் நின்றுகொண்டிருந்த இராணுவ வீரர்களுக்குக் கேட்காத வண்ணம் அப்பாவிடம் மெதுவாகக் கேட்டேன்.

> "என்ன கோதாரியோ தெரியாடாப்பா... திரியாய்ப் பக்கம்தான் கொண்டுபோறாங்கள் போல கிடக்கு. என்ன நடக்கெண்டு இருந்து பாப்பம். பேசாம இரு கொஞ்சநேரம்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவும் பயத்தில் அமைதியாகப் பதிலளித்துவிட்டு, வாகனப் பெட்டி இடுக்குகளுக்குள்ளால் வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தார். நானும் குந்தியிருந்தபடி கண்ணுக்குத் தெரியும் காட்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்தேன். வீதியில் மிக வேகமாகவே இராணுவ வாகனங்கள் பயணித்துக்கொண்டிருந்தன. வீதியின் இருகரைகளிலும் ஓங்கி வளர்ந்த பெரும் பற்றைக் காடுகளும் தென்பட்டன. மலைகளையும், ஆறுகளையும் கடந்து பயணித்துக்கொண்டிருந்தோம். சுமார் அரை மணித்தியாலப் பயணத்தின் பின் வாகனம் பிரதான பாதையிலிருந்து விலகிச் சிறிய கிரவல் வீதியில் பயணிக்கத் தொடங்கியது.

“திரியாய்.. திரியாய்க்குள்ளதான் கொண்டு போறாங்கள்..”

அப்பாவின் வார்த்தைகள் எங்களுக்குச் சற்று ஆறுதலைத் தந்தன. எங்கு பார்த்தாலும் பெரும் பற்றைக்காடுகளே தென்பட்டன. எந்தவொரு சன நடமாட்டத்தையுமே காணவில்லை. கண்ணுக் கெட்டிய தூரங்களில் ஓரிரு வீடுகளும் தென்பட்டன. இப்போது வாகனங்கள் திரியாய் பள்ளிக்கூடத்தைத் தாண்டி, சிறிய மணல்பாதையில் பயணிக்கத்தொடங்கியது. தொடரணியாய்ச் சென்ற வாகனங்கள் ஓரிரு நிமிடங்களில் பெரிய இலுப்பை மரத்திற்குக் கீழ் நிறுத்தப்பட்டன. எட்டிப்பார்த்தேன் பெரும் காட்டுக்குள் வந்ததுபோல் உணர்வு. அக்காட்டுக்குள்ளால் உச்சியில் வகிடு பிரித்ததுபோல் அந்த மணற்பாதை சென்றுகொண்டிருந்தது.

“ஏய் எல்லாம் கீல வாங்க... ஒங்கட ஊருக்கு நாங்க வந்தது.... கீல இறங்குங்க...”

இராணுவ வீரனின் சத்தத்தையடுத்து எல்லோரும் கீழே இறங்கி னோம். மனதுக்குள் பயம் படர்ந்துகொண்டது. அதற்கிடையில் இன்னுமொரு வாகனத்தில் சிலர் வந்து இறங்கினார்கள். அவர்களில் ஒருவர் போட்டிருந்த வெள்ளைச்சட்டை, அவர் விதானையார் என்பதை அடையாளப்படுத்தியது. எங்களுடைய சமான்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தும் இராணுவத்தினரால் கீழே இறக்கிவைக்கப்பட்டன. மீளவும் ஏதோ பதிவுகளை எடுத்துக்கொண்டு, விதானையாரிடம் எங்களை ஒப்படைத்து விட்டு இராணுவத்தினர் வெளியேறிக் கொண்டனர். இப்போதுதான் மனதுக்குள் ஒரு நிம்மதி கலந்த மகிழ்ச்சி. விதானையாரும் தன்னுடைய பங்கிற்குத் தானும் பதிவுகளை மேற்கொண்டார்.

"ஐயா...உங்கள மீள்குடியேற்றம் செஞ்சிட்டாங்க... அந்தப் பத்தைக்க தெரியிற மாமரக்காணிதானே ஐயா உங்கட காணி.... உங்களுக்குரிய உலருணவுகளும், தறப்பாழ், மண்வெட்டி, கோடாலி, கத்தியெல்லாம் இருக்கையா... உங்கட காணிய அடையாளங்கண்டு, காட்டை வெட்டிக் கொட்டிலப் போட்டிற்று இருங்கோ... நாங்கள் பாக்க வருவம். நிறுவனங்கள் ஏதும் சாமான்கள் தந்தால் கொண்டுவந்து தருவம் ஐயா... காட்டு மிருகங்கள் வாறாதால தீவறையளப் போட்டிற்று இருங்கையா... பள்ளிக்கூடத்தடியில இன்னொரு குடும்பம் வருகுது நாங்கள் வெளிக்கிடுறம் ஐயா..."

விதானையார், தான் வந்த வாகனத்தில் ஏறிப் புறப்பட்டார். எங்களுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை... திரும்பிப் பார்க்கும் இடமெல்லாம் பெரும் பற்றைக்காடுகளே வளர்ந்து இருந்தன. இதெல்லாம் அந்தக்காலத்தில் குடிமனைகள் இருந்த இடம்மென்பதை இடைக்கிடையே தெரியும் பெரும் மாமரங்கள் உறுதிப்படுத்தின. இலுப்பை மரத்திற்குக் கீழே, தறப்பாழை விரித்துவிட்டு அதற்குமேல் சாமான்களை வைத்துக்கொண்டோம். அதிலே சற்று இளைப்பாறினோம். சற்று நேரத்தின்பின் அப்பா, கேனிலிருந்த தண்ணீரைக் குடித்துவிட்டு எழுந்து சென்றார்.

"எங்கயப்பா போறியள்? நில்லுங்கோ நானும் வாறன்"

அப்பாவின் பின்னால் ஓடினேன். காலிலே ஏதோ மிதிபட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா... இதென்னப்பா இந்தச் சாணிபுள்ளா பனங் கொட்டையாக் கிடக்கு... சீ..."

"தம்பி இதுதானடா யானை இலத்தி..."

"என்னப்பா யானை இலத்தி எண்டா?"

"யானை இலத்தியெண்டா, யானைட சாணி தம்பி... யானைக்காட்டுக்குள்ளதான் தனியக் கொண்டு வந்து விட்டிற்றுப் போயிருக்காங்கள்..."

என்று சுற்றியிருந்த பற்றைக்காட்டை ஏறெடுத்துப் பார்த்துக் கொண்டார். இந்தக் காட்டுக்குள் நாங்கள் மட்டுமே நிக்கிறோம் என்ற பயம் ஒருபுறம் இருக்க, "இண்டைக்கு இரவைக்கு யானையெல்லாம் பாக்கலாம்" என்று மனதுக்குள் நினைத்துச் சந்தோசப்பட்டேன்.

"உதுதான் நாங்களிருந்த காணி... இருபத்திரண்டு வருசமாப்போச்சு. எல்லாம் பத்தை மூடிப்போய்க் கிடக்கு. அந்த மாமரம்தான் எங்கட முத்தத்தில நிண்டது.. அது எல்லாம் ஒரு வசந்த காலமப்பு.. அக்கம் பக்கமெண்டு ஒரே வீடுகளும் சனங்களும் தான்.. இப்ப ஒரு ஈக்காக்காவக் கூடிகாண முடியேல்ல. இப்படியே இருந்தா சரிவராது. எணே, வரேக்க அந்த கத்தி, மண்வெட்டியளக் கொண்டாணே..."

தான் பிறந்த மண்ணின் வாசத்தோடு நெஞ்சை நிமிர்த்தியபடி, அப்பா காடுவெட்டத் தயாராகிவிட்டார். அம்மா மண் வெட்டியையும், கத்தியையும் எடுத்துக்கொண்டு வருவதற்குள் நானும் ஓடிச்சென்று கோடாரியை எடுத்துக்கொண்டேன். அம்மாவின் சட்டையைப் பிடித்தபடி பயத்தில் தங்கச்சியும் வந்து கொண்டிருந்தாள். கத்தி, மண்வெட்டிகளை வாங்கிக்கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா, காணியை அடையாளங்கண்டு காட்டைவெட்டி வெளியாக்கத் தொடங்கினார். அங்கிருந்த பனைமரக் காவோலை களைக் குவித்துவிட்டு அம்மா நெருப்பு வைத்துக்கொண்டிருக்க, மரங்கள் வெட்டும் சத்தத்திற்கும், பற்றி எரியும் காவோலை நெருப்புக்கும் அஞ்சி, மாமரத்தில் இருந்த குரங்குகள் அங்கு நின்ற மரங்களில் தாவிக்குதித்தபடி பதறிப் பாய்ந்தன. குரங்குகளைக் கண்ட நான் புளுகத்தில் அவற்றை விரட்டிக்கொண்டு, அந்த காட்டு வீதிவழியாக ஓடினேன். சில்லென்ற தென்றல் காற்று என்னை வாரியணைத்து முத்தமிட்டுக்கொண்டது. திடீரென்று பாரிய சத்தம். ஓடுவதை நிறுத்திவிட்டுச் சத்தம் வந்த திசைநோக்கித் திரும்பிப் பார்த்தேன்.. பெரிய காட்டுயானையொன்று வாலைச்சுட்டிப் பிளியபடி என்னை நோக்கி வந்தது...

"ஐயோ அப்பா.. யான அப்பா.. யான..."

பெரிய சத்தத்துடன் குளறியபடி அப்பா, அம்மா நிற்கும் திசைநோக்கி ஓடிவந்தேன். என் தைரியத்தையெல்லாம் ஒன்று சேர்த்து வேகமாக ஓடினேன். முடியவில்லை. திரும்பிப் பார்த்தேன். பெரும் இருண்ட அந்த மலையுருவம் எனக்கருகில் வந்துவிட்டது.

"என்ர கதை சரி. நான் தப்பமாட்டன். நான் இல்லாட்டி என்ரையம்மா அப்பா, தங்கச்சி யெல்லாம் என்ன செய்வினம்?... கடவுளே உலகளந்தவா என்னக் காப்பாத்தப்பா"

என்று மனதுக்குள் நினைத்தவண்ணம் கண்களை மூடிக்கொண்டு ஓடினேன். என் உடல் யானையின் தும்பிக்கைக்குள் அகப்படுவது போன்ற உணர்வு... கால்கள் ஓடுவதை நிறுத்திக்கொண்டன... கண்கள் இருண்டு வெளிச்சத்தை மறைத்துக்கொண்டன. ஆனாலும் உயிர் இன்னும் போகவில்லை என்பதற்கு அறிகுறியாய் இதயம் படபடவென்று அடித்துக்கொண்டிருந்தது. "அப்பா..." என்று மீண்டும் குளறியபடி மூடிக்கிடந்த கண்களைத் திறந்து பார்த்தேன். அப்பாவின் கரமொன்று என்னைத் துதிக்கைபோல் தூக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைத்துக் கொண்டிருக்க, மறுகரத்திலிருந்த காவோலை ஒன்று விளாசிப் பற்றியெரிந்து தீப்பொறிகளைக் கக்கிக் கொண்டிருந்தது...

"அப்பா வேணாமப்பா.. வாங்கப்பா அந்த முகாமுக்கே போவம்...எனக்கு இஞ்சயிருக்கப் பயமாயிருக்கப்பா... வாங்கப்பா எல்லாரும் அந்தச் சிறைமுகாமுக்கே போவமப்பா"

என்று குமிறிக் குமிறி அழுதபடி, என் இருகரங்களால் அப்பாவை இறுகத் தழுவிக்கொள்ள, என்னுயிர் அமைதியிழந்து எங்கேயோ பயணப்பட்டுக்கொண்டிருந்தது.

****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரையிலிருந்து...



இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்றதுடன் தமிழ்த் துறையில் உதவி விரிவுரையாளராகவும் பணி யாற்றிய அனுபவம் பெற்றவர். நாவல், கவிதை என அவரது ஆக்கங்கள் உள்நாட்டு வாசகர்களுக்கு மட்டுமன்றி வெளிநாடுகளில் வாழும் இலக்கிய ஆர்வலர்களுக்கும் அறிமுகமாகின. அந்த வரிசையில் தற்போது வெளிவருவது 'ஆறாத வடு' என்னும் தலைப்பிலான அவரது கதைகூறும் இலக்கியம். இது கதை கூறுபவனின் வரலாறு போலவே ஆரம்பித்தாலும் ஒரு இனத்தின் வரலாறாகவும், தனியொருவனுக்கு ஏற்பட்ட காயத்தின் வெளிப் பாடில்லாமல் ஒரு இனத்திற்கு ஏற்பட்ட ஆறாத வடுக்களின் வெளிப் பாடாகவுமே அமைகின்றது.

2009 வைகாசி பதினெட்டாம் நாள் - அன்றுதான் முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுற்றதாக அறிவிக்கப்பட்ட நாள். அந்த நாளிலிருந்துதான் கதை ஆரம்பிக்கின்றது. இது தோற்றுப்போனவர்களின் வரலாறாக இருந்தாலும் வெற்றி எது என்பதைக் கண்டு தெரிந்துகொள்ள இதுபோன்ற படைப்புக்கள் இன்னும் வெளிவர வேண்டும். முருகையா சதீஸின் முயற்சி பாராட்டப்பட வேண்டியது. உனது எழுத்துக்களுக்காக வாசகர்கள் காத்திருப்பார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. எழுது... எழுது... எழுதிக்கொண்டேயிரு. எதிர்காலம் உனதாகட்டும். வாழ்த்துக்கள்.

**பேராசிரியர். ம. இரகுநாதன்,**
சிரேஷ்ட பேராசிரியர்,
தலைவர் - தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ISBN 978-624-99407-3-4
9 786249 940734

Guru Printers. 021 221 4777

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org